கொழுமம் - குமரலிங்கம்
ஐவர் மலை

ஆசிரியர்

முனைவர் தி. மனோன்மணி

பதிப்பாசிரியர்

முனைவர் சீதாராம் குருமூர்த்தி இ.ஆ.ப.

முதன்மை ஆணையர்

வெளியீடு

தொல்லியல்துறை தமிழ்நாடு அரசு, சென்னை 600 008

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Kolumam Kumaralingam Aivarmalai
Auhtor	:	T. Manonmani
Copy right	:	Tamilnadu State Department of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	185
Year	:	2007
Type Point	:	11 point
Number of Pages	:	x + 120
Paper used	:	80 Gsm. Maplitho
Type Setter	:	**Pavai Printers (P) Ltd.,** #16, Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014. Ph: 28482441, 28482973
Printed at	:	**TAMCOS** Royapettah, Chennai - 600 014.
Publisher	:	**State Department of Archaeology** Tamil Valarchi Valagam Halls Road, Egmore- 600 008.
Price	:	**Rs. 38/-**

கொழுமம் - குமரலிங்கம் ஐவர்மலை

ஆசிரியர்
முனைவர் தி. மனோன்மணி

பதிப்பாசிரியர்
முனைவர் சீதாராம் குருமூர்த்தி இ.ஆ.ப.,
முதன்மை ஆணையர்

வெளியீடு
தொல்லியல் துறை
தமிழ்நாடு அரசு
சென்னை - 600 008

2007

கோவை மற்றும் மதுரை மாவட்டங்களைச் சார்ந்து உள்ளன. ஊர், கோயில், கலைகள் என அனைத்தும் காலவாரியாகச் சிறப்பாகத் தொகுக்கப்பட்டுள்ளன. கொங்கு நாடு, கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள், அவற்றின் தனித்தன்மைகள் பற்றி அறியும் வகையில் பல செய்திகளை இந்நூல் கொண்டுள்ளது.

எனவே ஆய்வு மாணவர்களும், வரலாற்று ஆர்வலர்களும் பொதுமக்களும் இந்நூலைப் படித்து வரலாற்றினைப் பாதுகாப் பதோடு எதிர்காலச் சந்ததியினருக்கும் வரலாற்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே என் ஆவல்.

22-02-07 **சீதாராம் குருமூர்த்தி**

சென்னை முதன்மை ஆணையர்

பதிப்புரை

ஒரு நாட்டின் நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளைக் காலங் காலமாகக் கூறிவருபவை அவ்வக்கால மக்கள் விட்டுச் சென்ற தொல் பொருட்களும், கலைச்செல்வங்களுமே. அந்த வகையில் பொதுவாக இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் நம் முன்னோர் தம் பதிவுகளாக நாம் காண்பவை கோயில்கள். இக்கோயில்கள் சமய வரலாற்றை மட்டும் நமக்கு எடுத்துக் கூறவில்லை. ஒரு சமுதாயத்தின் நாகரிக, கலை, பண்பாட்டு வரலாற்றை நேர்முகமாக விளக்கும் வகையில் கல்வெட்டுகள், சிற்ப, ஓவிய, கட்டடக் கலைகள், அவ்வக்கால மக்களின் பண்பாட்டு நெறிகள் என அனைத்தையும் அங்கே பொதிந்து வைத்திருக்கின்றது. எனவே தான் இத்தகு பண்பாட்டுச் சின்னங்களைப் பாதுகாப்பது மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை உலக மக்களுக்கு எடுத்துக் கூறுவது நமது கடமையாகிறது.

இவ்வகையில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை ஓராண்டு முதுநிலைப் பட்டயப் பயிற்சியினை இளம் மாணவர் களுக்கு அளித்து அப்பயிற்சியின் நிறைவில் ஒவ்வொரு மாணவரும் ஒரு கோயிலை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, ஆய்வேடு சமர்ப்பிக்கப்படுகிறது. வரலாறு, கலை, சமுதாயம் பற்றிய அனைத்தும் அதில் செறிவாகக் கூறப்பட்டிருக்கும். பொதுமக்களும் மாணவர்களும் பயனுறும் வண்ணம் அவற்றை அவ்வப்போது துறை, நூலாக வெளியிட்டு வருகின்றது.

1976- 77 ஆம் ஆண்டு பட்டயப் பயிற்சி பெற்ற மாணவி தி. மனோன்மணி எழுதிய கொழுமம், குமரலிங்கம் ஐவர்மலை என்ற தலைப்பிலான கோயில் வரலாற்று ஆய்வேடு மூன்று கோயில்களை உள்ளடக்கி எழுதப்பட்டுள்ளது. சிறப்பான முறையில் எழுதப்பட்டுள்ள இந்நூலுக்கு மையப் பொருளாக உள்ள கோயில்கள் ‘கொங்கு நாடு’ என்று அழைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிகு பகுதியில் இருந்துள்ளன. தற்போது

முன்னுரை

1976 ஆம் ஆண்டு ஆகஸ்ட் ஆறாம் நாள் என் வாழ்க்கையில் திருப்பமாய் அமைந்த நாள் என்றுதான் சொல்ல வேண்டும். தொல்லியல் ஆய்வுத்துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் சேர்ந்து பயின்றது பெரும் பேறு என்றே கருதுகிறேன். இத்துறையில் சேர்ந்தபின் கல்லூரி வாழ்க்கையில் கற்றதை விட அதிகம் கற்றேன். எதையும் ஊன்றிப் படிக்கும் மனப்பக்குவம் ஏற்பட்டதும் இங்குதான்.

கல்வெட்டுப் பயிற்சியின் ஓர் அங்கமான கோயில் ஆய்வுக்குக் கொழுமம், குமரலிங்கம் கோயில்கள் பற்றி எழுத வேண்டும் என்ற ஆர்வ மேலீட்டால் தொல்லியல் துறை அளித்த பயிற்சியின் காரணமாக இக்கோயில்களை ஆய்வு செய்ய முயற்சி செய்திருக்கிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க ஐவர்மலை பற்றியும் ஒரு கட்டுரை எழுதிச் சேர்த்திருக்கிறேன். கோயில் அமைப்பு, சாசனம் பற்றியும் சிற்பங்கள் பற்றியும் எழுதியுள்ளேன். இந்த மகத்தான பணியைச் செய்வது எவ்வளவு கடினம் என்பது இந்தப் பணியில் ஈடுபட்டபோதுதான் புரிந்தது. நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட நம் நாட்டுக் கோயில்கள் பற்றி ஆய்வு செய்யக் கிடைத்த அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

இந்த ஆய்வு நூல் தொடர்பாக, முதற்கண் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருப்பது தொல்லியல் துறையின் முன்னாள் இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி அவர்களுக்குத்தான். இக்கோயில் பற்றி எழுதும்படி என்னைப் பணித்த அவருக்கு என் பணிவான நன்றியினை உரித்தாக்குகிறேன். இவ்வாய்வு நூலை எழுத உதவி புரிந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் தொல்லியல் துறையின் முன்னாள் பதிவு அலுவலர் திரு. ர. பூங்குன்றன் ஆவார். அவருக்கு என்னுடைய அன்பான வணக்கங்கள். ஆண்டுகள் பல கடந்

தாலும் எனது ஆய்வேட்டை நூல் வடிவில் கொண்டு வருவதற்கு முயற்சிகள் செய்த துறையின் முன்னாள் சிறப்பு ஆணையர் திரு. தி. ஸ்ரீ. ஸ்ரீதர் அவர்களுக்கும், முதன்மை ஆணையர் முனைவர் சீதாராம் குருமூர்த்தி அவர்களுக்கும் எனது பணிவான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலைச் செறிவாகச் செப்பம் செய்து நிழற்படங்களுடன் சிறப்பாக வடிவமைத்து நூலாக்கம் செய்தளித்த கல்வெட்டாய்வாளர் திருமதி அர. வசந்தகல்யாணி அவர்களுக்கும் அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து உதவி புரிந்த கல்வெட்டாய்வாளர் முனைவர் சு. இராஜகோபால் அவர்களுக்கும் என் நன்றியினை உரித்தாக்குகிறேன்.

- தி. மனோன்மணி

முன் அட்டையில்:

அமராவதி ஆறு - கொழுமம் சோழீஸ்வரர் கோயில் கருவறைத் தோற்றம்.

பின் அட்டையில்:

ஐவர் மலை - தீர்த்தங்கரர் சிற்பங்கள்
(தொல்லியல் துறை யின்கீழ் பாதுகாக்கப்பட்ட சின்னம்)

உள்ளே ...

	பதிப்புரை	v - vi
	முன்னுரை	vii - viii
1.	ஊர் வரலாறு	1
2.	கொங்கு நாடு	7
3.	ஐவர் மலை	13
4.	கொழுமம் வீரசோழீஸ்வரர் கோயில் கல்யாணவரதராஜப் பெருமாள் கோயில்	24
5.	குமரலிங்கம் கரியவரதராஜப் பெருமாள் கோயில்	30
6.	செப்புத் திருமேனிகள்	31
7.	சிற்பங்கள்	36
8.	விழாவும் கோயில் வழிபாடும்	44
9.	கல்வெட்டுச் செய்திகள்	52
10.	சமுதாய நிலை	86
11.	கல்வெட்டு வாசகங்கள் சில	95

1. ஊர் வரலாறு

கொழுமம், குமரலிங்கம் ஆகிய இரு ஊர்களும் அங்குள்ள கோயில்களும், தொல்லியல், கல்வெட்டியல் மற்றும் கட்டடக் கலைச்சான்றுகள் ஆகிய வரலாற்று ஆதாரங்களின் அடிப்படை யில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. ஊர், கோயில் ஆகியன வரலாற்றுப் போக்கில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அவற்றைக் காண்போம்.

கொழுமம்:

கொழுமம் எனும் ஊர்ப்பெயர் குழுமூர், கொழுமம் என்று இலக்கியங்களில் கூறப்படுகின்றது. கொழுமத்தைக் கடையேழு வள்ளல்களில், ஒருவனான குமணன் தலைநகராகக் கொண்டு ஆண்டதாகவும் அதனால் இவ்வூர் குமணபுரி, குமணநகர் என்று வழங்கியதாகவும் பின்பு குழுமூர் என்றானதாகவும் கூறுவர். அகநானூறு (பாடல் 168)

'' பல்லான் குன்றிற் படுநிழற் சேர்ந்த
நல்ஆன் பரப்பிற் குழுமூர் ஆங்கண்
கொடைக்கடன் ஏன்ற கோடா நெஞ்சின்
உதியன் ....

என்று கூறுகின்றது. பின்னர் காலப்போக்கில் குழுமூர் என்ற பெயர் கொழுமம் என்று பெயர் பெறுவதாயிற்று. கல்வெட்டுக் குறிப்புகளைப் பார்க்கும் போது ஐவர்மலையில் உள்ள 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ''கொழுமம்'' என்று குறிப் பிடுகின்றது. வீரசோழீசுவரர் கோயிலிலுள்ள 12 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் கரைவழி நாட்டுக் கொழுமம் என்றும், கரை வழி நாட்டுக்குப் குழுமம் என்றும் இனாம் சங்கிராம நல்லூர்க்

குழுமம் என்றும் குறிக்கின்றன. இக்கோயிலில் உள்ள பிற்காலக் கல்வெட்டுகளும் கரிய வரதராஜப் பெருமாள் கோயிற் கல்வெட்டு களும் இந்த ஊரின் பெயரைக் கொழுமம் என்று குறிப்பிடு கின்றன.

இவ்வூரின் பெயர்களுள் ஒன்றான சங்கிராம நல்லூர் என்பதில் சங்கிராமம் என்பதற்குப் போர் என்ற ஒரு பொருள் உண்டு என்பதால் இவ்வூர் போர் நடந்த இடமாக இருந்திருக்க லாம். அதன் காரணமாகச் சங்கிராம நல்லூர் என்ற பெயரும் ஏற்பட்டிருக்கலாம்.

மற்றும் இவ்வூருக்கு விக்கிரமசோழ நல்லூர், வீரநாராயண நல்லூர், கேரளகேசரி நல்லூர், உமாபரமேஸ்வரி நல்லூர், கீழ்க்கல்லாபுரம், திருவளர்துறை, அகரம்புத்தூர், தென்னூர் என்ற பெயர்களும் வழங்கியதைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

மேலும் திரு. நாராயணசாமி என்பவர் சோழீஸ்வரர் திருத்தல புராணத்தில் இத்தலத்தின் தலைமைக் கிராமமாகிய இனாம் சங்கராம நல்லூர் பழமையில் பேரூராக இருந்து அழிந்து விட்டதென்றும், அழிந்துபோன அல்லூர் சதுர்வேதிமங்கலம் மாதவச் சதுர்வேதிமங்கலம் விக்கிரமச் சதுர்வேதிமங்கலம் உல குடைய பிராட்டியார் சதுர்வேதிமங்கலம் என்ற பெயர்களைப் பெற்று அந்தணர் அக்கிரகாரங்களாக விளங்கிக் கொண்டிருந்தன என்றும் கூறுகின்றார்.

குமரலிங்கம்:

குமரலிங்கம் என்ற பெயரைப் பார்க்கும்போது குமண லிங்கம், குமரலிங்கமாக மாறியது என்று கூறுவர். ஆனால் அவ்வாறு கொள்ளுதல் சரியாக இராது. மொழி அடிப்படையில் 'ண' 'ர' வாக மாற வழியில்லை.

கல்வெட்டுச் சான்றுப்படி குமரலிங்கத்தின் பண்டைய பெயர் இது. சில கல்வெட்டுகளில் குமரங்கபீம சதுர்வேதி மங்கலம், குமரங்கவியமச் சதுர்வேதிமங்கலம், ஸ்ரீ குமரங்கபீமனான பரிதாரசகோதர சதுர்வேதிமங்கலம் என்று வருகின்றது. இப்பெயர்கள் என்ன காரணம் பற்றிக் கூறப்படுகின்றன என்று தெரியவில்லை.

ஊர்களின் அமைப்பு:

கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டத்தில், உடுமலையிலிருந்து பழநி செல்லும் நெடுஞ்சாலையில் அமைந் துள்ளன கொழுமம், குமரலிங்கம் ஆகிய ஊர்கள். இவ்வூர்கள் முற்காலத்திய கொங்கு நாட்டின் 24 பிரிவுகளில் ஒன்றான கரைவழி நாட்டில் ஆம்பிராவதி நதிக்கரைக்கு வடக்கில் குமர லிங்கம், தெற்கில் கொழுமம் என அமைந்திருந்தன.

குமரலிங்கம்:

உடுமலையிலிருந்து தென்கிழக்காக சுமார் 13 கி.மீ. தொலை விலும், பழநியிலிருந்து மேற்காக சுமார் 21 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

குமரலிங்கத்தை மேற்கு குமரலிங்கம் என்றும் கிழக்குக் குமரலிங்கம் என்றும் இரண்டு பிரிவாகப் பிரித்துள்ளனர். குமரலிங்கத்திலிருந்து சுமார் 1/2 கி.மீ மேற்காக இருப்பது ராஜவாய்க்கால் ஆகும். குமரலிங்கத்தில் பல பெருமாள் கோயில் கள் உள்ளன. எனவே வைணவர்களை அதிகம் கொண்டுள்ளது.

கொழுமம்:

கொழுமம் பழநியிலிருந்து சுமார் 19கி.மீ. மேற்காகவும் உடுமலையிலிருந்து தென்கிழக்காக சுமார் 13 கி.மீ. தொலை விலும் உள்ளது. மதுரையிலிருந்து கோவை மாவட்டம் பிரியும் எல்லைக் கோட்டை அடுத்துள்ள குதிரையாற்றின் கிழக்குக் கரை மேட்டில் தான் முன்பு கொழுமம் இருந்துள்ளது. ஒரு காலத்தில் அம்மேட்டில் சுமார் அரைமைல் தூரத்தில் உள்ள தேவரடியாள் குளம் பெருகி வெள்ளத்தால் உடைப்பெடுத்து ஊரை அழிவுப்படுத்தியதென்றும் கூறுவர். அது கொண்டே கொழுமம் குளத்தோடும் குமரலிங்கம் ஆற்றோடும் என்று கூறும் பழமொழி வழங்கத் தொடங்கியதென்றும் கூறப்படுகின்றது. வெள்ளத்தின் அழிவுக்குப் பின்னரே கொழுமம் இப்பொழுதுள்ள இடத்தில் புதுக்கப்பட்டதாம். பழைய கொழுமத்தில் தற்போது விநாயகர் கோயிலும், அனுமந்தராயன் கோயிலும், கஸ்தூரியம்மன் கோயிலும் உள்ளன. கொழுமம் தென்கொங்கின் தலைநகராய்

வளம் மிகுந்த ஊராக இருந்துள்ளது. அமராவதி ஆறு, குதிரையாறு ஆகிய இரண்டும் பாய்ந்து வளம் சேர்க்கின்றன. இனி இவ்வூரி லுள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பகுதிகளைக் காண்போம்.

கோயில்கள்

இவ்வூரில் சோழீஸ்வரர் கோயில், கல்யாண வரதராஜப் பெருமாள் கோயில் ஆகியன உள்ளன.

பீரங்கிமேடு:

சோழீஸ்வரர் ஆலயத்தின் தென்கிழக்குப் பகுதியில் பீரங்கி மேடு உள்ளது. இந்த வழியாகத் திப்புவைத் துரத்திக் கொண்டு சென்றனர் என்பதும் அவர்கள் இங்குள்ள கோட்டையில் பீரங்கி களை வைத்துப் பயன்படுத்தியிருக்கலாம் என்பதும் செவிவழிச் செய்தி. ஆகவே இது பீரங்கிமேடு என்று பெயர் பெற்றது.

மாவடியான் கோயில் செல்லும் வழியில் உள்ள காட்டுப் பகுதியில் உள்ள சிறு கூடாரம் போன்ற பகுதியில் ஒரு நடுகல் காணப்படுகிறது. இந்நடுகல் 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

சித்ரா பௌர்ணமி மண்டபம்:

அமராவதியின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள இம் மண்டபத்தில் சில முக்கிய வழிபாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறும். இங்கு தான் விக்ரகங்களை வைத்து நீராட்டுவார்கள் ஆனால் இப்பொழுது இடிந்த நிலையில் உள்ளது.

கோட்டை மாரியம்மன் கோயில்:

இந்தப்பகுதி மேடான பகுதி. இதனைக் குமணன் திட்டு என்றும் கூறுகின்றனர். இங்குள்ள கோட்டை மாரியம்மனை பல ஊர்களில் இருந்தும் வந்து வணங்குகின்றனர்.

பரிசில் துறை:

அமராவதியும், அசுவநதியும் கலக்கும் இடத்திற்குப் பரிசில் துறை அல்லது ஒடத்துறை என்ற பெயர் வழக்கு உள்ளது.

அமராவதி நதி:

இவ்வூர்களுக்கு வளமை கொடுக்கும் இரு நதிகள் அசுவநதி, அமராவதி என்பன. குதிரை ஆற்றை அசுவநதி என்றும் வழங்குவர். மிக வேகமாகக் குதிரையை போல் ஆறு ஓடு வதாலும் குதிரைமலையில் உற்பத்தியாகி வருவதாலும் (குதிரை யாறு) அசுவநதி எனப் பெயர் பெற்றது. வடமொழியில் அசுவம் என்றால் குதிரை என்று பொருள்.

அமராவதி என்னும் சமஸ்கிருத சொல்லுக்குத் தமிழில் ஆன் பொருநை என்று பெயர். இந்நதி கொழுமத்திற்கு மேற்கே மறையூர்க்கு மேல் தென்மேற்கே 13 மைல் தூரத்தில் கற்பாறை யினின்று ஊற்றெடுத்து அஞ்சிநாடு வழியாக ஓடிப், பாம்பாற் றுடன் கூடி, தளிஞ்சி என்னும் இடத்திற் தேன் ஆற்றுடன் சேர்ந்து துலானா அருவியில் வீழ்ந்து பிறகு குழுமூர் வழியாகச் சென்று கொழுமத்தில் குதிரை ஆற்றுடன் கலக்கின்றது.

குமணன்:

குமணன் பெயர் கொழுமத்தோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது.

கடைச்சங்க வள்ளல்கள் எழுவரை அடுத்துப் புகழப் படுபவன் குமணன் இதனை

''எழுவர் மாய்ந்த பின்றையழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
இரந்தோர் அற்றந்தீர்க்கென விரைந்திலன்
உள்ளி வந்தனென் யானே'' (புறம்)

என்ற புறநானூற்று வரிகளால் அறிகிறோம்.

குமணபுரிதான் கொழுமம்:

முதிரமலை, குதிரைமலை, குமணன் ஊராக ஆகியிருக் கலாம் எனக் ''குமணசரித்திரம்'' என்ற நூலைத் தொகுத்த மே. சொ. சுப்ரமணியக் கவிராயர் கருதுகிறார். சி.கு. நாராயணசாமி அவர்கள் ''சோழிச்சுரதேவர் திருத்தல வரலாறு'' என்ற நூலில் இன்றைக்கு சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்னர் குமணன் என்ற

பெயர் சார்ந்த சிற்றரசன் ஒருவன் இங்கு அரசு செய்து இரப் போர்க்கும், எளியவர்களுக்கும் இல்லையென்னாது ஈந்து'' பெருங்கொடை வள்ளல்'' எனச் சிறந்து, புகழ் பெருக விளங்கி னான். இம்மன்னன் பெயரால் இவ்வூர் ''குமணநகர்'' என வழங்கப்பட்டது என்றும் கூறுகிறார். இங்கு காணப்படும் கோட்டை மேடு குமணன் வாழ்ந்த இடமாகக் கருதப்படுகிறது. ''குமணன் துறை'' ''குமணன் மேடு'' என்ற பெயர்கள் தவிரக் குமணன் ஆண்டதற்கான சான்றுகள் இன்றுவரை எதுவும் கிடைக்க வில்லை.

2. கொங்குநாடு

கொங்குநாடு பற்றிய குறிப்புகள் சுமார் 2000 ஆண்டு கட்கு முன்பிருந்தே நமக்குக் கிடைத்துள்ளன. சங்க இலக்கியத் தில் கொங்குநாடு என்ற பெயர் கூறப்படவில்லையானாலும் கொங்கர் பற்றிய குறிப்பு நிறைய வருகின்றன. கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் கொங்கு நாடு குறிப்பிடப்பட்டுள்ளது. கொங்குநாட்டு எல்லைப்புறங்கள் முழுவதும் மலைகள் சூழ்ந்து தனித்தன்மை பெற்று விளங்கின. கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் கொங்கு நாடு குறிப்பிடப்பட்டுள்ளது.

கொங்குநாடு பெயர்க்காரணம் :

கொங்குநாட்டிற்கு இப்பெயர் வந்தது பற்றிப் பல கருத்துகள் நிலவி வருகின்றன. பூக்களின் 'தேன்' தான் 'கொங்கு' என்ற பெயருக்குக் காரணம் என்பர். இது பெரும்பாலோருடைய கருத்து. குணக்கு நாடுதான் திரிந்து கொங்குநாடு ஆயிற்று என்பர் டாக்டர் கி. நாச்சிமுத்து அவர்கள். இதற்கு ஆதாரமாகத் துளு மொழியில் கிழக்குத் திசையைக் குறிக்கும் சொல் 'கொன்கு' என்பதனை அவர் எடுத்துக்காட்டுகிறார்.

பயனற்ற நிலம் என்ற வகையில் கொன் என்ற அடிப் படையில் கொங்கு வந்தது என்று கொள்வாரும் உண்டு. திரு. ஒய். சுப்புராயலு அவர்கள் இதுபற்றிக் கூறும்போது ''மைசூர் மாவட்டத்தில் உள்ள தலைக்கோட்டையைத் தலைநகராகக் கொண்டு கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து ஆட்சி செய்த கங்க அரசர்களின் குலமுதல்வனான கொங்குணிவர்மன் என்பவனால் இப்பெயர் வந்தது என்கிறார். கொங்குணிவர்மனின் குலத்தால் கொங்குநாடு பெயர் பெற்றதாகலாம். கங்க அரசர் களைத் தான் கொங்கர் என்று சொல்ல வேண்டும் என்றும் அவர்

கூறுகிறார். கொங்கு நாட்டுப் பெயர் பற்றிப் பல்வேறு கருத்துகள் கூறப்பட்டாலும் சுப்பராயலு அவர்கள் கருத்துதான் ஒப்புக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

கொங்குநாட்டின் எல்லைகள் :

கொங்கு நாட்டு எல்லைகளைப் பற்றிப் பிற்கால நூல்கள் குறிப்பிடுகின்றன.

'வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்கு
குடக்கு வெள்ளிப்பொருப்புக்குன்று கிழக்கு
கழித்தண்டலை சூழும் காவிரி சூழ் நாடா
குழித்தண்டலையளவும் கொங்கு.

வடக்கெல்லை தலைமலை, தெற்கு வைகாவூர், மேற்கெல்லை வெள்ளிமலை (வெள்ளியங்கிரி), கிழக்கு குளித்தலை என்று இந்த பாடல் மூலம் கொங்கு நாட்டின் எல்லைப் பற்றி அறிகிறோம். சிலபாடல்களில் வடக்கெல்லை பெரும்பாலை என்றும் கூறப் படுகிறது.

சங்ககாலத்தில் கொங்குநாடு:

சங்க இலக்கியத்தில் 'கொங்குநாடு' என்ற பெயர் எங்கும் காணப்படவில்லை. கொங்கர் என்று மட்டும் கூறப்படுகிறது. கொங்கு நாட்டில் வாழ்ந்த சங்கப்புலவர்கள் பலர், அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பொன்முடியார், பெருந்தலைச் சாத்தனார், கருவூர்க்கிழப்பிள்ளை, கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப் பூதநாகனார், அந்திகீரனார், கோசனார், உரோடகத்துக்கந்தரத்தனார் ஆகியோர். கொங்கு நாடு பற்றி நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு, போன்ற இலக்கியங்கள் குறிப்பிடு கின்றன. சேரன் கொங்கரை வெற்றி கொண்ட செய்தியைப் பதிற்றுப்பத்து கூறுகிறது.

ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல்

(பதிற்று: 22: 15- 16)

கொங்கரைப் பாண்டியன் வென்ற செய்தியும் அகநானூற்றில் கிடைக்கிறது.

"வாடாப்பூவின் கொங்கர் ஓட்டி
நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்
பொன்மலி நெடுநகர்க் கூடல் ஆடிய
.... (அகம் 253)

கொங்கர் ஆடிய உள்ளிவிழாப் பற்றி அகநானூறு

"............................ கொங்கர்
மணியரை யாத்து மறுகின் ஆடும்
உள்ளி விழவின் அன்ன
அலராகின்றது பலர் வாய்ப்பட்டே"
(அகம் 368)

கொங்குநாட்டுப் பெருங்கற் சின்னங்கள் :

கொங்குநாட்டுப் பகுதியில் பாண்டியர் வீடு என்று கூறும் பண்டைய வரலாற்றுச் சின்னங்களே பெருங்கற் சின்னம் (Megalits) எனப்படும். இப்பகுதியில் பெருங்கற் சின்னங்கள் மிகுதியும் காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் புதிய கற்காலக் கருவிகளும் கிடைக்கின்றன. கோவை மாவட்டத்தில் தெல்லஞ்சி, கல்கடம்பூர், கணியம்பூண்டி, நாட்டுக்கல்பாளையம், பெரிய நாயக்கன் பாளையம் கலிப்பட்டி, பிளிச்சி, கூடலூர், வீரபாண்டி போன்ற ஊர்களில் பெருங்கற் சின்னங்கள் உள்ளன. இங்குள்ள பெருங்கற்சின்னங்கள் சில அகழாய்வு செய்யப்பட்டு அவற்றில் ரோமநாணயம், முத்திரை குத்தப்பட்ட காசு, யவனர் தந்த உலோக பாத்திரம் போன்றவை கிடைத்தன. இவை மட்டுமன்றி ஆந்திர மட்பாண்ட வகை, கருப்பு சிவப்புப் பானை ஓடு, போன்றவையும் கிடைத்தன. இங்கு கிடைக்கும் கருப்பு சிவப்புப் பானை ஓடுகளில் அலையலையாக வளைவுக்கோடு இருப்பதைக் காண முடியும். இது இந்த பகுதிக்கே உரியது. வேறு எங்கும் இராது. இதுமட்டுமன்றி கிறித்துவ ஆண்டின் தொடக்கத்தைச் சேர்ந்ததாக கூறப்படும் தமிழ்க் கல்வெட்டுகள் கொங்கு நாட்டில் கண்டறியப் பட்டுள்ளன. புகளூர், அறச்சலூர், அம்மன்கோயில் பட்டி ஆகிய ஊர்களில் உள்ளவற்றைக் கூறலாம். முதலாவது சேரமன்னர் பற்றிக் குறிப்பிடும் சிறப்பு வாய்ந்தது. இரண்டாவது பண்டைய இசையைப் பற்றி அறிய உதவும் கல்வெட்டு. இவை மட்டுமன்றி பண்டைய படுக்கைகள் உள்ள ஊர்கள் சிலவும் உள்ளன.

கி.பி. 4ஆம் நூற்றாண்டு முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை கொங்கு நாடு :

சமயம்

கி.பி. 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரை கொங்கு நாடு கங்கர் ஆட்சிக்குப்பட்டிருந்தது. இவர்கள் காலத்தில் கொங்கு நாட்டில் சமணம் சிறப்புற்றிருந்தது. இது பற்றிக் கொங்கு தேச ராசக்கள் கதை விரிவாகக் கூறுகிறது. ஆனால் கி.பி. 4ஆம் நூற்றாண்டிலிருந்து 9ஆம் நூற்றாண்டு வரையிலான சமணசமயம் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன. கிடைக்கின்ற ஒன்றிரண்டு சான்றுகளும் கங்கர்கள் தொடர்புடையதாகத் தெரியவில்லை. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'ஞானசம்பந்தர், 'அப்பர்' போன்ற பெரியார்கள் கொங்கு நாட்டுத் தலங்கள் சிலவற்றைப் பாடியுள்ளனர். இவர்களுக்குப் பின் வந்த 'சுந்தரர்' 'முதலைவாய்ப் பிள்ளையை மீட்டுத் தந்த வரலாறு அவிநாசியில் நடந்தது என்பர் . இதனை நினைவுறுத்தும் வகையில் கொங்கு நாட்டுச் சிவத்தலங்களில் முதலைவாய்ப் பிள்ளையை மீட்ட கதை சிற்ப வடிவத்தில் இருப்பதைக் காண முடியும். நால்வருள் இறுதியான வரான மணிவாசகர் சேவூருக்கு அருகில் உள்ள 'மொக்கனீசுரம்' பற்றிப் பாடியுள்ளார். கொடுமுடி இருந்த சிவனைப் பாண்டிய மன்னன் ஒருவன் தரிசித்து வந்தான் என்று பாண்டியர் செப்பேடு கூறும். நாமக்கல்லில் ''அதியேந்திர விஷ்ணுகிருகம்'' என்ற பெயரில் அதியமான் குடைவித்த குடைவரைக் கோயில் உள்ளது. இதுவும் கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பெருங்கதை யாத்த கொங்குவேள் என்ற புலவர் விஜயமங்கலத்தில் வாழ்ந்தார் என்றும் கூறுவர். விஜயமங்கலத்தில் தமிழ்ச்சங்கம் இருந்தது என்றும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. கொங்குவேள் சமண சமயத்தைச் சார்ந்தவர்.

அரச மரபினர் :

கொங்குச் சோழர்கள்

கொங்குதேச ராசாக்கள் கதையில் ''தஞ்சாபுரியைச் சேர்ந்த ஆதித்தவர்மன் கொங்குநாட்டு வேட்டுவர்களை வென்று தம் நாட்டு வேளாண் குடிகளைக் கொண்டு வந்து குடியேற்றினான்

என்று கூறப்படுகிறது. மேலும் ஆதித்த சோழன் வேட்டுவ மன்னர்களை வென்றான் என்று கொங்கு தேச ராசாக்கள் கதை கூறும். ஆதித்தன் கொங்கு நாட்டுப் பொன் கொண்டு தில்லைச் சிற்றம்பலத்தினை வேய்ந்தான் என்பதை நம்பி ஆண்டார் நம்பி 'சிற்றம்பல முகடு கொங்கிற் கனகமணிந்த ஆதித்தன்' என்று கூறுவார். பிற்காலத்து வந்த பெரிய புராண ஆசிரியரும் இதைக் கூறியுள்ளார். ஆனால் கே.வி. சுப்ரமணிய அய்யர் அவர்கள் கொங்கு நாட்டுச் சிற்றம்பலம் ஒன்றிற்கு கொடும்பாளூர் வேளிர் மரபைச் சேர்ந்த ஆதித்தன் என்பவன் பொன் வேய்ந்தான் என இப்பாடல் கூறுவதாகக் கொள்வார்.

கொங்குச் சோழர்கள் புதுக்கோட்டைப் பகுதியில் இருந்த கோனாட்டிலிருந்து வந்தவர்கள் என்று கே.வி. சுப்ரமணிய அய்யர் கருதுகிறார். காரணம் முதல் கொங்குச் சோழன் கோக்கலி மூர்க்கனும் இவனுடைய மகன் விக்கிரம சோழனும் தங்களைக் 'கோணாட்டான்' என்று கூறிக் கொள்கின்றனர். இவர்கள் சுமார் மூன்று நூற்றாண்டுகள் ஆண்டனர். அப்பொழுது நாடு வகை செய்யப் பெற்றுக் கோயில் பல எடுக்கப் பெற்று நிர்வாகம் சிறப்பாகவும் சமயங்களுக்கு ஆதரவு அளித்தும் நிர்வகிக்கப் பட்டது.

பாண்டியர் முதலியோர் :

கொங்குச் சோழர்களுக்குப் பின் பாண்டியர், ஹொய்சளர், விஜயநகர மன்னர்கள், நாயக்கர்கள் ஆட்சி நடைபெற்றது. சில காலம் சுல்தான்கள் ஆட்சியில் கொங்கு நாடு அல்லல் பட்டது. இந்த ஆட்சியில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன. பின்னர் 1799 ல் திப்புவிடம் இருந்து ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

கொங்குமண்டல நாட்டுப் பிரிவுகள்:

கொங்கு மண்டலம் 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சில நூல்களில் 30க்கும் மேற்பட்ட நாடுகள் கூறப்படுகின்றன. அதிகமுள்ளவை இணைநாடுகள் எனப்படும்.

வெளிநாட்டினர் தொடர்பு:

கி.மு. 1லிருந்து 2ஆம் நூற்றாண்டு வரையில் வெளி யிடப்பட்ட ரோமானியக் காசுகள் கொங்குநாட்டில் மிகுதியாகக்

கிடைக்கின்றன. அகஸ்டஸ் ட்ரூடஸ், நெர்மேனிகஸ், டைபீரியஸ் போன்ற ரோமானிய மன்னர்கள் பெயர் பொறித்த காசுகள் வெள்ளலூரில் கிடைத்துள்ளன. கலயமுத்தூர், பொள்ளாச்சி, பூதிநத்தம் போன்ற இடங்களிலும் ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. இந்தியாவில் கிடைக்கும் ரோமானியக் காசுகளில் 80% கொங்கு நாட்டில் கிடைக்கிறது. இதனால் இவர்கள் கொங்கு நாட்டுடன் கொண்ட தொடர்பு அறியப்படுகிறது. காங்கேயத்திற்கு அருகில் உள்ள ‘படியூர்’ என்ற ஊரில் கிடைக்கும் விலை மதிப் பற்ற அழகுக் கற்களுக்காக ரோமானியர் இங்கு வந்து வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இவ்வாறு பல சிறப்புகளைப் பெற்றிருந்த கொங்கு நாடு பல்வேறு ஆட்சிகளில் கைமாறி வந்திருந்தாலும் தன்னுடைய தனித் தன்மையை விட்டுவிடாமல் தொடர்ந்து பாதுகாத்து வந்துள்ளது.

3. ஐவர் மலை

அமைவிடம்:

'ஐவர் மலை' மதுரை மாவட்டம், பழநி வட்டம் பழநி யிலிருந்து சுமார் 10 மைல் மேற்கில் பழநி-கொழுமம் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இங்குள்ள இரண்டு மலை களில் பெரியதாக உள்ள மலை பெரிய ஐவர்மலை என்றும் அளவில் சிறியதாக உள்ள மலை சிறிய ஐவர்மலை என்றும் பொதுமக்களால் அழைக்கப் பெறுகிறது. சிறிய ஐவர் மலையில் தான் சிறப்புப்பெற்ற இரண்டாம் வரகுணனின் வட்டெழுத்துக் கல்வெட்டு, 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சமணச் சிற்பங்கள், எழில் வாய்ந்த இயற்கைச் சுனைகள் ஆகியன உள்ளன.

அமைப்பு:

ஐவர்மலை கடல் மட்டத்திலிருந்து சுமார் 1400 அடி உயரத்தில் வடக்கு தெற்காக அமைந்துள்ளது. மலை இருபிரிவு களாகப் பிரிந்திருப்பது போல் இடைவெளியில் வழியும், வழியின் தெற்குப் பக்க உச்சியில் பிள்ளையார் கோயிலும் வடக்குத் திசையில் இராமானுஜர் மடமும் தண்டபாணி கோயிலும் உள்ளன. தெற்குத் திசையில் இயற்கையாக அமைந்த குகைத்தளம் சுமார் 160 அடி நீளமும், 13 அடி உயரமும் உள்ளது. இக்குகைத் தளம் காலப்போக்கில் சுவர்கள் வைத்துப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. தொல்லியல் துறையால் சில தடுப்புச் சுவர்கள் இடிக்கப்பட்ட விட்டன. திரௌபதி கோயிலில் வெளிப் பகுதியின் மேற்பாகத்தில் சுமார் 30 அடி நீளம் கொண்ட பகுதியில் 16 சமண தீர்த்தங்கரர் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தமிழ், வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் இங்கு காணப்படுகின்றன. இம்மலையைப் பற்றிக் கொங்கு இதழில் (ஜனவரி 1972) புலவர் தெய்வசிகாமணி கவுண்டர் ''இது ஒரு பெரிய மலையை

அடுத்துள்ள சிறிய மலையேயாயினும் மக்கள் பார்த்து மகிழ்வதற் குரிய பேரழகினையுடையது'' என்று குறிப்பிடுகின்றார். ஆனால் தற்போது ஐவர்மலையைச் சுற்றிச் செழிப்பற்ற காடுகள்தான் காணப்படுகின்றன. சுமார் இரண்டு மைல் சுற்றளவில் எந்த ஊரும் இல்லை. குளம் ஆறு எதுவும் இல்லை. இம்மலையைச் சுற்றி உள்ள முக்கியமான ஊர்கள் பாப்பம்பட்டி, கொழுமம், அய்யம்பாளையம், லட்சலப்பட்டி ஆகியன.

மலையும் பெயரும்:

இங்குள்ள 8 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு இதை அயிரைமலை என்று குறிக்கின்றது. சங்க இலக்கியங்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்படும் அயிரைமலை இதுவே என்று புலவர் திரு.தெய்வசிகாமணி கவுண்டர், பேராசிரியர் மு. ராகவையங்கார் போன்றோர் கருதுவர்.

'அயிரை என்ற சொல்லுக்கு மீன், கொற்றவை என்ற பொருள்கள் உண்டு. இங்கு (யக்ஷி) கொற்றவை வழிபாடு இருந்ததால் இம்மலைக்கு அயிரை என்று பெயர் ஏற்பட்டது என்று கூறுவர். இம்மலை சேரர்களுக்கு உரியது. இம்மலையி லிருந்து பேரியாறு என்ற நதி உற்பத்தியாகிக் கேரளாவில் கலக்கின்றது சேரன் மலைவளம் காணச் சென்ற பகுதி இப்பகுதி என்றும் செழிப்பு மிகுந்த பகுதியாக இருந்தது என்றும் கருதுவர். பதிற்றுப்பத்து மூன்றாம் பத்தில் பாலைக் கௌதமனார் ''பல்யானை செல் கெழுகுட்டுவனை

''பல்லியந் தழீஇய பயங்கெழு நெடுங்கோட்டு
நீரறன் மருங்கு வழிப்படாப் பாகுடிப்
பார்வற் கொக்கின் பரிவேட் பஞ்சாச்
சீருடைத் தோத்த முனை கெடவிலங்கிய
நேருயர் நெடுவரை யயிரைப் பொருந''

என்று குறிப்பிடுகின்றார். கபிலர் செல்வக்கடுங்கோ வாழியாதனை வாழ்த்தும் பகுதியில் ''மாயோன் உறையும் உலகமும் கேட்ப இழுமென இழிதரும் பாறைக்குரல் அருவி முழுமுதல் மிசைய கொடுதொறும் துவன்றும் அயிரை நெடுவரை போல தொலை யாதாக நீ வாழும் நாளே'' என்றும் அரிசில்கிழார் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை வாழ்த்தும் பொழுது,

" கடவுள் அயிரையின் நிலைஇ
கேடு இலவாக பெரும நின் புகழே !

என்றும் வாழ்த்தும் பகுதிகளையும் கொங்கு நாட்டைச் சேர்ந்த சேரர் இரும்பொறை, பெருங்கடுங்கோன், இளங்கடுங்கோ ஆகியவர்களைப் புகளூர் ஆறு நாட்டார் மலையிலுள்ள சங்க காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுவதாலும் சேரவேந்தர்கள் கொங்கு நாட்டை ஆண்டமை உறுதி பெறுகிறது. மேலும் பல்யானை செல்கெழுகுட்டுவன் பழநிக்கு அருகில் உள்ள தாராபுரம் வட்டத்தில் கொங்கூர் என்ற பகுதியை ஆண்டிருக்கலாம் என்ற கருத்து உள்ளதாலும் கொங்கு நாட்டின் 24 பிரிவுகளில் ஒன்றான வைகாவூர் நாட்டினைச் சேர்ந்த இவ்வயிரைமலை பதிற்றுப்பத்தில் கூறும் அயிரையாக இருக்கலாம். கோட்டயம் பக்கம் உள்ள அயிரையாக இருக்காது என்றும் கருதுகின்றனர். பேராசிரியர் மு. ராகவையங்கார் சேரர்க்கே உரிமையுடையனவாகக் கூறும் கொல்லிமலை, அயிரைமலை ஆகியவற்றைச் சங்கநூல்கள் குறிப்பிடுவதுடன் அயிரை மலை ஆனைமலைத் தொடராகும் என்றும் குறிப்பிடுகின்றார்.

ஆனால் இம்மலையில் சங்ககாலத்தைச் சார்ந்த தமிழ்க் கல்வெட்டுகளோ சமணப்படுக்கைகளோ காணப்படவில்லை. அயிரைமலை என்று குறிப்பிடும் கல்வெட்டும். 9 ஆம் நூற்றாண் டைச் சேர்ந்த இரண்டாம் வரகுண பாண்டியன் கல்வெட்டு ஆகும். அயிரை என்பதற்கு மீன் என்ற ஒரு பொருளும் உண்டு. பாண்டியர் களுடைய இலட்சினை மீன் ஆகும். எனவே அவர்கள் தங்கள் சின்னத்தை மனதில் கொண்டு அயிரை என்று இம்மலையைக் குறிப்பிட்டிருக்கலாம். எனவே இப்பெயர் பிற்காலத்தில் இடப் பட்ட பெயராக இருக்கலாம். மேலும் ஒரே பெயரில் பல மலைகள் இருக்கின்றன. உதாரணமாக ஆனைமலை என்பது பொள்ளாச்சி வட்டத்தில் ஒன்று உண்டு. அதே போல மதுரை அருகிலும் ஆனைமலை உண்டு. குதிரைமலை என்ற பெயருடன் கொழுமத் திற்குத் தெற்காக சுமார் 3 மைல் தொலைவில் குதிரையின் அமைப்பை ஒத்த ஒரு மலை உள்ளது. தருமபுரி மாவட்டத்தில் ஒரு குதிரை மலை உண்டு. அதுபோல கோட்டயம் பக்கம் உள்ள ஒருமலைக்கும் அயிரைமலை என்று பெயர் இருப்பதும் கேரளம் சேரர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பதும் மறுக்க முடியாத ஒன்று. பதிற்றுப்பத்து அயிரையிலிருந்து தோன்றி ஓடும் நதியினைப்

பேரியாறு என்று குறிப்பதால் அயிரையிலிருந்து சுமார் 3மைல் தூரத்தில் உள்ள ஆம்பிராவதி நதியே பேரியாறு என்று கருதுவர் சிலர். பொதுவாப் பேரியாறு என்பது இரண்டு நதிகள் கலக்கு மிடத்தில் எந்த நதி பெரியதாக உள்ளதோ அந்த நதிக்கு பெரியாறு என்பர். இங்குள்ள இரண்டு நதிகளில் குதிரையாறு. அமராவதி ஆகிய இரண்டு நதிகளில் அமராவதி நதியே பெரியதாக இருப்பதால் அதை மக்கள் பெரியாறு என்று அழைக்கின்றனர். இதே போல் பேரூரில் உள்ள நொய்யல் காஞ்சி இரு நதிகளும் கலக்குமிடத்தில் நொய்யல் பெரியாறு என்று குறிப்பிடப்படு கின்றது. இவ்வாறு பல இடங்களில் ஆறுகள் பெரியாறு என்று பெயருடன் தமிழ்நாட்டில் ஓடுகின்றன. இம்மலையைச் சுற்றி யுள்ள சுமார் 10 மைல் சுற்றளவில் அமராவதி நதியைத் தவிர எந்த நதியும் பெரியாறு என்ற பெயருடன் இல்லை. அமராவதி நதி கொழுமத்திற்கு மேற்குத் திசையிலும் மறையூருக்கு மேல் தென்திசையிலும் சுமார் 13 மைல் தூரத்தில் உள்ள குழிந்துள்ள தொரு கற்பாறையினின்றும் ஊற்றெடுத்துக் கோட்டைமாரியம்மன் கோயிலையொட்டிய மேட்டின் கீழுள்ள பள்ளத்தில் குதிரை யாற்றுடன் கலக்கிறது. ஆகவே பெரியாறு உற்பத்தியாகுமிடம் வேறு என்று கொள்ளலாம். தொடர்ச்சி அற்ற மலையாக ஒரு தனிப்பட்ட குன்று போன்று காணப்படுவதால் இவ்வயிரை மலையிலிருந்து ஆறு உற்பத்தியாக வாய்ப்பில்லை. அயிரை மலையைக் கல்வெட்டுகள் ஸ்ரீ அயிரை என்று குறிக்கின்றது. இப்பொழுது இம்மலை பேச்சு வழக்கில் ஐவர்மலை என்று வழங்கப்படுகிறது.

ஐவர்மலைச் சிற்பங்கள்:

திரௌபதி அம்மன் கோயிலுக்கு மேல் உள்ள பகுதியில் சுமார் 30 அடி நீளத்திற்கு ஆறுபகுதிகளாகப் பிரித்து; 16 தீர்த்தங்கரர் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பார்சுவநாதரைத் தவிர மற்றவை அமர்ந்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளன. பார்சுவ நாதருக்கு நாகம் குடை போல் அமைய மற்றவர்களுக்கு முக்குடை உள்ளது. இயக்கன் இயக்கி உருவங்கள் சாமரம் வீசும் நிலையில் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே வெட்டப்பட்ட வட்டெழுத் துக் கல்வெட்டின் மேல் ஒரு தீர்த்தங்கரர் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. இது 10 ஆம் நூற்றாண்டாகலாம். ஒவ்வொரு சிற்பமும் சுமார் 18 அங்குலம் உயரம் உள்ளன.

8, 9 ஆம் நூற்றாண்டுகளில் சமணச் சிற்பங்கள்:

கி.பி. 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் சமணம் பாண்டிய நாட்டிலிருந்து பழநி வழியாக கொங்கு நாட்டில் பரவியது. அக்கால கட்டத்தில் தமிழகத்தில் படுக்கைகள் வெட்டிக் கொடுக்கும் பழக்கத்தைக் கைவிட்டுப் புடைச் சிற்பங்கள் ஏற்படுத்தினர். 9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தீர்த்தங்கரர் உருவங்கள் திருமூர்த்தி மலையில் உள்ளன. பெரிய கரந்தையில் ஆதித்தேசுவரர் ஆலயத்தில் சமணத் தீர்த்தங்கரர் உருவமும் பொள்ளாச்சி வட்டம் தேவனாம் பாளையத்தில் தீர்த்தங்கரர் உருவமும் உள்ளன. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சமணச் சிற்பங்கள் பல்லடம் வட்டம் பொங்கலூர் என்ற ஊரில் உள்ளன. அதே போல் தான் அயிரையிலும் படுக்கைகள் இல்லாமல் புடைச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இயக்கி, அவ்வை என்ற பெயரில் யக்ஷி உருவங்களும் காணப்படுகின்றன. 24 தீர்த்தங்கரரில் 23 வது தீர்த்தங்காரான ''பார்சுவநாதர்'' சிற்பமும் உள்ளது. மாணாக்கியர் இச்சிற்பங்களைச் செய்வித்துள்ளனர். இங்குள்ள தெய்வத்தை ஸ்ரீ அயிரை மலை தேவர் என்று குறித்துள்ளனர். இச்சமணத் தீர்த்தங்கரர் உருவங்களைப் காலப்போக்கில் மக்கள் பல்வேறு பெயர்களில் அழைத்து வழிபாடும் செய்துள்ளனர். ஆனால் இப்பொழுது முழுமையாகத் தூய்மை செய்யப்பட்டுத் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

மௌரியப்பேரரசை நிறுவிய சந்திரகுப்த மன்னன் காலத்தில், மைசூர் சிரவணபெள்கொளாவிலிருந்து பத்திரபாகுவின் சீடர்களான விசாக முனிவர் போன்றவர்களால் கொங்கு நாட்டு வழியே தமிழகத்தில் சமணம் பரப்பப்பட்டது என்ற கருத்து உள்ளது. அதனாலேயே கொங்கு நாட்டு விசயமங்கலத்தைத் தலைமையிடமாக்க கொண்டிருந்தனர். கி.பி. 11 முதல் 14ஆம் நூற்றாண்டு வரை ஆண்ட கொங்குச் சோழர்கள் இச்சமயத்திற்குப் பேராதரவு தந்திருக்கின்றார்கள். இச்சமயம் கொங்கு நாட்டில் 16, 17 ஆம் நூற்றாண்டு வரை செல்வாக்குடன் இருந்துள்ளது. சமண சமய ஆசார்யர்களைக் காத்து அரசு நடத்திய சமண அரசர்களான கங்கர்கள் ஆண்ட கொங்கு நாட்டில் சமணர்கள் அதிகமாகக் குடியேறி வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும் வரலாற்றுண்மை.

யக்ஷி வழிபாடு:

பெண் தெய்வ வழிபாடு தென்னிந்தியாவில் பண்டைக் காலத்திலிருந்தே இருந்திருக்கின்றது சமணர்களும் தங்கள் மதத்தைப் பரப்பும் நோக்கத்தோடு பிற மதங்களுக்கு ஈடுகொடுக்கும் வண்ணம் உயர்நிலை கொடுத்துப் பெண் தெய்வ வழிபாட்டைச் சிறப்பித்தனர். தீர்த்தங்கரர்களின் வலதுபக்கம் யக்ஷி உருவம் அமைக்கப்பட்டது. ஆனந்தமங்கலம் சோழவாண்டிபுரம், பஞ்சபாண்டவர்மலை, ஆனைமலை போன்ற இடங்களில் யக்ஷி உருவங்களும், ஐவர்மலை, கழுகுமலை, திருச்சாரணத்துமலை, பஞ்சபாண்டவர்மலை ஆகிய மலைகளில் உள்ள கல்வெட்டுகளில் யக்ஷி வழிபாட்டிற்கு நிவந்தங்கள் கொடுத்ததைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

பெண் ஆசிரியைகள் குரத்தியர், குரத்தி அடிகள் என்று குறிக்கப்படுகின்றனர். பல மடங்களுக்கும் பள்ளிகளுக்கும் பெண்கள் தலைமை வகித்ததையும் அறியலாம். ஐவர்மலையிலும் சமணப் பெண்களுக்கு முக்கிய இடம் கொடுத்துள்ளனர். மாணாக்கியர் குரத்தியர் என்ற பெயர்கள் கல்வெட்டில் காணப்படுகின்றன. சமணர்கள் பெண்களுக்கு சமஉரிமை கொடுக்க மாட்டார்கள் என்ற கருத்தை மறுக்கும் வகையில் கழுகுமலை, ஐவர்மலைக் கல்வெட்டில் வரும் பெண்கள் பற்றிய குறிப்புகள் உருவங்கள் ஆகியவற்றைச் சான்றுகளாக கூறலாம்.

காலப்போக்கில் யக்ஷிகளைப் பொதுமக்கள் திரௌபதி என்று வணங்க ஆரம்பித்தனர். ஐவர்மலையில் இன்றும் ''திரௌபதி வழிபாடு'' சிறப்பாக உள்ளது. யக்ஷி வழிபாடு ஐவர் மலையில் சிறப்புற்றிருந்தது என்பதற்கு ஆதாரமாகக் கல்வெட்டுகள் இயக்கி அவ்வை போன்ற பெண் உருவச் சிற்பங்களைப் புதுப்பித்ததாகக் கூறுகின்றன. விளாப்பாக்கம் அருகில் உள்ள பஞ்சபாண்டவர் மலையில் யக்ஷி உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இதுவே தமிழ்நாட்டில் காலத்தால் முந்திய யக்ஷி உருவமாகும்.

கார்லே என்ற இடத்தில் உள்ள பௌத்தக் குடைவரைக் கோயில் அருகில் யாமி என்ற பெண் தேவதை கோயில் உள்ளது. இக்கோயில் தேவதையை மும்பைக்கருகில் உள்ள மீனவர்கள் ஆண்டுக்கொரு முறை சென்று வழிபாடு செய்கின்றனர். இந்த

வழிபாடு பண்டைக்காலந்தொட்டு இருந்து வந்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர். ஐவர் மலையிலும் (யக்ஷி) திரெளபதி வழிபாடு சிறப்புடன் நடத்தப்படுகின்றது.

பெருவழியும் குகைக் கோயில்களும்:

பண்டைய பௌத்த சமணச் சிற்பங்களும் பள்ளிகளும் இருந்த பண்டைக்காலப் பெருவழிகளே தற்போது தேசிய நெடுஞ் சாலைகளாக உள்ளன. கார்லே, கொண்டானே, பேட்சா நாசிக் போன்ற இடங்களில் உள்ள பௌத்த சைத்தியங்கள் பெருவழி களின் அருகிலேயே உள்ளன. தமிழகத்தில் உள்ள சில குடை வரைக் கோயில்கள் கூடப் பெருவழிகளின் அருகில் அமைந் துள்ளன. ஐவர்மலை பழநி - கொழுமம் நெடுஞ்சாலை அருகில் உள்ளது இது மேற்கூறிய கருத்தை உறுதிப்படுத்துகிறது. மேலும் கொழுமம் கோயிலில் உள்ள கி.பி. 12ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று இரட்டயம்பாடி என்ற ஊருக்கு எல்லை சொல்லும் போது வடக்கெல்லையாக ''அசுரர்மலைப் பெருவழி'' என்ற ஒரு பெருவழியைப் பற்றிக் கூறுகிறது. பழநி- கொழுமம் நெடுஞ்சாலை இரட்டயம்பாடிக்கு வடக்கில் இரண்டு கல் தொலைவில் செல்கிறது. மேலும் இந்தச் சாலை கி.பி. 1818-ல் கூட இருந்ததற்குரிய சான்றுகளும் உள்ளன. ஆகையால் பழநி- கொழுமம் நெடுஞ்சாலை பழைய பெருவழியே என்று கொண்டால் தவறில்லை.

கல்வெட்டுகள்:

கல்வெட்டுகள் வட்டெழுத்து, தமிழ் எழுத்துகளில் எழுதப் பட்டுள்ளன. இங்குள்ள கல்வெட்டுகளில் பாண்டியமன்னன் இரண்டாம் வரகுணன் காலக் கல்வெட்டு முற்காலப் பாண்டிய வம்சத்தின் ஆட்சிக்காலங்களைக் கணக்கிடப் பேருதவி புரிகிறது. இப்பாண்டிய மன்னனின் பெயர் வரகுணர் என்றும் சகவருடம் 792 என்றும் ஆட்சி ஆண்டு 8 என்றும் குறிக்கப்பட்டுள்ளது. அதாவது கி.பி. 870 இவ்வரகுணன் ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபனுடைய (கி.பி. 811- 860) மகன் ஆவான். சடையவர்மன் என்ற பட்டம் பூண்டவன். இவனைக் குரைகழற்காலரைசிறைஞ்சக் குவலயதலந் தனதாக்கின வரையுரையு மணி நெடுந்தோள் மன்னர்கோன்

வரகுணவர்மன் என சின்னமனூர்ச் செப்பேடு புகழ்ந்து கூறுகின்றது. இவ்வரகுணன் திருச்செந்தூர் முருகனிடம் பெரிதும் ஈடுபாடுடையவன். அப்பெருமானின் ஆண்டுவழிபாட்டிற்கு 1400 பொற்காசுகளை நிவந்தமாக அளித்துள்ளான். தமிழக வரலாற்றில் பாண்டிய மன்னர்களில் இருவர் வரகுணன் என்ற பட்டப் பெயர் கொண்டு விளங்கினர். அவர்களுள் இவ்இரண்டாம் வரகுணன் மாணிக்கவாசகரின் சமகாலத்தவன். இவன் காலத்தில் திருவயிரையில் பார்சுவபடாரர், இயக்கி, அவ்வைகளை புதுப்பித்ததாகவும் அதற்கு ஐநூறு பொன் செலவிட்டதாகவும் கல்வெட்டு கூறுகின்றது. (தெ.இ.க.தொ. xiv எண். 22)

ஸ்ரீ அச்சநந்தி:

வரகுணனைத் தவிர சமணப் பெரியார்களைக் குறிக்கும் கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன. அச்சநந்தி செயல் என்று அச்சநந்தி பெயர் காணப்படுகின்றது. அச்சநந்தி என்பவர் தமிழ்நாட்டில் சமணம் வளரச் சிறந்த காரணமாக இருந்துள்ளார் என்று கூறலாம். பிராகிருத மொழியில் அச்சநந்தி என்றால் அரிய நந்தியாகும். அச்சநந்தி தான் வடஆர்க்காடு, வள்ளிமலை, ஆனைமலை ஐவர்மலை, அழகர்மலை, கருங்காலக்குடி, உத்தம பாளையம் போன்ற இடங்களில் உள்ள சமணச் சிற்பங்கள் தோன்றக் காரணமாக இருந்தவர். ஆனைமலையில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டில் அச்சநந்தி என்ற பெயர் வருவதும் குறிப்பிடத்தக்கது. அழகர்மலையிலும் அச்சநந்தியைப் பற்றிக் குறிப்புக் காணப்படுகிறது. கொங்கர் புளியங்குளத்தில் உள்ள ஒரு சிற்பத்தின் அடியில் ஸ்ரீ அச்சநந்தி என்று வட்டெழுத்தில் வெட்டப்பட்டுள்ளது.

கருங்காலக்குடியில் உள்ள ஒரு சிற்பக் கல்வெட்டு அச்சநந்தியால் செய்விக்கப்பட்டது என்று கூறுகின்றது. அதேபோல் பல இடங்களில் அச்சநந்தியின் பெயர் வருவதாலும் அவருக்குத் தமிழ்நாட்டில் அதிக செல்வாக்கு இருந்ததாலும் சமணர்களிடையே உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தார் என்று கொள்ளலாம். கி.பி. 7- 8ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சி காரணமாகச் சமணம் தாக்கப்பட்டது. எனவே சமணம் செல்வாழ்க்கை இழக்க ஆரம்பித்த காலகட்டத்தில் அச்சநந்தி தோன்றித் தன் புனித

மான சமணக் கொள்கையாலும், மற்றும் சமய முறையாலும் சமணத்தைப் பரப்பினார். எனவே அவருக்குச் சமணசமய வரலாற்றில் தனிச் சிறப்பிடம் கிடைத்தது எனலாம்.

குணவீரக் குரவடிகள்:

வரகுணன் காலத்தைக் குறிக்கும் கல்வெட்டு குணவீரக் குரவடிகளின் மாணாக்கரான சாந்திவீரக்குரவர் 501 காணம் பொன் தானமாகக் கொடுத்தது பற்றிக் கூறுகிறது. இவர் வச்சநந்தி மாலை எழுதிய குணவீரபண்டிதர் அல்லர்.

மல்லிசேனன், இந்திரசேனன்:

மல்லிசேனன், இந்திரசேனன் என்ற முக்கியமான பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. சேனன் என்ற பட்டப் பெயர் எல்லாக்கலைகளிலும் மேம்பட்டவர்களுக்குத் தான் சமணர்கள் கொடுத்தனர். நாவுக்கரசருக்கு தர்மசேனன் என்ற பட்டம் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பட்டினிக் குரத்தி:

பவணந்திக் குரத்தியும், அவரது ஆசிரியையுமான பட்டினி குரத்தியார் பெயரும் குறிக்கப்படுகின்றது. பட்டினிக்குரத்தி என்ற பெயர் வெடால் கல்வெட்டிலும் குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டில் வரும் இடங்கள்:

வெண்புநாடு, அண்டநாடு என்ற இரண்டு நாடுகளின் பெயர்கள், நால்கூர் கொழுமம், குவணச்சேரி, கூடலூர், ஸ்ரீபெரும்பத்தி ஊர், ஸ்ரீ வீரசிங்காதன் என்ற ஸ்ரீ வடபள்ளி, ஸ்ரீ ஐயப்பள்ளி என்றும் ஸ்ரீ அயிரை மலைத் தேவர் என்றும் வருகின்றன.

'கொழுமம்' என்பது இங்கிருந்து சுமார் 3மைல் தொலை வில் உள்ள ஊராகும். ஸ்ரீ பெரும்பத்தி ஊர் என்பது வெள்ள கோயில், மூலனூர் போன்ற இடங்களுக்கு அருகில் உள்ள ஊராக இருக்கலாம். மேலும் வடபள்ளி, ஐயப்பள்ளி என்று பள்ளிகள் பெயர் - வருகின்றன. இவை சமணர்கள் போதித்த இடங்களாக இருந்திருக்கலாம்.

கல்வெட்டில் வரும் நிவந்தங்கள்:

கல்வெட்டில் பொதுவாகப் பொன் தானமாகக் கொடுக்கப் பட்டது பற்றிக் காணலாம். பொதுவாக சமணர்களுக்கு வணிகர்கள் தான் அதிகமாக தானம் கொடுத்திருக்கின்றனர். அவ்வாறு அவர்கள் கொடுக்கும்பொழுது ஆடு, நிலம் ஆகியவற்றை தானமாக அளிக்காமல் காசு பொன் போன்றவற்றைத் தான் தானமாகக் கொடுத்திருக்கின்றனர். ஐவர்மலைக் கல்வெட்டில் வணிகர்கள் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும் காசுகளையே தானமாகக் கொடுத்திருப்பதால் அவர்கள் வணிகர்களாக இருக்கக்கூடும் என்று கருதலாம். மீனாட்சிபுரம் கல்வெட்டு வெள்ளறை நிகமதோர் கொடியோர் என்று குறிக்கின்றது. நிகமம் என்றால் நகரம் அல்லது வணிகக் குழு என்று பொருள்படும். புகளூர்க் கல்வெட்டு புகளூர் பொன்வாணிகன் என்று குறிக்கின்றது. வணிகர்கள் சமணசமயத் தலைவர்களுக்கும் பொருளுதவி செய்தனர் என்பதை இந்தச் சான்றுகள் மூலம் அறியலாம்.

ஐவர்மலைக் கல்வெட்டில் கொழுமத்தைச் சேர்ந்தவர்கள் பொருளுதவி செய்ததாகக் குறிக்கப்படுகின்றது. ஆனை மலை யிலிருந்து ஒருபெருவழி இருந்ததாகவும் அது கொழுமம் வழியாகத் தான் சென்றதென்றும் ஒரு கருத்து உண்டு. அப்பெருவழியில் கொழுமம் வணிக இடமாக இருந்திருக்கலாம். பொதுவாகச் சமணர்கள் நகரத்திற்கு அருகில் தான் தங்கள் இருப்பிடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். சான்றாக மீனாட்சிபுரம் மதுரை நகரத்திற்கு அருகிலும் புகளூர், கருவூருக்கு அருகிலும் இருப்பதை நோக்கும் போது இக்கருத்து நமக்குத் தோன்றுகிறது. ஆகவே கொழுமத்தில் தானம் செய்தவர்கள் வணிகர்களாக இருக்கலாம். இக்கல்வெட்டில் குடியன் மூவேந்தன் கவிரிச்சிநாகன் ஆரம்விச்சி வரதபாணி, இந்திரசேனன், மல்லிசேனன் போன்றவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வேலாயுதம் பாளையம் கல்வெட்டில் நாகன் என்ற பெயர் வருகின்றது.

செவிவழிச் செய்திகள்:

ஐவர்மலையில் தான் அர்ச்சுனன் பாசுபதம் பெற்றான் என்று மக்கள் கருதுகின்றனர். மேலும் இங்கு பஞ்சபாண்டவர்கள்

வனவாசம் செய்யும்பொழுது இவ்விடத்தில் ஒளிந்திருந்தார்கள் என்றும் ஐவர் இருந்த காரணத்தால் பஞ்சபாண்டவர் மலை அல்லது ஐவர்மலை என்றும் பெயர் ஏற்பட்டது எனக் கூறுகின் றனர்.

ஐவர்மலையில் இன்று:

ஐவர்மலையில் இப்பொழுது திரௌபதி, முருகன் இராமலிங்க அடிகள் வழிபாடுதான் சிறப்பாக உள்ளது. இவ் வட்டாரத்தில் இருப்பவர்கள் திருமணங்களை இங்கு நடத்து கின்றனர். சிவராத்திரி விழா இம்மலையில் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்படுகிறது. அதற்கு வேண்டிய பொருளுதவி அருகில் உள்ள பல ஊர்களில் இருந்து கிடைத்தாலும், ஐவர் மலைக்கு அருகில் உள்ள பாப்பம்பட்டியில் உள்ள ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிறப்பாகச் செய்கின்றனர். கார்த்திகை விழாவும் இங்கு சிறப்பாக நடக்கின்றது.

4. கொழுமம் - (சங்கிராம நல்லூர்)

வீரசோழீஸ்வரர் கோயில்

கட்டடக்கலை:

கொழுமம் வீரசோழீஸ்வரர் கோயில் கொங்குக் கோயில்களிலிருந்து சிறிது மாறுபாடாக அமைந்துள்ளது. இக்கோயில் கி.பி 12 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம். இதற்கு ஆதாராமாகக் கல்வெட்டு உள்ளது. இக்கோயிலின் பொதுவான அமைப்பு கொங்கு நாட்டில் உள்ள மிக முக்கியமான கோயில்களான திருமுருகன்பூண்டி, பேரூர் ஆலயங்களைப் போன்று உள்ளது. பெரிய உயர்ந்த கோபுரமாக இல்லாமல் வாயிலின் முகப்பின்மேல் மண்டபம் போன்ற ஒரு பகுதி உள்ளது. அதில் சிவன், உமை அம்மை, விநாயகர் முருகன் உருவங்கள் உள்ளன. பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.. இது தவிர இங்குள்ள திருச்சுற்று மதிலும் சுமார் 100 ஆண்டுகளுக்கு உட்பட்டதாகத் தான் இருக்க வேண்டும். ஆனால் வாயிற்பகுதி மட்டும் சோழீஸ்வரர் கோயிற் கருவறை, அர்த்தமண்டபத்துக் கட்டடக்கலையை ஒத்துள்ளது.

சோழீஸ்வரர் கோயிலில் வீரசோழீஸ்வரர்க்கென்று தனிச் சன்னதி, அம்மனுக்குத் தனிச்சன்னதி அடுத்து நடராஜர் சன்னதி, மகாமண்டபம் இவற்றுடன் சிறு சிறு ஆலயங்களுமாக அமைந்துள்ளன.

கருவறை:

உபானம் தரைமட்டத்திற்குச் சமமாகவும் அதற்குமேல் ஜகதியும் உள்ளது. ஜகதி, கல்வெட்டுகளுடன் கூடிய முப்பட்டைக் குமுதம், கண்டம், பட்டி, ஆகியன உள்ளன. இவ் அதிஷ்டான அமைப்பு கருவறை, அர்த்தமண்டபத்தில் காணப்படுகின்றன. அடுத்து பித்தி எனப்படும் சுவரில் அரைத்தூண்கள் காணப்படுகின்றன. இங்குள்ள தேவகோஷ்டங்களில் தெய்வச் சிலைகள்

இல்லை. முன்னரும் இருந்திருக்காது என்று எண்ணும் வகையில் இவற்றிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. மகரதோரணங்கள் சோழர் பாணியைப் போல் நீண்டு காணப்படாமல் பல்லவர் கலையை ஒத்துச் சிறிது மேல்நோக்கி வளைந்து காணப்படுகின்றன. சுவரி லுள்ள அரைத்தூண்களின் கால், பத்மபந்தம், கலசம், கும்பம், பத்மம், பலகை இவற்றுடன் முடிகின்றது. அதற்கு அடுத்துள்ள பிரஸ்தரம் எனும் தோள் பகுதி பூதவரி, கொடுங்கை யாளவரி என மூன்று பிரிவுகளாக இருக்கிறது. கொங்கு நாட்டில் மற்ற கோயில் களில் தோள் பகுதியிலுள்ள பூதவரியில் விற்போர், மறப்போர் புரிந்த வேட்டுவ வீரர்களின் உருவம், வில், கத்தி, வாள் இவை காட்டப்பட்டிருக்கும். ஆனால் இக்கோயிலில் குள்ளச்சிறு பூதங் களின் உருவங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. கொடுங்கை (அ) கபோதகக் கூடுகளில் மனிதத் தலைகள் காணப்படுகின்றன. அதற்கு மேலே யாளி வரிகள் யாளிகளுடன் இடையிடையே யானையின் உருவங்களுடன் காணப்படுகின்றன.

யாளிவரிக்கு மேல் கீரிவமும் சிகரமும் ஸ்தூபியும் ஸ்தூபியில் ஒரு கலசமும் உள்ளன. இப்பகுதி முழுவதும் புதுப்பிக்கப்பட்டதால் இதன் பழமை மாறிவிட்டது. சிகரம் நாகர வடிவிலுள்ளது.

அர்த்தமண்டபம்:

அடுத்துள்ள அர்த்தமண்டபம் கருவறையின் அதே அமைப்பை ஒத்துள்ளதால் இதனையும் கி.பி. 12 ஆம் நூற்றாண் டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். தேவகோஷ்டத்தில் தெய்வச் சிலைகள் இல்லை.

முகமண்டபம், முப்பட்டைக் குமுதம், கண்டம், வரிமானம், பித்தி இவற்றுடன் உள்ளது. முகமண்டபத்தில் வடக்குப்புறச் சுவரில் 13, 14, - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகள் உள்ளன. தூண்கள் சதுரம் எண்பட்டை, சதுரம் போதிகை என எளிமையாக உள்ளன. மகாமண்டபம் 13, 14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் இருக்கலாம். 24 அடி அகலம் 41 அடி நீளம் உள்ள இம்மண்டபம் சோழீஸ்வரர் சன்னதியையும் தாண்டேசுவரர் சன்னதியையும் இணைக்கின்றது. இதன் அதிட்டானப் பகுதியில் உபானமும் அடுத்து பத்ம ஜகதியும் உள்ளன. கண்டத்தின் சதுரப் பகுதிகளில் மலர்த்தோரணங்கள் காணப்படுகின்றன. கபோதப்

பகுதிகளில் கீர்த்திமுகக் கூடுகள் காணப்படுகின்றன. படிக்கட்டு களின் ஓரத்தில் யானை துதிக்கையுடன் காணப்படுகிறது. மகாமண்டபக் கபோதப்பகுதியில் பத்மவரிகள் காணப்படுகின்றன. இங்குள்ள தூண்கள் வரிசைக்கு 6 என 5 வரிசைகளில் 30 தூண்கள் உள்ளன. இம்மண்டபத் தூண்களின் மேற்பகுதியை வைத்து மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். சீரான அமைப்பு இல்லாது சதுரப் பகுதியை அடுத்து எண்பட்டை கொண்டவை 16 பட்டைகள் கொண்டவை என்று பகுக்கலாம். சில தூண்களில் போதிகைகள் மாறுபட்டுக் காணப்படுகின்றன. ஒரே சீராக இல்லாததால் இம்மண்டபத் தூண்கள் வேறு இடங்களில் இருந்து எடுத்து வரப்பட்டதாக இருக்கலாம்.

பலிபீடம்:

மகாமண்டபத்தினை அடுத்து சுமார் 7 அடி கிழக்கில் அமைந்துள்ள பலிபீடம் சுமார் 14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். கொடிக்கம்பம் மரத்தால் செய்யப்பட்டது. இங்குள்ள நந்தி மண்டபம் கி.பி. - 20ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

தாண்டேசுவரர் சன்னதி:

மகாமண்டபத்தை ஒட்டி வடக்குப் பகுதியில் தெற்கு நோக்கி அமைந்திருப்பது தாண்டேசுவரர் அல்லது நடராஜர் சன்னதி ஆகும். தாண்டேசுவரர் ஆலயம் சுமார் 23 அடி நீளமும் 23 அடி அகலமும் உடையதாக உள்ளது. அதிட்டானப் பகுதி யிலுள்ள உபானத்தில் பத்மவரி உள்ளது. அடுத்து ஜகதி குமுதம் கண்டம் என அமைந்துள்ளது. இங்குள்ள கபோதகம் மகாமண்டபத் திலுள்ளது போல் உள்ளது. கபோதத்தில் கீர்த்திமுகக் கூடுகள் காணப்படுகின்றன. கபோதகப் பகுதியில் பத்மம் போன்ற வரிகள் காணப்படுகின்றன. இங்குள்ள ஜகதி, குமுதத்தில் கல்வெட்டு கள் உள்ளன. தாண்டேசுவரர் மண்டபத்தில் உள்ள தூண்கள், விஜய நகரர் பாணியை ஒத்துள்ளன. இங்குள்ள தூண்களில் 14 தூண்களில் மட்டும் கல்வெட்டுகள் சிறு சிறு சிற்பங்களும், அழகான மலர்த் தோரணம் சாமரம் ஏந்திய பெண்கள் ஆகியவை யும் செதுக்கப்பட்டுள்ளன. போதிகையின் வளைந்த பகுதியில் வாழைப்பூப் போன்ற அலங்காரப் பகுதிகள் காணப்படுகின்றன. தூண்களில் நாகபந்தம் உள்ளது. சதுரம், எண்பட்டை, சதுரம்

அடுத்து போதிகை என்று அமைந்துள்ள இவை 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம்.

தாண்டேசுவரர் ஆலயத்தில் உள்ள தூண்கள் உருண்டை வடிவமாக உள்ளன. இவற்றில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

அம்மன் சன்னதி:

அம்மன் கோயிற் கருவறை சதுரவடிவமானது. இக்கோயில் அம்மன் பெயர் பெரிய நாயகி. அம்மனுக்கு தனிச் சன்னதி கட்டும் முறை 11, 12 ஆம் நூற்றாண்டில் தான் சிறப்புப்பெற்றது எனலாம். சோழர் காலத்தில் தான் அம்மனுக்கு தனிச்சன்னதிகள் கட்டப் பட்டன. அதையே கொங்குச் சோழர்களும் கையாண்டனர் போலும். ஆனால் இச்சன்னதி எந்த மன்னன் காலத்தில் கட்டப்பட்டது என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் இல்லை.

கருவறை:

அம்மன் சன்னதி கருவறை 13 அடி நீளம் 13 அடி அகலம் உள்ளது. அதே அளவுடன் தான் அர்த்தமண்டபமும் உள்ளது. ஏறத்தாழ சிவன் கோயில் அமைப்பையே ஒத்துக் காணப்படுகிறது. உபபீடம் சற்று உயர்ந்து காணப்படுகிறது. ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம் என்று அதிட்டான வர்க்கம் உள்ளது. அடுத்துள்ள சுவர்ப்பகுதியில் மகரதோரணங்களுடன் கூடிய தேவகோஷ்டங்கள் அரைத்தூண்கள் அனைத்தும் சிவன் கோயிலைப் போன்றே காணப்படுகின்றன. கோட்டத்தில் தெய்வங்கள் இல்லை. அரைத்தூண்களில் கால், பந்தம், கலசம், தாடி கும்பம், பலகை ஆகிய உறுப்புகள் உள்ளன. அடுத்து கொடுங்கையில் உள்ள கூடுகளில் மனிதத்தலை உள்ளது. அதற்கு மேல் உள்ள யாளி வரியில் மலர்க் கொடிகள் காணப்படுகின்றன.

அர்த்தமண்டபம்:

அர்த்தமண்டபத்தின் அதிட்டானப்பகுதி மற்றும் முன் மண்டபம் ஆகியன எந்த மாற்றமும் இன்றி கருவறையை ஒத்த அமைப்புடன் உள்ளன.

கருவறையின் மேலுள்ள விமானப்பகுதியில் இரண்டு தளங்கள் காணப்படுகின்றன. கலசம் செம்பால் செய்யப்பட்டது. விமானப் பகுதி முற்றிலும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அம்மன் கோயிலின் காலத்தை நிர்ணயக்கக் கல்வெட்டு ஏதும் கிடைக்க வில்லை ஆனால் கட்டட அமைப்பைக் கொண்டு கிபி 14ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

சிறு ஆலயங்கள்:

இங்குள்ள சிற்றாலயங்களுள் அக்னீசுவரர் ஆலயம் சிறப்பான கலைப்பாணியைச் கொண்டுள்ளது. ஆலயத்தின் உட்பகுதியில் உள்ள கொடுங்கையின் அல்லி வட்டத்தில் சரங்கள் கோத்தது போன்று உள்ளது. இக்கற்றளி பாண்டியர் கலைப்பாணியை ஒத்துள்ளது எனலாம். அப்பகுதியில் உள்ள அரைத்தூணில் நாக பந்தம் உள்ளது. விமானம் திராவிட வடிவத்தில் காணப்படுகிறது. அவ்வாலயத்தின் முன் ஒரு சிறு மண்டபம் காணப்படுகின்றது. இம்மண்டபத்தின் அதிட்டானம், பத்மஜகதி, குமுதம், கண்டம், கபோதம் ஆகிய உறுப்புகள் உள்ளன. இங்குள்ள இரு தூண்கள் தாண்டேசுவரர் ஆலயத்தில் உள்ள சிறப்பான நான்கு தூண் களின் அமைப்பை ஒத்தே காணப்படுகின்றன.

அடுத்தது சுந்தரகணபதி ஆலயம். இச்சிற்றாலயத்தின் அதிட்டானப்பகுதி தரைமட்டத்திற்கு மேல் 2 அடி இருக்கும். மகரதோரணம் இங்குள்ள சிவன் கோயிலில் இருப்பதை ஒத்து உள்ளது. இங்குள்ள சிற்றாலயங்களில் இந்த ஆலயம் மட்டும் தான் சிவன் ஆலயத்துக் கருவறை, அர்த்த மண்டபத்தை ஒத்துள்ளது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டு கல்வெட்டில் ஒரு பிள்ளையார் கோயில் பற்றிக் குறிப்பு வருகிறது. அது இதுவாக இருக்கலாம். இங்குள்ள மற்ற சிறு ஆலயங்கள் 16, 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

கல்யாண வரதராஜப் பெருமாள் கோயில்:

இக்கோயில் சோழீஸ்வரர் ஆலயத்திற்கு சில அடிதூரம் வடக்காக இருக்கின்றது. கோயிலின் அதிட்டானப் பகுதியில் ஜகதி, முப்பட்டை குமுதம், சிறு சிறு சிற்பங்களுடன் கூடிய கண்டம்

ஆகியவற்றுடன் காணப்படுகின்றது. அடுத்து சுவரிலுள்ள அரைத் தூண்கள் சிவன் கோயிலை ஒத்தே உள்ளன. தேவகோட்டத்தில் தெய்வங்கள் இல்லை. மகர தோரணங்களில் உள்ள கூடுகளில் வேணுகோபாலன் இரணிய வதம் போன்ற சிறு சிறு சிற்பங்கள் உள்ளன. தூண்கள் சதுரம் எண்பட்டை சதுரம் என்ற முறையில் போதிகையுடன் அமைக்கப்பட்டுள்ளன.

5. குமரலிங்கம்

கரியவரதராஜப் பெருமாள் கோயில் :

கட்டடக்கலை

கரிய வரதராஜப் பெருமாள் ஆலயம் 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இக்கோயில் இடிபாடடைந்த நிலையில் இருந்து பின்னர் திருத்தி அமைக்கப்பட்டதாக இருக்கலாம். கருவறை, அர்த்தமண்டபம் தவிர முன் மண்டபத்தில் உள்ள தூண்கள் பல வகையாகக் காணப்படுவதால் ஒரே காலத்தை சார்ந்தவையாக இல்லை. இக்கோயில் அதிட்டானப்பகுதி சிவன்கோயிலை ஒத்து உள்ளது. அரைத்தூண்கள் உள்ளன. தேவகோட்டத்தில் தெய்வங்கள் இல்லை. பிரஸ்தரப் பகுதியில் பூதகணங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள தூண்கள் அதாவது வெளிமண்டபத்தில் இருப்பவை வட்டவடிவமாகவும் 16 பட்டைகளை உடையதாகவும் காணப்படுகின்றன. இவை நடராஜன் கோயிற் தூண்கள் போன்று உள்ளன. குமுதம் மற்றும் கண்டத்தில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இருதள விமானம் இடிந்த நிலையில் உள்ளது. ஸ்தூபியில் ஒரு கலசம் மட்டும் காணப்படுகிறது.

சுற்றுமதிலில் ஆங்காங்கே கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கோயில் பிற்காலத்தில் திருப்பணி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அமராவதி நதிக்கரையிலிருந்த வெங்கடரமணப் பெருமாள் ஆலயம், இடிபாடடைந்த காரணத்தால் குமரலிங்கத்திற்கு எடுத்துச் வந்து கட்டப்பட்டதாகக் கூறுகின்றனர். காசிவிசுவநாதர் ஆலயம், 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். தத்தாத்ரேயர் ஆலயம் 20 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

6. செப்புத் திருமேனிகள்

தமிழகத்தில் செப்புத்திருமேனிகள் சோழர் காலத்தில் உன்னத நிலையை அடைந்திருந்தாலும் சங்ககாலம் தொட்டே தமிழகத்தில் சிறப்பாக இருந்துள்ளன. செம்பில் சிறந்த உருவங்களைப் படைக்கும் கலை சங்ககாலத்திலிருந்தே சிறந்து வந்திருக்கின்றது. இந்தியாவில் சிந்துவெளியில் எடுக்கப்பட்ட நடன நங்கையின் உருவம் காலத்தால் முந்தியது.

இலக்கியங்களில்:

வேதகாலத்தில் இருந்தே செப்புத் திருமேனிகள் இருந்துள்ளன. ரிக்வேதத்தில் பொள்ளலாக உருவங்களை வார்க்கும் வழக்கம் இருந்துள்ளதைப் பற்றிக் குறிப்புகளால் அறிகிறோம். அதர்வ வேதத்தில் ''சியாம அயஸ்'' லோகித அயஸ்'' என்று உலோகங்கள் பற்றிய செய்தியும் மகாபாரதத்தில் உலோகத்தால் ஆன ஓர் உருவத்தை திருதராட்டிரன் வீரன் எனத் தவறாகக் கருதித் தழுவியதைக் குறிக்கின்றது. வால்மீகி இராமாயணத்தில் சீதைக்குப் பதிலாக அவள் உருவை இராமன் பொன்னால் செய்து வைத்திருந்தான் என்று கூறப்படுகிறது. தருமசூத்திரங்கள், பௌத்த ஜாதகக் கதைகள், கலித்தொகை, அகநானூறு, குறுந்தொகை, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, சிலம்பு போன்ற நூல்களும் படிமங்கள் பற்றியும் செம்பு போன்ற உலோகங்கள் பற்றியும் கூறுவதை அறிகிறோம். வெளிநாட்டினர் குறிப்புகளை நோக்கும் போது, யுவான் சுவாங் 7 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த பொழுது புத்தரது உருவங்களை சீனாவிற்கு எடுத்துச் சென்றதாகக் குறிப்பு உள்ளது. மேலும் இந்தியாவின் பல பாகங்களிலும் செப்புத்திருமேனிகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. பீகாரில் பக்ஸருக்கருகில் சௌசாவில் கிடைத்த

சமணத் தீர்த்தங்கரரின் உருவம் சஹற்தி ரிஷபநாதர் உருவம், பிரம்மபுரியில் யானை, ஆண் பெண் உருவம் போன்றவை கிடைத்துள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஆதிச்சநல்லூரில் கி.மு. 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தாய்த் தெய்வம், சேவல், நாய் போன்ற செப்பு திருமேனிகள் கிடைத்துள்ளன. ஓங்கி உலகளந்த உத்தமனாகிய ''திருவிக்ரமன் செப்புத் திருமேனி கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகவும் காவிரிப்பூம்பட்டினத்தில் மேலையூர் என்ற பகுதியில் கிடைத்த மைத்ரேயர் உருவம் கி.பி 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகவும், பாண்டிக் கொடுமுடி திருமால் ஏறக்குறைய 9-10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகவும் கருதப் படுகிறது.

பல்லவர்காலத்தை அடுத்து சோழர் காலத்தில் செப்புத் திருமேனிகள் அழகின் உச்சநிலையை அடைந்தன. ஆதித்த சோழன், பராந்தக சோழன் காலத்துச் செப்புத் திருமேனிகள் அழகுவாய்ந்தவை. தமிழகத்தில் உள்ள செப்புத்திருமேனிகளில் மிகவும் எழில் வாய்ந்தவை செம்பியன் மாதேவியார், இராசராசன், இரசேந்திரன் காலத்துச் செப்புத் திருமேனிகள் ஆகும்.

சிறப்புப் பெற்ற சோழர்கள் பிரிவாகக் கருதப்படும். கொங்குச் சோழர்கள் தாங்கள் ஆண்ட கொங்கு நாட்டில் கோயில்கள் எழுப்பி அழகான செப்புத் திருமேனிகளைச் செய்தளித்துள்ளனர். தென் கொங்கின் தலைநகராகக் கருதப்படும் கொழுமம் வீரசோழீஸ்வரர் ஆலயத்தில் அழகுவாய்ந்த செப்புத் திருமேனிகள் உள்ளன. இவை எந்த மன்னனால் கொடுக்கப்பட்டது என்று திட்டவட்ட மாக தெரியாவிட்டாலும் இச்செப்புத் திருமேனிகளின் உருவ அமைதி ஆடை அணிகளை நோக்கும்போது கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டிலிருந்து 20 ஆம் நூற்றாண்டு வரையினதாகக் காணப் படுகின்றன. இங்குள்ள ஆலயத்தில் சுமார் 24 செப்புத் திரு மேனிகள் காணப்படுகின்றன. அவற்றில் சில குமரலிங்கத்து கோயில்களைச் சார்ந்தவை. பாதுகாப்பிற்காக இங்கு வைக்கப்பட் டிருக்கின்றன.

இங்குள்ள செப்புத்திருமேனிகளில் ஆடவல்லான் உருவங் கள் மிக அழகு வாய்ந்தவையாக உள்ளன. இப்பொழுது

சிறப்பாக வழிபாட்டில் உள்ள பெரிய நடராஜர் உருவம் 15ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். ஆனால் இங்குள்ள 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டில் நித்தம் நின்றாடுவார் என்று குறிக்கப்பட்டிருப்பது இங்குள்ள மற்றொரு சிறிய நடராஜராக இருக்கலாம்.

நித்தம் நின்றாடுவார் என்பது அழகிய தமிழ்ச் சொல். ஆடவல்லான் உருவங்கள் ஆதித்த சோழன் காலத்திலிருந்து தான் காணப்படுகிறது என்றும், அப்பர் பெருமான் தமது பாடல் களில் அம்பலத்தில் ஆடும் சிவன் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் தமிழகம் தோற்றுவித்த சிறந்த கலைப்படைப்புகளில் ஆடவல்ல பெருமானாக உள்ள நடராஜ மூர்த்தியின் உருவமே உலகோர் அனைவரின் கருத்தையும் கவர்ந்திருக்கிறது. இத்தகைய சிறப்பான நடராஜருக்குக் நிலம் தானமாகக் கொடுத்தது பற்றிக் கொங்குச் சோழன் வீரராஜேந்திரனின் (1207-1250) 45ஆம் ஆண்டுக் கல்வெட்டு கூறுகின்றது. இதுபோல் சிறப்பு வாய்ந்த செப்புப் படிமங்கள் பல இங்கு உள்ளன.

நித்தம் நின்றாடுவார்:

தலையில் ஜடாமகுடம் தரித்து முன்னிரு கைகள் அபய வரதமும் பின்னிரு கைகள் டமருகம், அர்த்த சந்திர ஹஸ்தமாகவும் கொண்டு உள்ளன. ஆடை தொடைக்கு மேல் உள்ளது. ஒரு காது வடிந்தகாதாகவும் ஒரு காது பத்ரகுண்டலத்துடனும் காணப்படும் இத்திருமேனி கி.பி. 12, 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

சிவகாமி அம்மன்:

கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிவகாமி அம்மன் திருமேனியில் பத்மபீடத்தின் மேல் நின்றநிலையில் வல, இடக் கைகள் முறையே கடக ஹஸ்தமாகவும் லோல ஹஸ்தமாகவும் உள்ளன. கணுக்கால் வரை உள்ள ஆடை மடிப்பு மடிப்பாக உள்ளது.

சௌந்திரநாயகி:

கி.பி 13, 14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சௌந்திர நாயகியின் திருமேனி. பத்மபீடத்தின் மேல் நின்ற நிலையில்

உள்ளது. தலையில் கரண்டமகுடம் தரித்தும் கைகள் கடக, வரத ஹஸ்தமாகவும் உள்ளன.

சந்திரசேகரர்:

கி.பி. 13,14- ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். சமபங்கத்தில் நின்ற நிலையில் உள்ள இவ்வுருவம் பின்னிரு கைகளில் மழுமான் ஏந்தியும் முன்னிரு கைகள் அபயம், வரத முத்திரையுடன் கூடியதாகவும் மார்பில் யக்ஞோபவீதம் தரித்தும் காணப்படுகிறது.

சண்டிகேசுவரர்:

கி.பி 14-அம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். கரங்கள் அஞ்சலி ஹஸ்தத்தில் அமைய, மழு தோளின் மேல் சார்த்தப் பட்டுக் காணப்படுகிறது. மார்பில் யக்ஞோபவீதமும் தொடை வரை ஆடையும் உள்ளன.

ஊஞ்சல் அம்மன்:

கி.பி 14- ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். பத்ம பீடத்தின் மேல் உள்ளது. தலையில் கரண்ட மகுடம்உள்ளது. காதுகள் தொள்ளைக்காதாக உள்ளன. கரங்கள் கடக, லோல ஹஸ்தத்தில் உள்ளன.

நடராஜர் (உருவில் பெரியது):

வழிபாட்டில் உள்ள இவர் பார்ப்பதற்கு மிக அழகாகவும், கம்பீரமாகவும் உள்ளார். முன்னிரு கைகள் அபயம் - கஜ ஹஸ்தம், பின்னிரு கைகள் டமருகம், - அர்த்த சந்திர ஹஸ்தத்தில் உள்ள இந்த ஆடும் பெருமான் திருமேனி கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

சிவகாமி அம்மன்:

பெரிய நடராஜருக்கு அருகில் திரிபங்க நிலையில் உள்ளது. கைகள் கடக, லோல ஹஸ்தத்துடன் உள்ளன.

விநாயகர்:

முன்னிரு கைகள், தந்தம், துதிக்கையிலுள்ள மோதகத்தை பிடித்தும், பின்னிரு கைகள் அங்குச பாசத்துடனும் உள்ளன. பத்மபீடத்தின் மேல் அமர்ந்த நிலையிலுள்ள இச்செப்புத் திருமேனி கி.பி 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

துர்க்கை :

இது கி.பி 17- ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சுமார் 1 அடி உயரம் உள்ளது.

இங்கு கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருமால் திருமேனி ஒன்றும் உள்ளது. இங்குள்ள திருமேனிகளில் காலத்தால் முற்பட்டவற்றுள் இதுவும் ஒன்றாகும். மேலும் இங்கு கி.பி. 16 ஆம் நூற்றாண்டை சார்ந்த மாணிக்கவாசகர், திருமால், ஸ்ரீதேவி, படிமங்களும் கி.பி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, சந்திரசேகர், வீரபாகு, அம்மன் படிமங்களும், கி.பி. 18, 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முருகன், பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி பள்ளியறைச் சொக்கர் போன்றவையும் உள்ளன.

7. சிற்பங்கள்

தமிழ்நாட்டில் சிற்பக்கலை தொன்று தொட்டுச் சிறந்த கலையாக இருந்து வந்துள்ளது. சிற்பநூல் விதிகளின் படி தமிழகத்தில் சிற்பங்கள் கல்லாலும், உலோகத்தாலும், மரத்தாலும் கண்ட சருக்கரையாலும், சுதையாலும் இருந்தன என்பதைப் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் கூறும். நடு கற்களைப் பற்றிய செய்திகளிலிருந்தும் சிற்பங்கள் வடிக்கப் பட்டதை அறிந்தாலும் தமிழகத்தில் கி.பி. 5-6ஆம் நூற்றாண் டுக்கு முற்பட்ட கல்லாலான சிற்பங்கள் ஏதும் இதுகாறும் கிடைக்கவில்லை. ஒரு சில நடுகற்கள் கி.பி. 5-6ஆம் நூற் றாண்டைச் சார்ந்தவையாகக் காணப்படுகின்றன. அவற்றையே பண்டைய சிற்பங்கள் என்று கொள்ளலாம். சான்றாக இருளப்பட்டி நடுகல்லைக் கூறலாம். பிள்ளையார்பட்டி பிள்ளையார் சிற்பம் கி.பி. 5, 6 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என அங்குள்ள கல்வெட்டுச் சான்றின் அடிப்படையில் அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இத்தகைய சிற்பங்கள் கொங்கு நாட்டிலும் தொன்மைக் காலத்திலிருந்தே இருந்தன என்பதை நற்றிணை

செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்
தெய்வங் காக்குந் தீதுதீர் நெடுங்கோட்
டவ்வெள் ளருவிக் குடவரை கடுகினு
முருமுடன் அரியினு மூறுபல தோன்றினும்
பெருநலங் கிளரினுந் திருநல வுருவின்
மணி மாயா வியற்கைப் பாவை.............
கொல்லிக் குடவரைப் பூதம் புணர்த்த
புதியியல் பாவை என்றும்

என்று குறிக்கிறது இதனையே. ''கொங்கு மண்டல சதகம்'' ''கொல்லியம் பாவை முல்லை வாணகையாலுள் நெருக்குவதுங்

கொங்கு மண்டலமே'' என்று கூறுவதாலும், கொங்கு நாட்டு அரூர் வட்டத்தில் கிடைத்த பல நடுகற்களாலும் அறியலாம். கொங்கு நாட்டில் கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தெய்வச் சிற்பங்கள் திருமுருகன்பூண்டி, அவிநாசி போன்ற கோயில்களில் உள்ளன. அதே போன்று கொழுமம் சோழீஸ்வரர் ஆலயத்திலும் சிறப்பான சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஜேஷ்டா, பிள்ளையார், பிரம்மா போன்ற சிற்பங்கள் வழிபாடின்றி இருக்கின்றன. கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகச் கூறலாம். துர்க்கை, சண்டிகேசுவரர், காலபைரவர் போன்ற சிற்பங்கள் வழிபாட்டில் உள்ளன. இவையும் 12, 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை எனக் கருதலாம். இச்சிற்பங்கள் கொங்குநாட்டுக் கலைப்பாணி யில் திருமுருகன் பூண்டி, அவிநாசிக் கோயிற் சிற்பங்கள் போல அழகாக உள்ளன.

பிரம்மா:

இச்சிற்பம் கி.பி 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். சமபங்கத்தில் நின்ற நிலையில் தலையில் ஜடாமகுடம் தரித்துப் பின்னிரு கரங்களில் அக்கமாலை, கெண்டியும் ஏந்தி முன்னிரு கரங்கள் அபயம் கட்யவலம்பிதமாக உள்ளன. மேற்கைகளில் கேயூரமும், மார்பில் யக்ஞோபவீதமும் காணப்படுகின்றன. கடிசூத்திரம், உதரபந்தம் உள்ளன. ஆடை மடிப்பு மடிப்பாகக் கணுக்கால் வரை உள்ளது. காலில் கழல் காட்டப்பட்டுள்ளது. தற்போது வழிபாடின்றி உடைந்த நிலையில் உள்ளது.

கணபதி:

கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இச்சிற்பம் தலையில் சிறிய கரண்ட மகுடமும் பின்னிரு கைகளில் மழு, அங்குசமும், முன்னிரு கைகளில் தந்தமும், மோதகமும் வைத்து அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறது.

ஜேஷ்டா:

கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இச்சிற்பம் இரண்டு கால்களையும் சற்று மடக்கிப் பீடத்தின் மீது அமர்ந்து ஒரு கை அபயத்திலும் மற்றொரு கை தொடை மீதும் வைத்துள்ளது.

மாந்தனும் மாந்தியும் இருபுறமும் உள்ளனர். இச்சிற்பம் சனீஸ்வரர் ஆலயத்தினுள் உள்ளது.

வழிபாட்டில் உள்ள சிற்பங்கள்:

துர்க்கை:

அர்த்தமண்டப வடக்கு தேவகோட்டத்தில் எருமைத் தலை மீது நின்றிருக்கும் இத்தேவியின் மேலிரு கைகள் சக்கரம், சங்கு ஏந்தி, கீழிரு கரங்கள் அபயம் கட்யவலம்பித ஹஸ்தத்துடன் உள்ளன. இதன் அமைப்பைக் கொண்டு இச்சிற்பம் கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.

சண்டிகேஸ்வரர்:

இச்சிற்பம் கி.பி. 12- 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சோழீஸ்வரர் கோயில் கருவறையின் வடக்குப்புறத்தில் உள்ள சிற்றாலயத்தில் சண்டிகேஸ்வரர் அமர்ந்த நிலையில் உள்ளார். காதுகளில் பத்ரகுண்டலம் அணிந்து தோளில் மழுசார்த்திய நிலையில் காட்சி தருகிறார்.

காலபைரவர்:

கி.பி. 12-13- ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இச்சிற்பம் ஆடையின்றிச் சமபங்கத்தில் நின்ற நிலையில் காணப்படுகிறது. தலையில் ஜ்வாலா மகுடம், காதில் மகர பத்ர குண்டலங்கள்; பின்னிரு கைகளில் டமருகம், மான், முன்னிரு கைகளில் திரிசூலம் , கபாலம் உள்ளன. இச்சிற்பம் தனிச் சிற்றாலயத்தில் காணப்படுகிறது.

சனீசுவரர்:

சமபங்கத்தில் நின்றநிலையிலுள்ள இச்சிற்பம் 15- ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். பின்புறம் காக்கை வாகனம் உள்ளது. பின்னிரு கைகள் மழு அங்குசம், முன்னிரு கைகள் அபயம் மற்றொரு கை தண்டுபிடித்தும் உள்ளன. ஆடை கணுக்காலுக்கு மேல் வரை உள்ளது. காலில் கழல்கள் காட்டப்பட்டுள்ளன.

தட்சிணாமூர்த்தி:

தட்சிணாமூர்த்திக்குத் தனியாலயம் உள்ளது. வீராசனத்தில் ஜடாமகுடம் தரித்துப் பின்னிரு கைகளில் மழு மான் ஏந்தி; முன்னிரு கைகள் அபயத்துடனும், தொடைமேல் வைத்தும் காட்சியளிக்கிறார். தட்சிணாமூர்த்திக்கு இருபுறங்களிலும் சனகாதி முனிவர்கள் காணப்படுகின்றனர். இச்சிற்பம் வேறு இடத்தி லிருந்து எடுத்து வந்து வைத்ததாக இருக்கலாம். கி.பி. 13-14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

சோழீஸ்வரர் ஆலயத்தின் முன்புறம் உள்ள இரு சிற்றாலயங் களில் விநாயகர், முருகன் ஆகிய இரு தெய்வங்கள் வீற்றிருந்து அருள் புரிகின்றன.இரண்டும் கி.பி. 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

முருகன்:

முருகன் நெற்றியில் கண்ணிமாலை சூடி வஜ்ரம் ஒரு கையில் ஏந்தி மற்றொரு கை கட்யவலம்பித ஹஸ்தத்தில் வைத்துக் காணப்படுகிறார்.

விநாயகர்:

கி.பி. 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இச்சிற்பத்தின் கழுத்தில் அணிகள் மார்பில் யக்ஞோபவீதம் காணப்படுகின்றன. பின்னிரு கைகள் மழு, அங்குசமும், முன்னிரு கைகளில் ஒன்று கொழுக்கட்டை வைத்துக் கொண்டும், மற்றொன்று துதிக்கையைப் பிடித்துக் கொண்டும் உள்ளன.

அம்மன்:

அம்மனுக்குத் தனி ஆலயம் உண்டு. இறைவி பெரிய நாயகி என்று அழைக்கப்படுகிறார். வலக்கை கடக ஹஸ்தத்திலும் இடக்கை லோல ஹஸ்தத்திலும் கொண்டு திரிபங்க நிலையில் நின்றிருக்கிறார். இச்சிற்பம் 15 - 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தாகும்.

கொடுங்கைச் சிற்பங்கள்:

இறைவன் சன்னதி கருவறை, அர்த்தமண்டப வெளிச் சுவர்கள், திருச்சுற்று மாளிகையின் வாயிற்பகுதி அம்மன் கோயில் கருவறைச் சுவர் ஆகியவற்றில் பூதகணங்கள் காணப்படுகின்றன. பொதுவாகக் கொங்கு நாட்டில் பூதகணங்களுக்கு பதிலாக வேட்டுவ வீரர்களின் உருவங்கள் இருக்கும். ஆனால் சோழீஸ்வரர் ஆலயத்தில் நடனமாடும் பெண்கள், மத்தளம் அடிப்பது, கட்டடத்தை தாங்குவது போன்றும் இசைக்கருவிகள் வாசிப்பது போலவும் பல வகையில் உள்ளன. சிவலிங்கத்தை முனிவர்கள் வணங்குவது போன்றும், ஐந்து தலையுடைய நாகராஜன் உருவம் வணங்கிய கரங்களுடனும் இருக்கின்றன. பொதுவாகச் சேரர்கள் நாக வழிபாட்டை அதிகமாக ஆதரித்தனர். நாகவழிபாடு சேர நாட்டில் இருந்தது போல, கொங்கு நாட்டிலும் பல இடங்களில் இருந்தது. இன்றும் கேரளாவில் நாயர்கள் வீடுகளில் நாகத்திற்குத் தனிக் கோயில்கள் கட்டியுள்ளனர். ஆகவே சேரர்களின் ஆதிக்கம் கொங்கு நாட்டில் பரவியிருந்ததாலும் அவர்களின் செல்வாக்கி னாலும் இந்நாக வழிபாடு கொங்கு நாட்டில் பரவியிருக்கலாம். மேலும் கருவறையின் உட்புறச் சுவர்களிலுள்ள பூதகணங்களின் கைகளில் மலர் வைத்திருப்பது போன்று சித்திரிக்கப்பட்டுள்ளது.

காமச் சிற்பங்கள் :

இக்கோயில் கொடுங்கையில் காமச்சிற்பங்கள் (Erotic Sculptures) காணப்படுகின்றன. இவை பொதுவாகக் கொங்கு நாட்டுக் கோயில்கள் பலவற்றில் காணப்படுகின்றன. வட இந்தியாவில் கொனார்க் (ஒரிஸ்ஸா) சூரியனார் கோயிலிலும் கஜுராஹோவிலும் (மத்தியபிரதேசம்) இத்தகைய சிற்பங்கள் காணப்படுகின்றன. மத்திய கால இந்தியாவில் சக்தி வழிபாடு பிரசித்தி பெற்றிருந்தது. இதைச் செழுமை வழிபாடு என்றும் கொள்ளலாம். தந்திரக் கோட்பாட்டின் கூறுகளாக இச்சிற்பங்கள் செதுக்கப்பட்டு வந்தன. இவை தமிழ்நாட்டிலும் ஆங்காங்கு காணப்படுகின்றன. சக்திக்குத் தனிக்கோயில் இருந்தது பற்றி முதல் இராஜேந்திரன் கல்வெட்டு கூறுகிறது. தருமபுரி மாவட்டம் நரிப்பள்ளி, திருவண்ணாமலை மாவட்டம் சின்னையன் பேட்டைக்குளம் ஆகிய இடங்களில் காமச்சிற்பங்கள் வடிக்கப் பட்டுள்ளதை அறிகிறோம்.

மேலும் யாளிவரியில், யானைகள் பிடிப்பது போலவும், சிங்கங்கள் கோபமாகத் திரும்பிப் பார்ப்பது போலவும் உள்ளன.

அம்மன் கோயில் கொடுங்கைச் சிற்பங்கள்:

அம்மன் கோயிலில் உள்ள கொடுங்கைச் சிற்பங்களில் பூதகணங்கள் நாட்டியமாடுதல், இசைக் கருவிகள் வாசித்தல் கட்டடத்தை தாங்குதல் போன்ற சிற்பங்கள் உள்ளன. இதுவன்றித் தென்புறச் சுவரில் சிவலிங்கம் ஒன்றும் அதன் ஒருபுறம் அன்னப் பறவை மேல் நோக்கிச் செல்வது போலவும், மறுபுறம் வராகம் வணங்கிய நிலையில் கீழ் நோக்கிச் செல்வது போலவும் உள்ள இச்சிற்பம் லிங்கோத்பவ மூர்த்தி ஆகும். கருவறையின் மேற்குப் புறத்தில் சிவலிங்கத்திற்கு அருகில் அடியார்கள் தலைதாழ்த்தி வணங்குதல் போன்ற சிற்பங்கள் உள்ளன.

தூண் சிற்பங்கள்:

இங்குள்ள தாண்டேசுவரர் ஆலயத் தூண்களில் சிற்பங்கள் பல உள்ளன. அவை பொதுவாக 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. ஒரு தூணில் விநாயகர் உருவம் மற்றொரு தூணில் பதஞ்சலி, வியாக்ரபாதர் உருவங்கள், மற்றொரு தூணில் பெண் சாமரத்தைக் கீழே தாழ்த்தியும், மற்றொரு தூணில் உள்ள பெண் சாமரத்தை மேலே உயர்த்தியும் வீசுவது போன்று யாளிமுகம், அனுமன், மத்தளம் அடித்தல், மலர்த் தோரணத்தில் குதிரைகள் பாயும் நிலை எனப் பல சிற்பங்கள் உள்ளன.

விமானச் சிற்பங்கள்:

சோழீஸ்வரர் கோயில் விமானத்தில் தெற்கே தட்சிணா மூர்த்தி, மேற்கே விஷ்ணு, வடக்கே பிரம்மா, கிழக்கே லிங்கம் ஆகியவை காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்டும், வண்ணம் தீட்டப்பட்டும் காணப்படுவதால் இதனுடைய பழைய தன்மையில்லை. அதே போல் அம்மன் சன்னதியில் உள்ள விமானச் சிற்பங்களும் புதுப்பிக்கப்பட்டே காணப்படுகின்றன.

இக் கோயிலில் உள்ள நந்தி கொங்கிற்கே உரிய கலைப் பாணியில் பார்ப்பதற்கு அழகாக வடிக்கப்பட்டுள்ளது. கொழுமம்

குமரலிங்கம் இடையில் உள்ள ராஜவாய்க்காலுக்கு அருகில் உள்ள நந்தி குடுமியான்மலையில் காணப்படும் நந்தியின் அமைப்பை ஒத்துள்ளது.

கல்யாண வரதராஜப் பெருமாள் கோயில் சிற்பங்கள்:

இங்குள்ள வழிபடு தெய்வங்களான பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி ஆகியவை கி.பி. 16, 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை யாகும். பெருமாள் மேலிரு கரங்களில் சங்கு சக்கரம் ஏந்தியும் கீழிரு கரங்கள் அபயம் கட்யவலம்பித ஹஸ்தத்திலும் கொண்டு காட்சியளிக்கிறார். இருபுறமும் ஸ்ரீதேவி, பூதேவி காட்சியளிக் கின்றனர். இவ்வாலயத்தின் அர்த்தமண்டபத்தில் லட்சுமி, நம்மாழ்வார், இராமானுஜர், பெரியாழ்வார் போன்ற சிற்பங்கள் உள்ளன. இதில் லட்சுமி சிற்பம் மண்ணுக்கு அடியிலிருந்து கிடைத்ததாகக் கூறுவர். நாயக்கர் பாணியில் கொண்டை போடப் பட்டுள்ளது. நான்கு கரங்களில் மேலிரு கரங்கள் மலர்கள் பிடித்தும் முன்னிரு கரங்கள் அபயம், வரதத்துடனும் காட்சியளிக் கின்றன.

தூண் சிற்பங்கள்:

பொதுவாக மலர் அலங்காரம் சிறப்பாக உள்ளது. ஒரு தூணில் கருடாழ்வார் வணங்கி நின்ற நிலை. இன்னொரு தூணில் நாட்டியமாடும் பெண்ணின் உருவம், மற்றொரு தூணில் வைஷ்ணவி உருவம் ஆகியன காணப்படுகின்றன. பூதவரியில் பூதகணங்கள் இல்லாமல் எழுதகமாக உள்ளது.

மகரதோரணச் சிற்பங்கள்:

மகரதோரணத்தில் சிறு சிறு சிற்பங்கள் உண்டு. லட்சுமி அமர்ந்த நிலை, வீரபாகு, இரணிய வதம், வேணுகோபாலன் போன்ற சிற்பங்கள் காணப்படுகின்றன.

கண்ட சிற்பங்கள்:

பெருமாள் கோயிலில் கண்டத்தில் சிறு சிறு சிற்பங்கள் இருக்கின்றன. ஆனால் செஞ்சாயம் படிந்து விட்ட காரணத்தால்

அவை என்னென்ன சிற்பங்கள் என்று தெளிவாகவில்லை. எனினும் ஏதேனும் ஒரு கதையைச் சித்திரிப்பதாக இருக்கலாம் கல்யாண வரதராஜர் கோயிலில் உள்ள அம்மன் சிற்பம் 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும் கரிவரதராஜப் பெருமாள் கோயிலில் பூதகணங்கள் அழகாக வடிக்கப்பட்டுள்ளன. காசி விசுவநாதர் ஆலயத்தில் முருகன் வள்ளி போன்ற சிற்பங்கள் வழிபாடின்றி இருக்கின்றன. இக்கோயிற் சிற்பங்கள் கி.பி. 13 ஆம் நூற்றாண் டிற்குப் பிறபட்டவை.

8. விழாவும் கோயில் வழிபாடும்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மனிதன் இயற்கையை தெய்வமாக வணங்கினான். இயற்கையைக் கண்டு பயந்தவன் விரைவில் அதன் அழகைக் கண்டு பரவசம் கொண்டு காலப்போக்கில் அதன் மேல் பக்தி கொண்டான். தன்னைப் பாதுகாக்கவோ அல்லது தான் வணங்கும் தெய்வத்தை மகிழ்விக்கவோ பூமி போன்ற இயற்கைக்கு பலி கொடுத்தான். சங்க காலத்தில் இயற்கை அன்னை வழிபாடும் இருந்தது என்பதற்கு ஆதிச்சநல்லூரில் கிடைத்த தாய்த் தெய்வம் சான்றாகும். நடுகல் வழிபாடு போன்றவற்றைத் தொல்காப்பியம் கூறுவதன் மூலம் சங்ககாலத்தில் வீர வழிபாடு சிறப்பாக இருந்தது என அறியலாம். இந்திரவிழாவைப் பற்றிச் சிலம்பும் மணிமேகலையும் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. இந்து மதத்தில் வளர்ச்சி ஏற்பட்டபொழுது சிவன், திருமாலைத்தான் அதிகமாய் போற்றினர். தேவார திருப்பதிகங்கள் பாடப்பட்டன. மாமல்ல புரத்திலுள்ள பல்லவர் கல்வெட்டு, மன்னன் மக்கள் வழிபாட்டிற் காகக் கோயில் கட்டியதாகக் கூறுகின்றது. சோழர் காலத்தில்தான் வழிபாட்டு முறை ஓர் உன்னத நிலையை அடைந்தது. மன்னர்கள் தாம் பிறந்த நட்சத்திரத்தில் கோயிலுக்குச் சென்று வழிபட்டதை அறிகிறோம். மேலும் மன்னர்கள் தலைவர்கள், தனிப்பட்டோர் நிவந்தங்கள் கொடுத்து வழிபட்டதைக் கல்வெட்டுச் சான்று களால் அறிகிறோம். இன்றும் கோயில்களில் வழிபாடும் நித்திய பூஜைகளும் விழாக்களும் நகரப் பகுதிகளிலும் கிராமப் பகுதி களிலும் சிறப்பாக நடைபெறுகின்றன.

கொழுமம் கோயில் கல்வெட்டு, மன்னன் இக்கோயிலைத் தன் ஜென்ம நட்சத்திரத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டதால் அதற்கு நிவர்த்தியாக இக்கோயிலைக் கட்டி சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தததாகவும் கூறுகின்றது. வீரசோழீஸ்வரர்

ஆலயத்தில் பூஜைகள் எவ்வாறு நடத்தப்படுகின்றன, விழாக்கள் எவ்வாறு சிறப்பாக கொண்டாடப்படுகின்றன என்று அறிவது அவசியம்.

இக்கோயில் ஒரு வளமான பகுதியில் உள்ளதால் இக் கோயிலுக்கு ஏராளமான நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டன. ஆனால் காலப்போக்கில் இந்நிலங்கள் பணிபுரிவோர்களுக்குக் கொடுக்கப்பட்டதால், அவர்கள் அதைச் சிறப்பான முறையில் பாதுகாக்காத காரணத்தினால் அவை கோயிலை விட்டு மற்றவர் கள் கைக்கு மாறிவிட்டன.

இக்கோயிலில் நாள் பூஜை, மாதாந்திர பூஜைகள் சிறப்பாகச் செல்வாக்குடன் நடக்காவிடினும், தேவஸ்தான உதவியாலும், தனியார்களின் பக்தி உதவியினாலும் இன்றும் பூஜைகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

நாள் பூஜ்ஜ :

நாள் பூஜையினை நாலுகாலப்பூஜை என்று குறிப்பிடு கின்றனர். காலை 6 மணியிலிருந்து 8½ மணிக்குள் நடத்து வதற்குக் காலசந்தி என்றும் 10½ மணியிலிருந்து 12½க்குள் நடப்பதற்கு உச்சி கால பூசை என்றும் மாலை 6½ மணியிலிருந்து 7க்குள் நடக்கும் பூஜைக்கு சாயரட்சை என்றும் இரவு 7½ மணி யிலிருந்து 8½க்கும் நடக்கும் பூஜைக்கு அர்த்தஜாமப் பூசை என்றும் குறிப்பிடுகின்றனர். தற்பொழுது பொருளாதாரப் பற்றாக் குறை காரணமாக மாலை சந்தி பூஜை மட்டுமே நிகழ்கிறது. காலையில் இங்குள்ள குருக்கள் திருமஞ்சனக் குடத்தில், ஆம்பி ராவதி புனிததீர்த்தம் கொண்டு வந்து அபிஷேகம் செய்வார். கல்யாணவரதராஜப் பெருமாள் கோயிலுக்கும் ஆம்பிராவதி நதி நீர் தான் அபிஷேகத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது. காலை சுமார் 7 மணிக்கு திருமஞ்சன குடத்துடன் நதிக்குச் சென்று அங்கு மாவிலை மலர். சந்தனம் ஆகியவற்றை அக் குடத்தில் வைத்து நீரை மேளதாளத்துடன் சன்னதிக்கு கொண்டு வந்து, சோழீஸ்வரர்க்கு அபிஷேகம் செய்வார்கள். இம்முறை இப்பொழுது கைவிடப்பட்டாலும், ஆம்பிராவதி நீர் தான் கருக்கலில் கொண்டு வரப்படுகிறது. விசேட காலத்தில் நீர், எண்ணெய், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், கரும்பு,

எலுமிச்சம்பழம், இளநீர், திரவியப்பொடி, மாப்பொடி, மஞ்சள் பொடி, சந்தனம்,பன்னீர் கலந்து விபூதி, பூர்ண கும்பாபிஷேகம் நடக்கும் .

சாதாரண நாள்களில் காலையும், மாலையும் வீரசோழீஸ்வரர் மற்றும் தாண்டேசுவரருக்கும் அதன் பின்பு சிறு ஆலயங்களுக்கும் கடைசியில் அம்மனுக்கும் பூஜை நடக்கின்றது. முதலில் கோயில் பசு இருந்தது. அதன் பால்தான் வீரசோழீஸ்வரர்க்கு அபிஷேகத்திற்குப் பயன்படும். ஆனால் இன்று கோயில் மாடுகள் வளர்க்கப்படுவதில்லை. வெள்ளி தோறும் இக் கோயிலில் வாராந்திர பூஜை நடத்துகின்றனர். மேலும் மாதாந்திர விழாக்களும் நடைபெறுகின்றன.

மாதம் இருமுறை விழா:

கார்த்திகை மாதம் 15 நாள்களுக்கு ஒரு முறை வளர்பிறை. திரயோதசி, தேய்பிறை திரயோதசி அன்று (பிரதோசம்) நந்தி கேசுவரர், ஈஸ்வரர் விக்ரகங்களுக்கு மாலை 4½ மணி முதல் மற்றும் 6 மணி வரை பூஜை நடக்கும். பின்பு ரிஷப வாகனத்தில் பிரதோஷ நாயகர், சந்தியா நிருத்த மூர்த்தி, சௌந்திரநாயகி ஆகிய திருமேனிகளைப் பிரகாரச் சுற்றில் எடுத்துவருவர்.

சித்திரை:

சித்திரை மாதம் சித்ராபௌர்ணமி சிறப்பாக நடைபெறும். இவ்விழா கொண்டாடுவதற்காக அமராவதி நதிக்கரையில் சித்ராபௌணர்ணமி மண்டபம் ஒன்று கட்டியுள்ளனர். ஆனால் அம்மண்டபம் இன்று இடிந்த நிலையில் உள்ளது. ஈஸ்வரன் மற்றும் அம்மனுக்கு அபிஷேகம் நடத்துவர். இந்த பூஜை காலையில் சுமார் 10 மணி அளவில் நடைபெறும். மாலையில் சாமி புறப்பாடு நடைபெறும். சப்பரத்தில் உமாசகித சந்திரசேகரரை பௌர்ணமி மண்டபத்திற்குக் கொண்டு சென்று நீராட்டி அலங்காரம் செய்து, தீபாராதனை நடத்திவிட்டு தெய்வத்திற்குப் படைத்த சுண்டல், பானகம் இவற்றுடன் நீர்மோர் போன்றவற்றை அங்கு கூடியுள்ள பக்தர்களுக்கு கொடுப்பார்கள். பின்பு சாமி ஊர்வலமாக எடுத்து வரப்படும்.

சித்ராபௌர்ணமியன்று சிவன் கோயிலில் எவ்வாறு விழா நடக்கின்றதோ அதே போன்று கல்யாண வரதராஜப் பெருமாள் கோயிலிலும் நடைபெறும். அங்குள்ள விஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவிக்கு அபிஷேகம் நடைபெறும். பின்பு அங்கிருந்து பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி விக்ரகத்தைக் கொண்டு வந்து சித்ராபௌர்ணமி மண்டபத்தில் வைத்து பூஜை நடத்தி ஊர்வல மாகக் கொண்டு செல்வர்.

வைகாசி:

வைகாசி மாதத்தில் நாள் பூஜையைத் தவிரக் குறிப்பிடும் படி எந்த விழாவும் நடைபெறுவதில்லை.

ஆனி:

ஆனிமாதம், ஆனித்திருமஞ்சனம் அல்லது உத்திர நட்சத் திரத்தில் நடராஜருக்கு விழா நடக்கும் போது மலர் மாலைகளால் அலங்காரம் செய்வர். அருகில் சந்திரசேகரர் சிலையும் வைத்து அலங்கரிப்பர். பின்பு பஞ்சாமிர்தம், இளநீர், பால் போன்ற பொருள்களால் அபிஷேகம் செய்து கூடியுள்ள பக்தர்களுக்குப் புளிசாதம், தயிர்சாதம் பஞ்சாமிர்தம் போன்றவற்றைக் கொடுக் கின்றனர்.

ஆடிமாதம்:

ஆடிப்பதினெட்டு சிறப்பாக நடக்கும். இத்திருவிழாவில் இங்குள்ள லிங்கத்திற்கும் அம்பாளுக்கும் எல்லாவிதமான பூஜையும் நடத்துவர். அப்பொழுது அம்பாள் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி திருமேனிகளை (படித்துறைக்கு) ஆம்பிராவதி ஆற்றங் கரைக்கு கொண்டு சென்று மண்குளம் கட்டி, சாமிக்குக் காதோலை, கருகுமணி, சிவப்பு ஆடை, தேங்காய் வெற்றிலை பாக்கு ஆகியவற்றைப் படைத்துப் பூஜை செய்வர். எள்ளுசாதம், சர்க்கரைச்சாதம், இரண்டையும் அங்கு கூடியுள்ள பக்தர்களுக்குக் கொடுப்பார்கள். சாமி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். தெய்வமே சென்று காவேரியம்மனை பூஜை பண்ணுவதாக ஒரு ஐதீகம் உள்ளதால் தெய்வச் சிலைகளை எடுத்துச் சென்று இவ்வாறு நடத்துவதாகக் கூறுகின்றனர்.

ஆவணி மாதம்:

விநாயக மூர்த்திக்கு ஆவணி மாதத்தில் முக்கியமான பண்டிகை கொண்டாடப்படும். அப்பொழுது இங்குள்ள விநாயகருக்கு 16 வகை அபிஷேகங்கள் செய்வர். கொழுக்கட்டை வைத்துக் காலை தீபாராதனை நடக்கும். மண்ணில் செய்த மற்றொரு விநாயகர் உருவத்தையும் அருகில் வைத்து வழிபாடு செய்வர். மறுநாள் காலையில் மறு பூஜை செய்த பின் அந்த மண்ணில் செய்யப்பட்ட விநாயகரை ஆற்றில் விட்டுவிடுவர். இங்குள்ள விநாயகர் விக்ரகத்தை அலங்கரித்து விநாயகர் சதுர்த்தியன்று ஊர்வலமாக எடுத்து வருவர். இதே மாதத்தில் மற்றொரு விழா நடைபெறும். அதற்கு ஆவணிமூலம் என்று பெயர்.

ஆவணிமூலம்:

ஆவணி நாளில் வெள்ளியிலேயே செய்த கூடை, மண்வெட்டி ஆகியவற்றை நடராஜர் முன்பு வைத்து நடராஜருக்கு அபிஷேகம் செய்வர். இது பாண்டிய நாட்டுச் செல்வாக்கால் ஏற்பட்ட திருநாள் என்று கூறலாம்.

புரட்டாசி:

நவராத்திரியன்று ஒன்பது நாள் அம்மனுக்கு அபிஷேக ஆராதனை நடக்கும். சுக்லபட்ச வளர்பிறை முதல் நாள் பிரதமை ஆரம்பித்து 9 நாள்கள் அம்மனுக்கு சிறப்புப் பூஜை செய்யப் பட்டு நவமியன்று முடிவு பெறும். இத்துடன் வில், அம்பு முதலியவை கொண்டு ஆயுதபூஜை 9-ஆம் நாள் இரவு நடைபெறும். 10-ஆம் நாள் விஜயதசமியன்று அம்பு போடுதல் என்ற விழா நடக்கும். சந்திரசேகரர் குதிரை வாகனத்திலும் அம்பாள் சப்பரத்திலும் வைத்து இவ்விழாவை ஆரம்பிக்கிறார்கள். காலையில் சந்திரசேகரர் திருமேனி கோயிலைச் சுற்றி வலம் வரும். பின்பு உமாசகித சந்திரசேகரரை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனத்தில் வலமாக எடுத்து வருவர். முதல் நாள் அன்று யாக சாலை பூஜை நடைபெறும். 10 நாள்களும் காலை, மாலை ஹோமம் வளர்ப்பர். 7-ஆம் நாள் தனி அம்மன் ஊர் அழைத்தல் முறைக்காக புறப்பாடு நடக்கும். 8 ஆம் நாள் நடராஜர் அம்பாளுக்குத் திருமணம். 9-ஆம் நாள் சந்திரசேகரர் அம்பாள்

பெரிய தேரில் ஊர்வலம் வரும். 10-ஆம் நாள் சிறிய தேரில் ஊர்வலம் வருவதற்கு முன்பே பரிவட்டம் கட்டும் நிகழ்ச்சி நடைபெறும். பரிவட்டம் பொதுவாக இங்குள்ள எஜமானர் குடும்பத்தினர் நடத்துவார்கள். அடுத்துக் கோயில் அல்லது அவ்வூர் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பரிவட்டம் கட்டுவார்கள். தேர் மாலை 4 மணியிலிருந்து ஊர்வலமாக இழுத்துவரப்படும். கல்யாண வரதராஜப் பெருமாள் கோயிலிருந்து பெருமாள் சாமி குதிரை வாகனத்தில் எடுத்து செல்லப்படும். குட்டவயல் என்ற இடத்தில் (ஊருக்குச் சற்று தள்ளியுள்ள காடு) வன்னியசுர சம்ஹாரம் நடைபெறும். இந்த குட்டவயல் என்ற இடத்தில், வாழை, வன்னி மர இலை, மாவிலையில் வன்னியசுரன் அமைக்கப்படும். பின்பு சாமி அம்புவிடுப்பது போன்று பாவனை செய்வர். அதன் பின் சாமி ஊர்வலம் வரும். அருகில் உள்ள பல ஊர்களிலிருந்தும் பக்தர்கள் வந்து இந்த விழாவில் கலந்து கொள்வர்.

ஐப்பசி:

இங்குள்ள அனைத்துச் சிற்பங்களுக்கும், செப்புத்திருமேனி களுக்கும் குறிப்பாக வழிபாட்டில் உள்ள தெய்வ உருவங்களுக்கு எண்ணெய் அபிஷேகம் செய்து புத்தாடைகள் உடுத்தி பூஜை நடத்துவர். அன்று இரவு சந்திரசேகரர், அம்மன் விக்கிரகங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

கார்த்திகை:

கார்த்திகை அன்று முருகனுக்கு 16 வகையான அபிஷேகம் செய்வர். கார்த்திகை தீபத்தன்று கோடி தீபம் அல்லது சொக்கப் பானை கொளுத்துதல் என்ற ஒரு நிகழ்ச்சி நடைபெறும். கார்த்திகை தீபத்தன்று சந்திரசேகரர், அம்பாள், முருகன் திரு மேனிகள் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு முடிவில் கோயிலை அடையும்போது அந்த தெய்வங்களுக்கு முன்னிலையில் வைக்கோல்கள் வைத்து எரித்து அதை எடுத்து எல்லோரும் பூசிக் கொள்வர்.

மார்கழி:

இங்கு மார்கழித் திருவாதிரைதான் மாத விழாக்களில் மிகவும் சிறப்பானது. இதையே வருடாந்திர விழாவாகவும்

கொள்ளலாம். இவ்விழா 11 நாள்கள் நடைபெறும். திருவாதிரை விழாவின் தொடக்கம் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்படும் பின்பு தேரிலிருந்து நடராஜர் மற்றும் அம்மனைப் பல்லக்கு வைத்துச் சின்ன மேள தாளத்துடன் கோயிலின் உள்ளே கொண்டு வருவர். 10ஆம் நாள் சூரிய உதயத்தின் பொழுது நடராஜருக்கு தீப ஆராதனை நடைபெறும். பின்பு பட்டி சுற்றுதல் என்ற நிகழ்ச் யில் பல்லக்கு அரசமரத்தை 102 முறை சுற்றிவரும். அடுத்து திருஊடல் வாசித்தல் நடைபெறும். காமதேனு வாகனத்தி உமாசகித சந்திரசேகரர் ஊர்வலமாக வரும். 11ஆம் நாள் கொ இறக்குவார்கள். பூஜை செய்து அஷ்டதிக்குபாலர்களை அவர ரிடம் செல்லுமாறு கூறுவார்கள். 11 ஆம் நாள் மஞ்சள் நீராடுத நடக்கும். அன்று குருக்கள் தங்கள் வீட்டில் வளர்த்து வைத்துள் முளைப்பாரியை ஆற்றில் கொண்டு விடுவார்கள். இத்துட விழா முடிவு பெறும். இந்த விழாவில் ஹோமம் நடத்துவதற் கும்பகோணம், தஞ்சாவூர், மயிலாடுதுறை, கிருஷ்ணராஜபுரம் மன்னார்குடி போன்ற ஊர்களில் இருந்து 100 பேருக்கு மே பிராமணர்கள் வருவார்கள். சப்தகானம் சொல்லி உற்சவத்தி 10 நாள்களும் இருந்து, காலை மாலை இருவேளையும் நான் வகை வேதகீதையும் ஓதுவர். இவர்களுக்கு உணவு, புதுஉடை குறிப்பிட்ட அளவு பணம் இவற்றை எஜமான் குடும்பத்தினை சேர்ந்தவர்கள் கொடுப்பார்கள்.

சுமார் 100 வருடத்திற்கு முன்பு கொழுமத்தின் அருகில் உள்ள கிராமக் குளத்தில் தெப்பத் தேர் உற்சவம் நடைபெற்றுள்ளது தேர்த்தெப்பம் என்பது மரத்தால் தகரத்தாலும் செய்யப்பட்டு இருக்கும். அத்தேர் வரும் போது மத்தளம் வாசிக்க, தாசிகள் விளக்கு ஏந்தி நடனமாடி வருவர். ஒரு பக்கம் குருக்கள், சாமி விக்ரகம் எஜமானர் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஒருவர் இருப்பர். தேர் 10 சுற் நீரில் வரும். 100 வருடங்கள் வரை சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்ச்சி 100 வருடத்திற்கு முன்பு தெப்பத்தில் நீர் புகுந்து அப்படியே குளத்தில் மூழ்கிவிட்டதாலும், எஜமானர் குடும்பத்தை சேர்ந்த சிறுவன் அதில் இறந்து விட்டதாலும் அந்த நிகழ்ச் நிறுத்தப்பட்டு விட்டது.

தை:

தைமாதம் 10 ஆம் தேதி சிவன், பார்வதிக்கு தீபாராதனை நடைபெறும். காலை 10 மணியில் இருந்து 11 மணிக்குள் அபிஷேகம் நடக்கும். ரிஷப வாகனத்தில் உமாசகித சந்திரசேகர மூர்த்தி ஊர்வலமாக வருவார். இங்கு ஆம்பிராவதி நதிக்கரையில் உள்ள முனிமேடைக்குக் கொண்டு சென்று நீர் அபிஷேகம் செய்வர். பின்பு பக்தர்கள் எல்லோரும் குளிப்பர். இதற்குத் தீர்த்த உற்சவம், சங்கிரமம் என்று பெயர். அதற்குப் பின்பு சாமி ஊர்வலம் வரும்.

பங்குனி:

பெருமாள், ஈஸ்வரன், அம்பாளுக்கு அபிஷேகம் நடக்கும். பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி பெருமாள் கோயிலிருந்தும், உமாசகித சந்திரசேகரர் சிவன் கோயிலிருந்தும் ஊர்வலமாக வரும். பொதுமக்களுக்கு அன்று நீர்மோர், சுண்டல் கொடுப் பார்கள். இவ்வாறு இங்குள்ள ஆலயங்களில் விழாக்கள் நடை பெறுகின்றன.

9. கல்வெட்டுச் செய்திகள்

தமிழ்நாட்டில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இதுவரை இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட கல்வெட்டுகள் படி எடுக்கப் பட்டுள்ளன. ஆனால் வெளிவந்தவை மிகவும் குறைவு. அவ்வாறு வெளியிடப்படாத கல்வெட்டுகளில் கொழுமம், குமாரலிங்கம் கல்வெட்டுகளும் அடங்கும். இக்கல்வெட்டுகளின் உள்ளடக்கச் சுருக்கம் மட்டும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. கரிய வரதராஜ பெருமாள் கோயில் தவிர மற்ற கோயில்களில் வெள்ளை யடிக்கப்பட்டிருந்ததால் தெளிவாகப் படித்தெழுத இயலவில்லை. சில துண்டுக்கல்வெட்டுகள் வெங்கடரமண பெருமாள் கரியவரதராஜப் பெருமாள் கோயில்களில் உள்ளன.[1]

கொழுமம், குமரலிங்கம் ஆகிய ஊர்க் கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 18 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சார்ந்தவை. குமரலிங்கம் கோயில்கள் சிலவற்றில் உள்ள கல்வெட்டுகள் அக்கோயில்களுக்குரியவை அல்ல. சில கொழுமத்தில் இருந்து கொண்டு செல்லப்பட்டவை. சில வெளியூர்களிலிருந்து கொண்டு வரப்பட்டவை. கரந்தை ஆதித்தேசுவரம் கோயில் கல்வெட்டு ஒன்றும் ஆற்றோரத்து வெங்கடரமணசாமி கோயிலில் இருக்கிறது. கொழுமம் வீரசோழீஸ்வரர் கோயிற் கல்வெட்டுகளும் குமரலிங்கம் கரிய வரதராஜ பெருமாள் கோயில் கல்வெட்டுகளும் பண்டு தொட்டு இடம் பெயராமல் இருப்பவை. கல்வெட்டுகள் அனைத்தும் அழகிய எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளன. மெய்யெழுத்து எங்கும் புள்ளியிடப்பெறவில்லை. கல்வெட்டுகளில் நிறையப் பிழைகள் உள்ளன. சில எழுத்துகள் விடுபட்டுள்ளன. பெரும்பாலும் மறதியால் விடுபட்டிருக்க வேண்டும். சில எழுத்துக்கள் விடுபட்ட இடத்திற்கு மேலேயோ கீழேயோ எழுதப்பட்டிருப்பதையும் காண முடிகிறது. ஒரு கல்வெட்டு முடியும் இடத்திலேயே அடுத்த

கல்வெட்டு தொடங்குகிறது. சில கல்வெட்டுகள் தேவ கோட்டத்திலும் எழுதப்பட்டுள்ளன. சில கல்வெட்டுகள் அந்தராளங்களில் உள்ளன.

அரசர்கள்:

இங்குள்ள கல்வெட்டுகளில் கொங்குச் சேரவம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள். பாண்டியர்கள், ஒய்சாளர்கள், நாயக்கர்கள் மற்றும் பிற்காலத்து மன்னர்கள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. கொங்குச் சோழர்களில் வீரசோழன், வீரராசேந்திரன், விக்கிரம சோழன், வீரநாராயணன், கரிகாலன் போன்ற மன்னர்கள் கல்வெட்டுகள் உள்ளன. பாண்டியர்களில் வீரபாண்டியன் கல்வெட்டும் ஒய்சாளர்களில் வீரசோமேஸ்வரன் கல்வெட்டும் உள்ளன.

அரசனுடைய ஆட்சியாண்டு கூறும் போது சில கல்வெட்டுகளில் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திரு நல்லியாண்டு என்று கூறப்படுகிறது. இது கொங்கு நாட்டில் எல்லா கோயிற் கல்வெட்டு களிலும் காணப்படும் முறை. சில கல்வெட்டுகளில் எதிராமாண்டு காணப்படுகிறது. இவ்வாறு எதிராமாண்டு கூறும் முறை பாண்டியர் கல்வெட்டுகளில் மிகுதியும் உண்டு. அந்த முறையே கொங்கு நாட்டிலும் பின்பற்றபட்டது போலும். எதிராமாண்டு கூறப்படும்போது கூட்டிக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு இராசகேசரி பன்மர்க்கு யாண்டு பத்தாவதற்கெதிர் ஒன்பதாவது என்று வந்தால் ஆட்சியாண்டு பத்தொன்பதாகும். சில கல்வெட்டுகளில் சக ஆண்டும் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. இதனால் வரலாற்றாண்டு வரையறுப்பது எளிதாக உள்ளது.

மெய்க்கீர்த்தி:

'கொங்குச் சோழர்களில் ஒரே ஒரு மன்னன் மெய்க்கீர்த்தி வெளியிட்டுள்ளான். அவன் முதல் விக்கிரமசோழன் என்பவன் - அந்த மெய்க்கீர்த்தியும் அவனுடைய வெற்றிச் செய்தி எதையும் கூறவில்லை. மாறாக அவனுடைய நீதி தவறாத ஆட்சியைப் பற்றிக் கூறுகிறது. கொழுமம் குமரலிங்கம் கல்வெட்டுகளில் சில மன்னர்களின் கல்வெட்டுகள் மெய்க்கீர்த்தி போன்ற சமஸ்கிருத ஸ்லோகத்துடன் காணப்படுகிறது. இந்த ஸ்லோகம் வீரராஜேந்திரன், வீரசோழன், வீரபாண்டியன் போன்ற மன்னர்களுக்கு வருகிறது.

[illegible]

[illegible]

இவ்வாறு வீர ராஜேந்திரனின் ஒரு கல்வெட்டின் தொடக்கத்தில் வருகிறது.

வீரசோழன்: (1183- 1207)

கொழுமம் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் அரசர்களுள் காலத்தால் முந்தியவன் இவனே. கொங்குச் சோழன் குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் மீது படை எடுத்தபோது இளவரசன் வீரசோழனின் சாமந்தன் ஒருவன் மதுரைக்கருகில் உள்ள தென்கரை என்ற ஊரில் தங்கியிருந்தான். இந்த வீரசோழன் மேலே கூறப்பட்ட வீரசோழன் ஆவான். இவன் இரண்டு கொங்கினையும் ஒன்றாக ஆண்டவன். அதாவது வடகொங்கு தென்கொங்கு இரண்டும் இவன் ஆட்சியில் ஒன்றாக இருந்தது. இவன் ஆட்சிக் காலத்தில் சூரிய கிரகணம் ஒன்று ஏற்பட்டது. இந்த சூரிய கிரகணமும் அரசனுடைய ஜென்ம நட்சத்திரமும் ஒரே நாளில் வந்தன. அதனால் ஏற்பட்ட தோஷத்தைப் போக்க வீரசோழீஸ்வரர் என்ற பெயரால் கோயிலை எடுப்பித்தான். (க.வெ. எண் 1) அது மட்டுமன்றி பெருமாள் கோயிலுக்கு நிறையத் தானம் செய்துள்ளான். இவனுடைய பெயரில் ஊர், வாய்க்கால், ஏரி போன்றவை ஏற்பட்டன. இந்தக் கோயிலை கட்டிய கண்ணப் பட்டன் என்பவன் கோயிலின் ஸ்தானத்தார் பதவியையும் வகித்தான். அரசன் இக்கோயிலுக்கு நிறைய நிவந்தங்கள் அளித்தான். அதுமட்டுமன்றி இவன் பெயரில் வீரசோழன் திருமடைவளாகம் என்ற ஒரு மடைவளாகமும் இருந்தது. இவன் சிறப்புடைய ஒரு பிள்ளையார் கோயிலும் எடுக்கப்பட்டது.

ஆசாரியன்:

வீரசோழீஸ்வரர் கோயிலை எடுப்பித்த ஆசாரியனுக்குச் சில நிவந்தங்களும் உரிமைகளும் அளித்துள்ளான் இவ்வரசன். இக்கோயிலுக்கு யாராவது சிற்பம் செய்தால் அதை அந்த ஆசாரியன்தான் செய்ய வேண்டும். தர்மம் செய்தால் அதற்குரிய

சாசனத்தை இந்த ஆசாரியன்தான் கோயிலில் வெட்ட வேண்டும். உலோகத்திலோ அல்லது கல்லிலோ சிலை செய்தால் கூலியாகப் பதினொரு மாடை பெற உரிமையும் அளித்தான். யாராவது தன்மம் செய்தால் அந்தத் தன்மத்தில் பாதி இவனுக்குச் சேர வேண்டும் என்று உரிமையும் சேர்த்து அளித்தான். இந்த ஆசாரியனுக்கு வீரசோழ ஆசாரியன் என்று பெயர் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவன் ''ராஜ ராஜப் பெருந் தச்சன்'' இதே மரபு இங்கும் காணப்படுகிறது. இவன் ஆசாரியன் அவன் பெருந்தச்சன் என்ற வேறுபாடும் குறிப்பிடத்தக்கது.

வீரசோழன் காலத்தில் இருந்த அரசியல் தலைவர்கள் பற்றியும் கூறவேண்டும். செங்கண் சோமன் என்கிற அனுத்திர பல்லவரையன் கண்ணாடிப் புத்தூர்க் கல்வெட்டில் கூறப்படு கிறான். சுந்தரபாண்டியன் என்கிற குலோத்துங்க அனுத்திர பல்லவரையன் என்பவன் கீரனூர்க் கல்வெட்டில் கூறப்படுகிறான். அரசனுடைய அதிகாரிகளில் ஒருவன் (சாத்திர்வியன் மூவேந்த வேளான்) என்பவன் 100 பிராமணர்களுக்கும் 100 தபஸியர் களுக்கும் உணவளிக்க ஏற்பாடு செய்தான். கண்டராதித்த செட்டி என்கிற அதிராஜ ராஜ கண்டியத்தேவன் என்பவன் சாமந்தனாகக் குறிக்கப்படுகிறான். செம்பியன் உத்தரமந்திரி என்பவன் குறிக்கப் படுகிறான். இந்த அரசனுடைய மகள் ''அந்தக்கண் செயங் கொண்ட சோழ ஆள்வார்'' என்பது கல்வெட்டால் அறிய வருகிறது. இவருடைய மற்றொரு பெயர் 'உலகுடைய முக்கோக் கிழானடி'' என்பது. இவள் பெருமானுக்கு நிவந்தம் அளித் துள்ளார்.

வீரசோழன் காலத்தில் தஞ்சைச் சோழன் மூன்றாம் குலோத் துங்கன் கொங்கில் படையெடுத்து இருக்கிறான். படையெடுத்த அரசன் கரூர் வரை வந்து வெற்றி பெற்றிருக்கிறான். வீரசோழனின் தந்தை (கொங்கு) குலோத்துங்கன் காலத்தில் தான் (கொங்குச் சோழர்கள்) பாண்டி நாட்டின் மேல் படையெடுக்க நேர்ந்தது. தன்னுடைய மைத்துனன் குலசேகர பாண்டியனுக்கு ஆட்சி உரிமையை மீட்டுக் கொடுக்கப் பராக்கிரம பாண்டியன் மீது படையெடுத்தான். அதில் வெற்றியும் பெற்றான்.

வீரராஜேந்திரன்:

இவன் இராஜகேசரி எனப் பெயர் பூண்டு. இரு கொங்கும் ஆண்டவன். கோயில்களுக்கு நிறைய நிவந்தங்கள் கொடுத்து 45 ஆண்டுகள் அமைதியான ஆட்சி நடத்தினான். குமரலிங்கம் கல்வெட்டு ஆட்சியாண்டும், சக ஆண்டும் 1153 என்று குறிப்பதால் ஆட்சிக்கு வந்த ஆண்டினை எளிதாக நிர்ணயிக்கலாம்.

இவன் ஆட்சிக் காலத்தில் கரைவழி நாட்டில் கொங்கு மன்னன் ஒருவனுடைய படையெடுப்பால் கொழுமம், கரைவழி நாடு அழிவுற்றது. இந்த அழிவிலிருந்து மீள இவ்வரசன் இரட்டயம்பாடி என்ற ஊரைத் தானமாக அளித்தான். இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையின்படி (ARE 143/1909) அது வீர ராஜேந்திரனுடைய படையெடுப்பே என்று கருதலாம். இந்த அரசன் பெயரில் உள்ள கல்வெட்டில் ''நாம் படை ஏற்றி கொழுமம் கரைவழி நாடும் அழிந்தது'' எனக் கூறப்பட்டுள்ளது.

இவன் காலத்தில் நடந்த அந்த நிகழ்ச்சியில் வீரசோழீஸ் வரர் கோயில் மட்டுமன்றி கரைவழி நாட்டில் இருந்த வேறு சில கோயில்களும் அழிவுக்குள்ளாயின. அதிராஜராஜீஸ் வரமுடையார், அம்மன் கோயில், வீரராஜேந்திர ஈஸ்வரமுடையார், ராஜராஜீஸ்வரமுடையார், திருமருதுடையார் கோயில், ஆகிய வையும் அழிவுக்குள்ளாக, அதற்கு ஈடாக வைகாலி நாட்டு இரட்டயம் பாடி ஊர் வருவாய் முழுவதையும் செலவிட உத்திர விடப்பட்டிருந்தது. இக்கோயில்களை மீண்டும் அழிக்காமல் தடுக்கப் படைவீரர்களை நிறுத்தி வைத்தனர்.

வீரராஜேந்திரன் காலத்தில் நிகழ்ந்த இந்தப் போர் உள் நாட்டுச் சண்டை ஆகும். இரண்டு கொங்கு மன்னர்களுக் கிடையில் சச்சரவுகள் இருந்தன. அதற்குரிய சான்றுகள் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் மெய்க்கீர்த்தியில் கிடைக்கிறது. இரண்டு கொங்கு மன்னர்களையும் சிறைப்படுத்தி அவர்களுக் கிடையே உள்ள சச்சரவுகளைப் பற்றிப் பாண்டியன் விவரமாக கேட்டான். அதற்குப் பிறகு விடுதலை செய்து அவரவர் பகுதியை ஆட்சி செய்து வருமாறு பணித்தான். அவரவர்க்குரிய எல்லையை மீறினால் மரணதண்டனை கிடைக்கும் என்றும் எச்சரித்து அனுப்பினான். இந்த நிகழ்ச்சிக்குப் பின் கொங்கு மன்னர்கள் இரண்டு கொங்கினையும் ஆண்டதாகக் கூறிக் கொள்ளவில்லை.

இவன் காலத்தில் கொங்கு நாட்டில் பல்வேறு பாதுகாப்புக் கோட்டைகள் இருந்தன. அவற்றில் குறிப்பிடத்தக்கது. புலம்பிரைக் கோட்டை என்பதாகும். இந்தக்கோட்டை 1000 வீரர்களால் பாதுகாக்கப்பட்டது. வீரர்களுக்குத் தலைமை தாங்கியவன் கோக்கண்டர் பல்லவரையன். பாண்டி மண்டலத்துத் திரு மாலிருள் சோலைக் கோயில் ஆழ்வார் பதின்மர்க்கு அமுது படிக்கெனக் கொங்கு நாட்டுக் கரைவழி நாட்டில் நிலம் அளிக்கப்பட்ட நிகழ்ச்சி இவனுடைய 25-ஆம் ஆட்சி ஆண்டில் நிகழ்ந்தது. இந்தத் தானம் வீரராஜேந்திரன் சந்தி என்ற பெயரால் அளிக்கப்பட்டது.

இவனுடைய இரண்டு பெண் மக்களுள் ஒருத்தியை முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்கு மணம் முடித்து வைத்தான். அடுத்தவள் மாறவர்மன் விக்கிரமபாண்டியன் மனைவி யானாள். இவனுடைய மகன் விக்கிரம சோழன் ஆட்சிக்கு வருமுன் பாண்டிய நாட்டில் தங்கி இருந்தான்.

வீரராஜேந்திரனுடைய மனைவி பெயர் இளையாண்டி . இவன் கீழ் இருந்த அரசியல் தலைவர்கள் சோழன் லங்கேசுவரன். உத்தமசோழன் - பல்லவரையன். வீரராஜேந்திர அனுத்திரப் பல்லவரையன் விலாமிங்கதேவன் சுந்தரன் அதிசய சோழன் என்கிற குலோத்துங்க சோழ இருங்கோளன் போன்றவர்கள். இவ்வரசன் கல்வெட்டுகளில் நச்சினார்க்கினியன் என்ற பெயர் வருகிறது. இவன் வீரராசேந்திரன் மகன் ஆகலாம்.

விக்கிரமசோழன்:

விக்கிரமசோழனின் ஆட்சி ஆண்டு தொடக்கம் இரண்டு விதமாக இருப்பதால் இரண்டு விக்கிரம சோழர்கள் இருந் திருக்கக்கூடும் என்று கே.வி. சுப்ரமணிய அய்யர் அவர்கள் கருதுகின்றார். ஒரு கல்வெட்டில் சக ஆண்டு 1885 ஆம் ஆண்டு குறிப்பிடப்படுகிறது. மற்றொரு கல்வெட்டில் சக ஆண்டு 1197ஆம் ஆட்சி ஆண்டு காணப்படுகிறது. இந்த ஆண்டுக்கும் முன் குறிப்பிடப்பட்ட ஆண்டுக்கும் நிறைய வேறுபாடு இருப்பது தெளிவாகத் தெரிகிறது. இப்போது கிடைக்கிற சான்றுகளை மட்டும் வைத்துக் கொண்டு இரண்டு விக்கிரம சோழர்கள் இருந்தனர் என்று முடிவு கட்டுவதும் கடினம் என்கிறார்.

கொழுமத்தில் மூன்றாம் விக்கிரம சோழன் கல்வெட்டுகள் உள்ளன. ஒன்று 23 ஆம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்தது, மற்றது 27 ஆம் ஆண்டை சேர்ந்தது. இவன் காலத்தில் குமரலிங்கம் கோயிலுக்குக் காசு அளித்த செய்தி ஒரு கல்வெட்டில் காணப் படுகிறது. அளித்தவன் இவனுடைய சாமந்தன் தேவன் சிலம்பன் என்கிற திரிபுவனகங்கதேவன். கொழுமத்திலும் இவனுடைய கல்வெட்டு உள்ளது.

கரிகாலன்:

இந்த மன்னனுடைய கல்வெட்டு ஒன்று மட்டும் கிடைக் கிறது. அதுவும் துண்டுக்கல்வெட்டு. பேரூர் காஞ்சி ஆற்றில் கரிகாலன் படித்துறை உள்ளது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

ஸ்ரீ வீரநாராயணன்:

இவனைப் பற்றி சரியாக அறிந்து கொள்ள முடிய வில்லை. இங்கு இவனுடைய கல்வெட்டுகள் இரண்டுக்கு மேல் உள்ளன.

வீரபாண்டியன்:

இவனுடைய ஆட்சி பற்றியும் ஒன்றும் தெரியவில்லை. கொழுமத்தில் கிடைக்கின்ற இவனுடைய கல்வெட்டொன்றில் நகரத்துச் சபையார் இவ்வூர் வீரசோழீஸ்வரர் கோயிலுக்குச் சோழ மண்டலத்து ராஜகம்பீர வளநாட்டு உறையூர்க் கூற்றத்து ஊர் ஒன்றினைத் தானமாக அளித்துள்ளனர். மற்றோர் ஊர் துவராபாடி நாட்டைச் சேர்ந்தது.

வீரசோமீசுவரன்:

இவன் ஹொய்சளர் மரபினைச் சேர்ந்தவன். இவன் காலத்தில் மாதப்ப தண்ணாய்க்கன் என்பவன் தேவதான நிலம் அளித்துள்ளான். இக்கல்வெட்டு மூலம் ஹொய்சளர் ஆட்சி இது வரை பரவியிருந்தது என்பது தெரிகிறது.

இவர்கள் மட்டுமன்றி விஜயநகர நாயக்கர் கல்வெட்டு ம் சில உள்ளன. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மைசூர்

மன்னன் செப்புப்பட்டயம் ஒன்றும் இருக்கிறது. 19 ஆம் நூற்றாண்டு வெள்ளையர் அளித்த ஆணையும் உள்ளது.

கோனேரின்மை கொண்டான்:-

இந்த ஆரம்பத்துடன் 15க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. மன்னன் பெயர் ஊகிக்க முடியவில்லை. கோனேரின்மை கொண்டானின் ஒரு கல்வெட்டில் இவனுடைய ஜென்ம நட்சத்திரம் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. ''கோனேரின்மை கொண்டான்'' என்று கல்வெட்டில் காணப்பட்டால் அது அரசனுடைய நேர்முக ஆணை என்று பொருள்.

மண்டலம்

மண்டலம் என்ற பிரிவு கி.பி. 1009 ஆம் ஆண்டில் தான் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றது. தமிழ்நாட்டில் முக்கிய நாடுகள் மண்டலங்களாக பிரித்துப் பெயரிடப்பட்டன. தொண்டை நாடு ஜயங்கொண்ட சோழ மண்டலம் என்றும் பாண்டியநாடு இராஜராஜ மண்டலம் என்றும் நுளம்பபாடி நிகரிலிச் சோழ மண்டலம் என்றும் ஈழம் மும்முடிச் சோழ மண்டலம் என்றும் கொங்குநாடு வீரசோழ மண்டலம் என்றும் பெயரிடப்பட்டன. முதல் இராஜராஜன் காலத்தில் சோழ அரசு பேரரசாக உருப்பெற்றபோது நிர்வாக வசதிக்காக இவ்வாறு பல்வேறு மண்டலங்களாகப் பிரித்தான். கொழுமம் குமரலிங்கம் கல்வெட்டுகளில் மூன்று மண்டலங்கள் கூறுப்படுகின்றன. அவை கொங்கு மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம், என்பன ஆகும். இங்கு வரும் பெயர்களும், சோழர் கல்வெட்டில் கி.பி. 1009-ல் வருவதைப் பார்க்க முடியும். தற்போதைய தஞ்சை, திருச்சி மாவட்டங்களே பண்டைய சோழ மண்டலம் ஆகும்.

பாண்டி மண்டலம்:-

பாண்டி நாட்டினையே பாண்டி மண்டலம் என்று குமரலிங்கம், கொழுமம் கல்வெட்டுகள் கூறுகின்றன. சோழ அரசர்கள் பாண்டி நாட்டை இராஜராஜ மண்டலம் என்று குறிப்பிட்டனர்.

ஆனால் இங்குள்ள கல்வெட்டுகள் பாண்டி மண்டலம் என்றும் வீரபாண்டி மண்டலம் என்று கூறுகின்றன. சோழர் கொடுத்த பெயர் செல்வாக்கு இழந்துவிட்டது போலும்.

கொங்கு மண்டலம்:

கொங்கு மண்டலம் என்ற பெயர் கி.பி. 14ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் கூறப்படுகிறது. ''கொங்கு மண்டலத்துக் கரைவழி நாட்டுக் கொழுமம் '' என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது.

வளநாடு :

மண்டலம் பல வளநாடுகளாகவும், வளநாடுகள் பல நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. வளநாடு என்ற நாட்டுப் பிரிவு பற்றிய நிர்வாக அமைப்பைச் சோழர்கள், பாண்டியர் களிடமிருந்து கற்றுக் கொண்டு செயல்பட்டனர்.

நாடுகள்:

கொழுமம் கல்வெட்டுகளில் ஒன்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் கூறப்படுகின்றன. இது. கி.மு. 13 ஆம் நூற்றாண்டுக் கொங்கு நாட்டில் இருபத்து நான்கு நாடுகள் இருந்தன. அவற்றின் பெயர்கள் கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளில் காணப்படு கின்றன. கொழுமம் கல்வெட்டில் வரும் நாடுகளில் ஒன்று சோழ மண்டலத்தைச் சார்ந்தது. மற்றது. பாண்டி மண்டலத்தைச் சேர்ந்தது. சில நாடுகள் எந்தபகுதியைச் சார்ந்தவை என்று தெரியவில்லை.

கரைவழி நாடு:

கரைவழிநாடு அமராவதிக்கரைக்கு இருபுறமும் பரவி யிருந்த நாடு. கரைவழிநாடு என்பது வயல் நிறைந்த பகுதி.

வைகாவி நாடு:

பழநியைச் சுற்றியுள்ள பகுதிதான் வைகாவி நாடு ஆகும். வையாவி கோ பேகன் என்பவன் வாழ்ந்தான். இவன் கடையேழு வள்ளல்களுள் ஒருவன். இவனது நாடுதான் வைகாவி நாடு.

பேரூர் நாடு:

தற்போதைய கோவை வட்டம் முழுவதும் பேரூர் நாட்டைச் சேர்ந்தது. கோவைக்கருகில் உள்ள பேரூரே இதன் தலைநகராகும்.

பொங்கலூர்க்கா நாடு:

இந்த நாடுதான் கொங்கின் 24 நாடுகளில் பெரியது. இதன் தலைநகரம் தற்போது பல்லடத்தில் உள்ள பொங்கலூர் ஆகும்.

அரைய்காசு நாடு, துவராபாடி நாடு:

இவை எங்கிருந்தன என்று தெரியவில்லை.

ஒன்பது கரை நாடு:

இது கரைவழி நாட்டின் வேறுபெயர்.

உறையூர்க் கூற்றம்:

சோழ மண்டலத்துக் கூற்றம், தற்போதைய உறையூரைத் தலைநகராகக் கொண்டது

இரண்ய முட்ட நாடு:

இந்நாடு பாண்டி மண்டலத்தில் உள்ளது. சங்க காலத்தில் இரண்ய முட்டத்துப் பெருங்கௌசிகனார் என்ற புலவர் இருந் துள்ளார் என்பது நோக்கத்தக்கது. இந்த இரண்யமுட்டம் என்ற ஊரின் பெயரே பிற்காலத்தில் ஒரு நாட்டின் பெயராக அமைந் துள்ளது.

கல்வெட்டில் வரும் ஊர்கள்:

இங்குள்ள கல்வெட்டுகளில் வரும் ஊர்கள் பெரும்பா லானவை கொங்கு நாட்டைச் சார்ந்தவை. சில பாண்டிய நாட்டைச் சார்ந்தவை. ஊர்களுக்கு அரசருடைய பெயர்கள் வைக்கப் பட்டுள்ளன. சிலவற்றிக்கு அரசியர் பெயரும் சிலவற்றிக்கு இறைவன் பெயரும் வைக்கப்பட்டுள்ளன. சில ஊர்களுக்கு அரசியல் தலைவர்கள் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. சில ஊர்கள் சதுர்வேதி மங்கலங்கள் ஆகும். சில ஊர்களின் பெயர் ஊர் என்றும் நல்லூர் என்றும் சில ஊர்கள் புரம் என்றும் பெயர் பெற்றிருந்தன.

சதுர்வேதிமங்கலம்:

முதலில் சதுர்வேதிமங்கலம் பற்றிப் பார்ப்போம். வேதம் தெரிந்த பிராமணர்கள் குடியிருப்புக்குத்தான் சதுர்வேதிமங்கலம் என்று பெயர். இது பெரும்பாலும் இறையிலியாக விடப்பட்ட தாகும். இங்குள்ள கல்வெட்டுகளில் ஆறுக்கும் மேற்பட்ட சதுர்வேதி மங்கலங்கள் வருகின்றன.

ஸ்ரீ குமரங்கபீமச் சதுர்வேதிமங்கலம்:

இது குமரலிங்கத்தின் பண்டைய பெயர். சில கல்வெட்டு களில் குமரங்கபீம சதுர்வேதிமங்கலம் என்றும், குமரங்கவிய சதுர்வேதிமங்கலம் என்றும் வருகின்றன.

வீரநாராயணச் சதுர்வேதிமங்கலம்:

வீரநாராயணன் என்ற கொங்குப் பாண்டிய மன்னன் காலத்தில் அவன் பெயரால் உருவாக்கப்பட்ட பிராமணர் குடியிருப் பாகலாம்.

உலகுடைப்பிராட்டியார் சதுர்வேதிமங்கலம்:

உலகுடைப்பிராட்டி என்பது ஒர் அரசியின் பெயராக இருக்கலாம். அவள் பெயரால் ஒரு சதுர்வேதி மங்கலம் உருவாக் கப்பட்டது.

ஸ்ரீ பரிதிகுலச் சதுர்வேதிமங்கலம்:

பரிதி என்றால் சூரியன் என்று பொருள் கொள்ளலாம். அப்படி கொள்ளும்போது சூரியகுலம் என்பது பெறப்படும். சூரிய குலம் சோழர் குலம். சோழர் குலத்தை நினைவுறுத்தும் வகையில் பரிதி குலச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயர் வைத்திருக்கக் கூடும்.

குடிமங்கலம்:

மங்கலம் என்பது சதுர்வேதிமங்கலம் என்பதன் குறுகிய வடிவம். பெரும்பாலும் வரியில்லாமல் விடப்பட்ட நிலம் அல்லது குடிமக்கள் நிறைந்த ஊர் ஆகையால் குடிமங்கலம் என்று வந்திருக்கலாம். இவ்வூரில் 11- 12ஆம் நூற்றாண்டு நடுகல் ஒன்று உள்ளது.

ஸ்ரீதேவி அகரம்:

அகரம் என்பது அக்கிரகாரம் என்பதன் திரிபாகும். பெரும் பாலும் இது பிராமணர்களுக்கு இறையில்லாமல் விடப்பட்ட பகுதி. ஸ்ரீதேவி என்ற பெயர் இறைவியின் பெயர் ஆகலாம்.

இங்குள்ள கல்வெட்டுகளில் நல்லூர் என்றும் ஊர் என்றும் முடியும் பெயர்கள் தான் மிகுதியாக உள்ளன. புத்தூர் என்று முடியும் பெயர்களும் சில கல்வெட்டுகளில் உள்ளன. ''ஊர்'' என்னும் பெயர் மருதநிலக் குடியிருப்பைக் குறிக்கும். சங்க இலக்கியத்தில் ஊரன் என்ற சொல் மருதநிலத் தலைவனைக் குறிக்கும். சோழர் காலத்தில் அரசர்கள் பெயராலும் அரசியர் பெயராலும் அரசியல் தலைவர்கள் பெயராலும் ''நல்லூர்கள் '' ஏற்படுத்தப்பட்டன.

வன்குருகூர்:

இவ்வூர் பண்டைய நாளில் சிறந்த வணிகத் தலமாக இருந்தமையால் நகரம் என்று கல்வெட்டுகளில் கூறப்படுகின்றது. ஆழ்வார்களில் சிறந்த நம்மாழ்வார் பிறந்த ஊர் குருகூர். இங்கு வன்குருகூர் என்று கூறப்படுவது குரு கூரையே குறிக்கும். இப்பொழுது இதன் பெயர் ''ஆழ்வார் திருநகரி'' என்று கூறப் படுகிறது.

நன்னனூர்:

இவ்வூர் தற்போதைய பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள ஆனைமலைக்குப் பண்டைக்காலத்தில் வழங்கப்பட்ட பெயராகும். சங்க காலத்தில் மன்னன் நன்னன் நினைவாக இந்தப் பெயர் வந்திருக்கலாம். இவ்வூரில் 12 ஆம் நூற்றாண்டுக் கோயில் ஒன்று உள்ளது. இதற்கு ''சோமேசுவரர் கோயில்'' என்று பெயர். இங்குள்ள மாசானி அம்மன் என்ற தேவதையே நன்னன் கொலை செய்த பெண் என்று கதை வழங்குகிறது.

ஜயங்கொண்டசோழ நல்லூர்:

இப்பெயர் சோழ மன்னன் முதல் இராஜராஜனுக் குரியது. கொங்குச் சோழர்களில் எந்த மன்னனுக்கு இப்பெயர் இருந்தது. என்று தெரியவில்லை. ஆயினும் மன்னனோடு தொடர்புடைய ஊர் என்பது உறுதி.

சோழசூளாமணி நல்லூர்:

இந்த பெயரும் சோழபரம்பரை தொடர்புடையாகக் காணப் படுகிறது.

திருவரங்கத் திருப்பதி:

சோழ நாட்டில் காவிரிகொள்ளிடத்திற்கிடையே தீவாக அமைந்துள்ளது. சிறந்த வைணவத் தலமாக விளங்கும் இன்றைய ''திருவரங்கம்''. இவ்வூர் சிலப்பதிகாரம் போன்ற பண்டைய தமிழ் நூல்களில் கூறப்படுகிறது. இக்கோயிலைப் பற்றி ஆழ்வார்கள் பாடியுள்ளனர். இன்று வரை இது சிறந்த வைணவத் திருப்பதியாக உள்ளது. திருவரங்கத் திருப்பதி என்று கூறப்படுவது குறிப்பிடத் தக்கது. திருப்பதி என்பது வைணவத் தலங்களைக் குறிக்கும் பொதுப்பெயராகும்.

கோவன்புத்தூர்:

கோவை மாவட்டத்தின் தற்போதைய தலைநகரமான கோயம்புத்தூர் தான் பண்டைக்காலத்திய கோவன் புத்தூர் என்பதாகும். ''கோவன்'' என்ற தலைவன் பெயரால் உருவாக்கப் பட்ட ''ஊர்'' கோவன் புத்தூர் ஆயிற்று. புதியவனவாகத் தோற்று விக்கப்பட்ட ஊர் புத்தூர் எனப்படும். கோவன் என்பவனால் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டமையால் கோவன்புத்தூர் என்று பெயர் பெற்றது. கோவன்புத்தூருக்கு வீரகேரள நல்லூர் என்ற மற்றொரு பெயரும் இருந்திருக்கிறது. இவ்வூரில் கரிகாலன் ஒரு கோயில் கட்டியதாகச் சோழன் பூர்வபட்டயம் கூறுகின்றது. இப்போது கோட்டைப்பகுதியில் உள்ள சங்கமேசுவரர் கோயில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. பூர்வபட்டயம் குறிப்பிடும் கோயிலாக இது இருக்கலாம்.

கேரளகேசரி நல்லூர்:

இவ்வூர் தற்பொழுது எங்குள்ளது என்று அறிய இயல வில்லை.

கீரனூர்:

பண்டைய பொங்கலூர் நாட்டைச் சார்ந்தது. சங்ககாலத்தில் கீரன் என்ற பெயர் கொண்ட புலவர்கள் பலர் இருந்தனர். புகளூர்

தமிழிக் கல்வெட்டில் பெருங்கீரன் என்ற பெயரும் கீரனேரி என்ற பெயரும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஏமூர்:

இவ்வூர் கொங்கு நாட்டில் எந்தப் பகுதியில் இருந்தது என்று தெரியவில்லை. கொழுமத்திற்குத் தென்மேற்குத் திசையில் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் ஏமூர் அம்மன் கோயில் உள்ளது. சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டத்தில் ஏமூர் என்ற ஒரு ஊர் உள்ளது.

சங்கிராமநல்லூர்:

இவ்வூர் கொழுமத்தின் ஒரு பகுதியாகும்.

கடத்தூர்:

அமராவதி ஆற்றங்கரையில் உள்ள இவ்வூர் பண்டைக் காலம் முதல் சிறப்புற்றிருந்தது. பண்டைக் கல்வெட்டுகளில் கூற்றூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டுக் கோயில் உள்ளது.

எறிபடை நல்லூர்:

இது வணிகக் குழுவோடு தொடர்புடைய படையின் பெயரால் அமைந்த ஊர்.

பந்தலூர்:

இவ்வூர் எங்கிருக்கிறது என்று தெரியவில்லை.

கொங்கூர்:

இவ்வூர் அமராவதி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. கொங்கு என்ற சொல்லின் அடியாகக் கொங்கூர் என்ற பெயர் அமைந்திருக்கலாம். சேரர் சிலர் கொங்கூரிலிருந்து ஆட்சி செய்த தாகச் கூறுவர். இக்கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. ஆயினும் கொங்கூர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்தது. இங்கு பண்டைய சிவன் கோயில் ஒன்றும் உள்ளது.

வீரசோழ நல்லூர்:

வீர சோழன் என்ற மன்னன் பெயரில் ஏற்பட்ட ஊராகும்.

கண்ணாடிப்புத்தூர்:

இவ்வூர் மடத்துக்குளம் என்ற ஊருக்கருகில் உள்ளது. இங்கு கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக் கோயில் உள்ளது.

புரம் என்ற அடைமொழியுடன் சில ஊர்களின் பெயர்கள் வருகின்றன. இவை பெரும்பாலும் சிறந்த நகரங்களுக்கும், தலை நகரங்களுக்கும் உரிய பெயர்களாகும். கொழுமம் குமரலிங்கம் கல்வெட்டுகளில் கல்லாபுரம் வீரநாராயணபுரம், திரு நாராயண புரம் ஆகிய பெயர்கள் வருகின்றன. இவற்றில் கல்லா புரம் என்ற ஊர் இப்போதும் உள்ளது.

''பாடி'' என்ற பெயருடன் சில கல்வெட்டுகள் வருகின்றன. பாடி என்பது பெரும்பாலும் முல்லை நிலத்தைச் சார்ந்த இடமாகும். மேலும் ஆயர்கள் வாழும் பகுதியும் பாடி என்ற பெயரால் வழங்கப்பட்டிருக்கும். இக்கல்வெட்டுகளில் ''கவன்பாடி'' ''துவரா பாடி'' ''இரட்டயம்பாடி'' ஆகிய பெயர்கள் கூறப்பட்டிருக் கின்றன. தேவன் பாடி, துவராபாடி ஆகிய ஊர்கள் எங்கிருக்கின்றன என்று தெரியவில்லை. இரட்டயம்பாடி என்ற ஊர் மதுரை மாவட்டத்தில் குதிரையாற்றிற்குக் கிழக்கில் உள்ளது. இவ்வூருக்கு அருகில் உள்ள மலைகளில் இன்றும் பட்டி அமைந்துள்ளது. இப்பட்டிகளில் மாடுகளை வளர்க்கும் தொழில் இன்றும் நடை பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

திருமாலிருஞ்சோலை அழகர்கோயில்:

இது மதுரை மாவட்டத்தில் உள்ள வைணவத்தலமாகும். திருமலை என்ற பெயரும் அழகர்கோயிலையே குறிப்பதாகும்.

காரத்தொழுவு:

இவ்வூர் குமரலிங்கத்திலிருந்து 16 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. தொழுவு என்றால் மாட்டுக் கொட்டகையை குறிக்கும். ''கார்'' என்பது ஒருவகை முட்செடி. தொழுவு என்று முடியும்

பெயர்கள் எல்லாம் ஏதாவது ஒரு தாவரத்தின் பெயரைக் கொண்டிருக்கின்றன. வாகைப் பெருந்தொழுவு, முருங்கைத் தொழுவு போன்ற பெயர்களை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

சோழமாதேவி:

இவ்வூர் கொழுமத்திலிருந்து 10கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக் கோயில் உள்ளது. இவை மட்டுமன்றி குராங்காடு, வடம்பகை போன்ற ஊர்கள் உள்ளன.

மன்னறை:

கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் மன்னறையில் இருப்பதாகக் கருதப்படுகிறது. மன்னறை என்பது வளமான நிலத்தைக் குறிக்கும் என்று தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை முன்னாள் இயக்குநர் டாக்டர் . இரா. நாகசாமி அவர்கள் கருதுகிறார். திருப்பூருக்கு அருகில் மன்னறை என்று ஓர் ஊர் உள்ளது. கொழுமம் குமரலிங்கம் கல்வெட்டுகளில் பத்துக்கு மேற்பட்ட மன்னறைகள் கூறப்படுகின்றன. அவை வீரகேரள மன்னறை தலைமண்டல மன்னறை, அரியவை செய்த சோழ மன்னறை, புறபுக்க மன்னறை, அதிசய சோழ மன்னறை, ஆளுடைய நாச்சியார் மன்னறை, புங்கம்படு மன்னறை, வீரநாராயண மன்னறை, அதிசய சோழ மன்னறை, ராஜ ராஜ மன்னறை ஆகியவை. பெரும்பாலான மன்னறைகள் அரசர் அரசியர் பெயர்களைத் தாங்கி நிற்பது குறிப்பிடத்தக்கது.

சபை, ஊர், நகரம்:-

பண்டைக் காலத் தமிழகத்தில் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் சபைகள் இயங்கி வந்தன. அவை பெரும்பாலும் சுயாட்சித் தன்மையுடனே இயங்கியது என்று கூறலாம். நாட்டுச்சபை, ஊர்ச்சபை, சதுர்வேதிமங்கலத்துச் சபை போன்ற அமைப்புகள் இருந்தன. இவை அரசியல் நிர்வாகத்தில் ஆற்றிய முக்கியப் பங்கு பற்றிக் கல்வெட்டுகள் தெளிவாகக் கூறுகின்றன. ஊர்ச்சபை நகரச்சபை சதுர்வேதி மங்கலச்சபை ஆகிய சபைகள் நிலவின. நகரம் என்பது வணிகர்களைக் கொண்ட சபையாகும். சபைக்கு

வாரியங்கள் இருந்தன. வாரியங்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந் தெடுத்தனர். இது பற்றி உத்திரமேரூர்க் கல்வெட்டு விபரமாகக் கூறுகிறது. இங்குள்ள கல்வெட்டுகளில் நாட்டுச்சபையார், ஊரார், நகரத்தார், சதுர்வேதிமங்கலத்துச்சபையார் என்று பல்வேறு சபைகளைப் பற்றிக் குறிப்புகள் வருகின்றன. கொங்குநாட்டில் சபை அமைப்புகள் எல்லாம் சமுதாயம்(சாதி) சம்பந்தப்பட்ட அமைப்புகள் என்றும் அவை அரசியல் நிர்வாகத்திற்கு எந்த வகை யிலும் தொடர்பில்லாதவை என்றும். ஓய் சுப்புராயலு கூறுகிறார். ஆனால் கொழுமத்தில் கிடைக்கின்ற கல்வெட்டுகள் சபை யார்க்கும், ஊரார்க்கும் ஆணை அனுப்பியது பற்றிக் கூறுகிறது. சில கல்வெட்டுகள் சபை, ஊர், நகரம் ஆகியவை நிர்வாகத்தில் ஏற்ற முக்கியப் பங்கினையும் கூறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆகையால் ஒய். சுப்பராயலுவின் கருத்து ஏற்புடையதல்ல.

மடங்கள்:

தமிழ்நாட்டில் கி.பி. 6- 7ம் நூற்றாண்டிலிருந்து மடங்கள் உருவாகிச் சிறப்புற்றன. ஆனால் கல்வெட்டுகளில் மடங்கள் பற்றிய குறிப்பு கி.பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து தான் நமக்கு கிடைக்கின்றது. காளாமுகர்கள் மடங்களை உருவாக்கி நடத்தி வந்தனர். காலப்போக்கில் மடங்கள் நிறைய உருவாயின.

கொங்கு நாட்டில் மடங்கள் கி.பி. 12 ஆம் நூற்றாண்டி லிருந்தன. ஞானசம்பந்தர் மடம், கடனம்பட்டி மணிவாசகர் மடம், ஆகியவற்றைக் குறிப்பிடலாம். கொழுமத்தில் திருத் தொண்டத் தொகையான் மடம் என்ற ஒரு மடம் இருந்தது பற்றிய கல்வெட்டுச் சான்று கிடைக்கின்றது. அது மட்டுமன்றி வீர சோழன் திருமடைவளாகம் என்று ஒரு வளாகம் கூறப்படுகிறது. இவை மட்டுமன்றி குமரலிங்கம் கல்வெட்டில் ''அழகுண்டான பெருமாள் திருமடம் '' என்று கூறப்படுகிறது.

பெருவழி:

தமிழ்நாட்டில் சோழர் கல்வெட்டுகளில் பல பெருவழிகள் பற்றிய குறிப்புகள் வருகின்றன. வடுகப்பெருவழி, தஞ்சாவூர்ப் பெருவழி, எனப் பல பெருவழிகள் குறிப்பிடப்படுகின்றன. கொங்கு நாட்டில் உள்ள கல்வெட்டுகளில் கொங்கப்பெருவழி, அதியமான்

பெருவழி, எனப் பல பெருவழிகள் காணப்படுகின்றன. அண்மை யில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையினரால் கோவைக் கருகில் உள்ள சுண்டாக்காமுத்தூரில் கண்டுபிடிக்கப்பட்ட இராசகேசரிப் பெருவழி கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

கொழுமம் குமரலிங்கம் கல்வெட்டில் நான்குக்கும் மேற் பட்ட பெருவழிகள் கூறப்படுகின்றன. சேரனை மேற்கொண்ட சோழப் பெருவழி என்பது சேர நாட்டிற்குச் செல்லும் பெருவழி யாகும்.

மேலும் சோழமாதேவிக்குப் போகிற பெருவழி, பிடாரி கோயிலுக்குப் போகிற பெருவழி, வீரநாராயணப் பெருவழி, செம்பியன் கிழான் பெருவழி, அசுரர் மலைப் பெருவழி ஆகியன குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் அசுரர் பெருவழி என்பது ஐவர் மலைக்குத் தென்புறத்தில் செல்லும் கொழுமம்- பழநி நெடுஞ் சாலை ஆகலாம். ஐவர் மலைக்குப் பண்டைய பெயர் அயிரை மலை என்பது. இதுவே அயிரை - அசிரை, அசுரை - அசுரர் என மருவி இருக்கலாம். அசுரர்மலைப் பெருவழி இரட்டயம்பாடிக்கு வடக்கெல்லையாகக் கூறப்படுகிறது. இப்போதுள்ள பழநி நெடுஞ்சாலையும் இரட்டயம்பாடிக்கு வடக்கில் செல்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நீர்ப்பாசனம்:

கொங்கு நாட்டில் நீர்வளம் குறைவு.ஆகையால் இங்கு ஆண்ட பண்டைய ஆட்சியாளர்கள் குளந்தொட்டு நீர்வளம் பெருக்கினர். நீண்ட பெருவாய்க்கால்களை வெட்டினர். ஆற்றின் குறுக்கே அணை கட்டினர். சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் காலிங்கராயன் என்ற அமைச்சன் பவானி ஆற்றின் குறுக்கே அணைகட்டிக் கால்வாய் வெட்டி நீர்ப்பாசனத்திற்கு வழி செய்தான். அவன் வெட்டிய கால்வாய் காலிங்கராயன் வாய்க்கால் என்ற பெயரில் வழங்கப்படுகிறது. ஈரோட்டிலுள்ள ஒரு கல்வெட்டில் ரவி கோதை காலத்தில் தாழி என்பவன் ஏரி வெட்டியது கூறப் படுகிறது. கொழுமம் குமரலிங்கம் கல்வெட்டுகளில் ஏரி, பெருவாய்க்கால், வாய்க்கால், கண்ணாறு போன்றவை குறிப் பிடப்படுகின்றன. அவை பெரும்பாலும் அரசர் அரசியார் பெயர் களைத் தாங்கி நிற்கின்றன.

கேரளகேசரிப் பேரேரி, கீழைஅத்திப் பேரேரி, போன்ற ஏரிகள் கூறப்படுகின்றன. அவனிமாணிக்க வாய்க்கால், வீரகேரள வாய்க்கால், அதிராசராச சிலைசெட்டி வாய்க்கால், நாட்டு வாய்க்கால், செம்பியன் முக்கோக்கிழானடிகள் வாய்க்கால், திருவரங்கத்தேவர் வாய்க்கால், வீரநாராயணப் பெருவாய்க்கால் ஆகியவை குறிப் பிடத்தக்கவை. நீர்ப்பாசன அமைப்புகளுக்கு அரசன், அரசியர் பெயர்களே தரப்பட்டுள்ளன என்பது நோக்கத்தக்கது.

காசுகள் எடை, அளவு:

கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளில் கூறப்படும் காசுகள் குறிப்பிடத்தக்க சிறப்புடையன. எடைகள் அளவுகள் பற்றி ஏராள மான குறிப்புகள் வருகின்றன. கொழுமம், குமரலிங்கம் கல் வெட்டுகளில் கூறப்படும் காசுகள் பெரும்பாலும் கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள் பலவற்றில் கூறப்பட்டுள்ளன.

காசுகள்:

கொங்கு நாட்டில் பல ஊர்களில் கி.பி. முதல் நூற்றாண்டுக் காசுகள் மிகுதியும் கிடைத்துள்ளன. வெள்ளலூர், பூதிநத்தம், பொள்ளாச்சி, கலயமுத்தூர் போன்ற ஊர்களில் இக்காசுகள் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் ரோமானியக் காசுகள். இந்தியாவில் கிடைத்த ரோமானியக் காசுகளில் 80 விழுக்காடு கொங்குநாட்டில்தான் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. இது மட்டுமன்றி கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முத்திரைக் காசுகள் (Punch Marked Coins) கிடைத்துள்ளன. பிற்காலச் சோழர் காசுகளும் கிடைத்துள்ளன.

கொழுமம், குமரலிங்கம் கல்வெட்டுகளில் ஆனை அச்சு, சியக்கி, சலாகையச்சு, பழஞ்சலாகை போன்றவை குறிப்பிடப் படுகின்றன. கொங்குநாட்டுப் பகுதிகளில் யானை உருவத்துடன் கூடிய காசுகள் நிறையக் கிடைக்கின்றன. இது சேரர்களுக்குரிய தாகக் கருதலாம். இக்காசுகளே ஆனை அச்சு என்ற காசாக இருத்தல் வேண்டும்.

இயக்கி:

இது சமண சமயத்துப் பெண் தெய்வமாகிய ஸ்ரீயக்ஷி உருவத்துடன் வெளியிடப்பட்ட காசு ஆகலாம். இக்காசு கொங்கு

நாட்டுக் கல்வெட்டுகள் பலவற்றில் கூறப்படுவது குறிப்பிடத் தக்கது. இதனால் கொங்கு நாட்டில் சமணம் செல்வாக்கு பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

சலாகை அச்சு:

இது ஒரு பண்டைய நாணயம் என்று தி.நா.சுப்ரமணியம் அவர்கள் கூறுகிறார். பழஞ்சலாகை என்பது பண்டைய காசு என்று பொருள்.

அளவுகள்:

நெல் அளவு குறிக்கும் போது தூணி, பதக்கு, கலம், நாழி, உழக்கு போன்ற முகத்தலளவைகள் கூறப்படுகின்றன.

நில அளவு:

நிலத்திற்கு அளவு கூறும் போது தூணி, விதைப்பாடு, குறுணி விதைப்பாடு, பதக்கு விதைப்பாடு, கலம் விதைப்பாடு, என்று கூறப்படுகிறது. சில கல்வெட்டுகளில் நிலத்தின் அளவு ஒருமா, இரண்டுமா என்று கூறப்படுகிறது. காணி என்ற நில அளவு மிகுதியும் கூறப்படவில்லை.

நெல் அளக்கும் மரக்கால் பற்றிப் பல கல்வெட்டுகள் கூறுகின்றன. திரிசூலக்கால், ஸ்ரீ பண்டாரக்கால், பொன்னாடுகால் எனப் பல மரக்கால்கள் கூறப்படுகின்றன.

பொன்னும் கோயிலுக்குத் தரப்பட்டுள்ளது. ஆனால் அது மிகவும் குறைந்த அளவே ஆகும். பொன்னின் எடை கூறும்போது கழஞ்சு என்ற அளவு மட்டும் கூறப்படுகின்றது.

வரிகள்:

ஒரு நாட்டினுடைய வருவாய் அந்நாட்டு வரிகள் தான் . இந்த வரிகள் மூலம் கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு நீர்ப்பாசன வசதி செய்தனர். நிர்வாகச் செலவும் இந்த வரியின் வருவாய் மூலம் செய்யப்பட்டது. சோழர் காலத்திற்கு முன் ஆட்சி செய்த பல்லவர் காலத்தில் பல்வேறு வரிகள் விதிக்கப்பட்டன. சோழர்

காலத்தில் கூட நிறைய வரிகள் வாங்கப்பட்டன. கொங்கு நாட்டில் விதிக்கப்பட்ட வரிகள் மிகவும் குறைவு தான். கொழுமம், குமரலிங்கம் கல்வெட்டுகளில் சுமார் பன்னிரண்டு வரிகள் கூறப் படுகின்றன. அதிலும் மிகுதியும் கூறப்படுவன இறைபுரவு, சித்தாயம், எலவை, உகவை, ஆகியவை தாம். மற்ற வரிகள் பற்றிய குறிப்பு மிகவும் குறைவாகத்தான் காணப்படுகின்றன. இறை, புரவு,சித்தாயம், உகவை, எலவை, அந்தராயம், மன்றுபாடு, சங்கம், அஞ்சில் வரி, பெருவரி, தெண்டகுற்றம், குரமைபாடு ஆகிய வரிகள் இங்குள்ள கல்வெட்டுகளில் கூறப்படுகின்றன.

இறை:

இது அரசுக்குத் தரப்படும் வரிக்குப் பொதுவான பெயர். பெரும்பாலும் நிலவரியைக் குறிக்கும்.

புரவு:

இறையெனும் காணிக்கடன் நீக்கிய ஊர்களில் அரசு பெறும் பிற வரிகள்.

உகவை:

கல்யாணம் போன்ற மகிழ்ச்சியான காரியங்களுக்கு செலுத்தும் வரி.

அந்தராயம்:

உள்வரி, உள்வருமானம், ஊர்ச்சபை, நாட்டவர் போன்ற ஸ்தாபனங்களுக்கு இறுக்கும் வரி.

மன்றுபாடு:

நியாய விசாரணை சபைக்கு இறுக்கும் அபராதப் பணம்.

சுங்கம்:

கலத்தினும் காலினும் வரும் பண்டங்களுக்குக் கொடுக்கப் படும் வரியாகும். இங்கு வணிகர்கள் நிறைந்திருந்தமையால் சிறப்பான வணிகம் நடந்தது எனலாம். நகரத்தார் சபையும்

இருந்துள்ளது. இந்த சுங்கம் பற்றிய குறிப்பு ஒரே கல்வெட்டில் வருகிறது. தஞ்சைச் சோழர்களில் முதலாம் குலோத்துங்க சோழன் என்பவனுக்கு சுங்கம் தவிர்த்த சோழன் என்ற சிறப்பு பெயர் உண்டு. சுங்கத்திற்கு மற்றொரு பெயர் "உல்கு" என்பதாகும்.

தெண்ட குற்றம்:

தண்டனைக்குரிய, குற்றவாளிகளை நீதிமன்றில் விசாரணை செய்து குற்றத்திற்கு ஏற்ப தண்டித்துப் பெறும் காசு.

குடிமைப்பாடு:

நாட்டின் குடிகள் தரும் வரியாகும். ஊழியம், ஊர்ப் பொதுவேலை, என்று தி.நா. சுப்ரமணியம் அவர்கள் கூறுவார்.

மேலே கூறப்பட்ட வரிகளேயன்றி வேறு சில வரிகளும் உள்ளன. பெரும்பாலும் இந்த வரிகள் எல்லாம் கோயில் செலவுக் குத் திருப்பி விடப்பட்டன. சில கல்வெட்டுகளில் இறையிலியாக நிலம் அளித்தது பற்றிய செய்தி வருகின்றது. இறை இறுத்த நிலம் என்று சில கல்வெட்டுகள் கூறுகின்றன.

ஆண்டு முதலியன:

கல்வெட்டுகளில் மாதம், நாள், நட்சத்திரம், கிழமை போன்றவை குறிப்பிடப்படுகின்றன. சூரிய கிரகணம் போன்றவை பற்றிய குறிப்பும் வருகின்றன. இங்குள்ள கல்வெட்டில் ஆண்டு குறிப்பிடும்போது ஆட்டை என்று கூறப்படுகின்றது.

கோயில்கள்:

தமிழகத்தில் பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகரர் காலத்தில் ஏராளமான கோயிற்பணிகள் செய்யப்பட்டன. குறிப்பாகச் சோழர் காலத்தில் ஏராளமான கற்றளிகள் கட்டப்பட்டன. தேவாரப் பாடல் பெற்ற தலங்களும் வைப்புத் தலங்களும் செங்கற்தளிகளாக இருந்து கற்றளிகளாக மாற்றப்பட்டன. சோழர் காலத்தில் தான் தமிழகத்திற்கு வெளியிலும் சோழர் கோயிலைப் பார்க்க முடியும். அவர் தம் பணி கடல் கடந்து சென்றது. சோழர்களைப் பின்பற்றிய

கொங்குச் சோழர்களும் கொங்கு நாட்டில் கோயில்களைக் கட்டிச் சிறப்புற்றனர். சோழன் கரிகால சோழன் பிரம்மஹத்தி தீர நூற்றுக்கணக்கான கோயில்களைக் கட்டினான் என்று கூறப் படுகிறது.

கொழுமம் குமரலிங்கம் கல்வெட்டில் சுமார் பதினைந்து கோயில்கள் கூறப்படுகின்றன. சில கோயில்கள் இன்றும் இருக் கின்றன. சில கோயில்கள் இருந்த ஊரே இப்போது இல்லை. ஆகையால் அக்கோயில்கள் எங்கிருக்கின்றன என்று தெரிய வில்லை.இக்கோயில்களில் பத்துக்கும் மேற்பட்டவை சிவன் கோயில்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சில கல்வெட்டுகளில் திருக்காமக் கோட்டம் என்று கூறப்படுகிறது. பிடாரி கோயில், திருமலை கோயில் போன்ற பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

ஏமூர் இராசராச ஈசுவரமுடையார் கோயில் என்ற பெயர் உள்ளது . ஆனால் இப்போது இந்த ஊரே இல்லை. காரத்தொழுவு ஆளுடையார் கோயில் என்ற பெயர் உள்ளது. இப்போதும் காரத் தொழுவு என்ற ஊரில் ஒரு கோயில் இருக்கிறது. அதில் இக் கல்வெட்டும் உள்ளது. கடற்றூரில் திருமருதுடையார் கோயில், உள்ளது. இவ்வூர் உடுமலை வட்டத்தில் உள்ளது. கடற்றூர் என்பதன் திரிபே கடத்தூர். இங்கு கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு உள்ளது. அடுத்துத் திருவாலந்துறை உடையார் விக்கிர சோழீஸ்வரமுடையார் கோயில். இவ்வூர் எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை.

தொழில்:

சாமந்தர்:

சாமந்தன் என்ற சொல் மந்திரியைக் குறிக்கும் அல்லது சிற்றரசனைக் குறிக்கும். கொழுமம் கல்வெட்டுகளில் பல்வேறு நாட்டுச் சாமந்தர்கள் கூறப்படுகின்றனர். பேரூர் நாடு, வைகாவி நாடு போன்ற நாட்டுச் சாமந்தர்கள் கொழுமம் சோழீஸ்வரர் கோயிலுக்கு அளிக்க வேண்டிய நெல், நெய் பற்றிய விபரத்தை ஒரு கல்வெட்டு கூறுகிறது. சில சாமந்தர்கள் கோயிலுக்கு நிலம் அளித்துள்ளனர். சிலர் கோயிலைப் பாதுகாக்கும் பொறுப்பினை

ஏற்றுள்ளனர். சிலர் கோயில் நிர்வாகம், திருவிழா போன்றவற்றை முன்னின்று நடத்தியுள்ளனர்.

உத்தரமந்திரி:

சில கல்வெட்டுகளில் 'உத்தரமந்திரி எழுத்து'' என்று கூறப்படுகிறது. உத்திரமந்திரி என்பவன் தலைமை அமைச்சன் ஆவான். பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையனின் ஆனைமலைக் கல்வெட்டில் உத்தரமந்திரி குறிக்கப்படுகிறான்.

கருமஞ்செய்வார்:

இவர்களுடைய பணி பற்றி ஏதும் தெரியவில்லை. நாட்டுக் கருமஞ்செய்வார் என்று கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது.

ஊராளி:

ஊராளி என்பவன் கிராமத்தை ஆளும் அதிகாரி.

சேனாதி:

சேனாபதி என்பதன் திரிபாகலாம். சேனாபதி என்பது படைத்தலைவரைக் குறிக்கும்.

கரணத்தார்:

கோயிலில் இருந்த கரணம் என்ற நியாய சபையின் உறுப்பினர் கரணத்தார் எனப்படுவர். கணக்கு எழுதுபவர்களை இது குறிக்கும்.

கோயில் அதிகாரம் செய்வார்:

இவர்கள் கோயிற் பணிகளில் முக்கியப் பங்கு வகித்திருக்கலாம்.

சீகாரியம் செய்வார்:

இவர்கள் கோயில் நிர்வாகத்தை மேற்கொண்டிருப்பவர்கள். சீகாரியம் செய்வார் பற்றிக் குமரலிங்கம் கரியவரதராஜப் பெருமாள் கோயிற் கல்வெட்டுகளில் மிகுதியும் வருகின்றது.

உவச்சர்:

கோயிலில் மத்தளம் போன்ற இசைக்கருவிகளை இசைப்பவர், கொட்டுபவர் இவர்களுக்கு உவச்சப்புறமாக நிலம் அளிக்கப்பட்டது.

பட்டர்:

இவர்கள் கோயில் பூசை செய்பவர்கள்.

தேவரடியார்:

கோயிற்தொண்டு செய்யும் பெண்கள். இவர்கள் இறைவனுக்கு மலர் மாலை கட்டி அளிப்பர். கோயிலில் நாட்டியம் ஆடுவர்.

தேசி தேவரடியார்:

அகமார்க்கம், தேசி என இரண்டு வகையான இசை மரபுகள் உண்டு. அவற்றுள் இவர்கள் தேசி மரபினை அறிந்த தேவரடியார்களாவர்.

வண்ணத்தாள்:

இசைக்கலையில் தேர்ந்தவள் ஆகலாம்.

கொடை:

பண்டைத் தமிழ்நாட்டில் மன்னர்கள் புலவர்களுக்குக் கொடை அளிப்பதைத் தம் கடமையாகக் கொண்டிருந்தனர். சங்ககாலத்திற்குப் பின்வந்த அரசர்கள் யாகம் மற்றும் கோயிற் பணி செய்து சிறப்படைந்தனர். இது பல்லவர், பாண்டியர் காலத்தில் நிகழ்ந்தது. சோழர் யாகம் செய்வதைக் காட்டிலும் கற்றளிகளைக் கட்டுவதில்தான் முக்கிய கவனம் செலுத்தினர். இவர்கள் கற்கோயில்களைக் கட்டியதோடல்லாமல் கோயிற் பராமரப்பிற்கும் பூசை செலவிற்கும் நிவந்தங்களை அளித்தனர். கோயில் நிர்வாகம் முறைப்படுத்தப்பட்டுச் சிறப்புற்றது. கோயிலே சோழர் காலத்தில் சமூக இயக்கத்தின் மையப்பகுதி போல் இருந்தது. இந்தப் பின்னணியில் கொழுமம், குமரலிங்கம் கோயில்களுக்கு அளிக்கப்பட்ட தானங்களைப் பற்றிப் பார்ப்போம்.

கொழுமம் குமரலிங்கத்தில் கிடைத்துள்ள 60க்கும் மேற்பட்ட கல்வெட்டுகளில் தானம் பற்றிய செய்திதான் அதிகம்.

தானம் அளிப்பவர்களில் முதலிடம் பெறுவர்கள் அரசர்களே. இவர்களுடைய ஆட்சி சிறக்கவும் தம் வாழ்நாள் நீண்டு இருக்கவும் நிறையக் கொடை அளித்துள்ளனர். வீரசோழன் என்ற மன்னன் தன்னுடைய பிறந்த நட்சத்திரமும், சூரிய கிரணமும் ஒரே நாளில் வந்தமையால் ஏற்பட்ட தோஷம் நீங்க ஒரு கோயிலை எடுப்பித் ததோடு மட்டுமல்லாமல் அக்கோயிலுக்கு நிறைய நிலங்களைத் தானமாக அளித்துள்ளான். அதேபோல குமரலிங்கம் கரியவரத ராஜப் பெருமாள் கோயில் கல்வெட்டொன்றும் தோஷத்தால் ஏற்பட்ட குறையை நீக்க வீரசோழன் கரியபிரானுக்கு அமுது படிக்கு நிலம் அளித்த செய்தியைக் கூறுகிறது. இவை மட்டு மன்றிக் கொழுமத்தில் அவன் பேரிலிருந்த ''வீரசோழ மடை வளாகத்துத் திருத்தொண்டத் தொகையான் மடத்து'' தபஸியர் மூவர்க்கு உணவளிக்க நிலம் விட்ட செய்தியும் ஒரு கல்வெட் டில் கூறப்பட்டுள்ளது. கொழுமத்து ஆளுடையார் வீரசோழீஸ்வர முடையார் வீரசோழந் திருமடை விளாகத்துத் திருத்தொண்டத் தொகையன் மடத்துத் தபசியர்க்கு நம்மோலை குடுத்தபடியாவது; இம்மடத்துக்கு நமக்கு நன்றாக மூன்று தபஸியற்கு ஒரு ஜீவநத் துக்கு நாம் வைத்த ஸந்[தி] ஒன்றுக்கு ... என்று கூறுகிறது. (தெ.இ.க. தொகுதி, XXVi எண். 156).

வீரராஜேந்திரன் என்ற மன்னன் கரிய வரதராஜர் கோயிலில் இருந்த நரசிங்க மூர்த்திக்கு அமுதுபடிக்கு நிலம் விட்ட செய்தியைக் கூறுகிறது. நாம் எடுப்பித்த நரசிங்க தேவர் என்று அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. மேலும் அவன் பாண்டி மண்டலத்தில் கீழிரணியமுட்ட நாட்டில் உள்ள திருமாலிருஞ் சோலை அழகர்கோயிலில் உள்ள பத்து ஆழ்வார்க்கு அமுது படிக்கென இங்கு நிலம் விட்ட செய்தியை ஒரு கல்வெட்டு கூறுகிறது.

''வீரபாண்டி மண்டலத்துக் கீழரணிய முட்ட நாட்டுத் திருமாலிருஞ்சோலை நின்றருளிய அழகர் கோயிலின் ஆழ்வார் பதின்மர்க்கு அமுதுப்படிப்புறமாக விட்ட நிலம் ஆவது **''கரைவழி நாட்டு பிறிந்த ராஜராஜ வளநாட்டு உலகுடைய பிராட்டி சதுர்வேதி மங்கலத்து விட்ட நிலம்''** என்று கூறுகிறது.

அவர்கள் மட்டுமன்றி அரச குடும்பத்தினர் கூட நிவந்தங்கள் அளித்துள்ளனர். வீரசோழனுடைய மகள் ஒருத்தி நித்தம் நின்றாடுவார் கோயிலுக்கு நிலம் அளித்த செய்தியை ஒரு கல்வெட்டு கூறுகிறது. முக்கோக்கிழானடிகள் பற்றிய குறிப்பும் வருகிறது. அவர் செய்த தானம் பற்றிய செய்தி தெளிவாகத் தெரியவில்லை.

அரசியல் அதிகாரிகள், சேனாதிபதிகள் போன்றவர்கள் செய்த தானம் பற்றிய கல்வெட்டுகளும் உள்ளன. சோழன் லங்கேஸ்வரன் என்பவன் காசு அளித்துள்ளான். இரட்டயம்பாடியை சேர்ந்த தனியாள் ஒருவன் திருநீர்த்தண் திருமடத்திற்கு நிலம் அளித்துள்ளான். பெரும்பிள்ளை ஆழ்வார்க்கு (பிள்ளையார்) அமுதுபடி செய்ய நிலம் அளித்த செய்தியைப் பற்றி மற்றொரு கல்வெட்டு கூறுகிறது.

வீரசோழன் காலத்தில் கரியவரதராஜப் பெருமாள் கோயிலுக்குக் குராங்காட்டு ஸ்ரீ கிருஷ்ணன் என்பவர் நிலம் கொடுத்துள்ள செய்தி கூறப்பட்டுள்ளது. வீரசோழ பிரம்மேன்திரன் என்பவன் கரியபிரான் கோயிலுக்கு அமுதுபடிக்கென நிலம் கொடுத்துள்ளான். விக்கிரம சோழன் காலத்தில் (ஓர் அதிகாரி) தேவன் சிலம்பன் என்பவன் அமுதுபடிக்குக் காசு கொடுத்து நிலம் வாங்கிவிட்ட செய்தியைக் குறிக்கின்றது. வீரசோழன் காலத்தில் ''நரசிங்கபட்டன்'' என்பவன் மடப்புறமாக விட்ட நிலம் வைகாவி நாட்டில் அமரபுஜங்க சதுர்வேதிமங்கலத்தில் உள்ளது. ஹொய்சள மன்னன் வீரசோமேஸ்வரன் காலத்தில் மாதப்ப தண்ணாய்க்கன் என்பவன் கரிகாலபுரம் என்ற ஊரையே தானமாகக் கொடுத்துள்ளான்.

அரசியல் அதிகாரிகள் மட்டுமின்றி வணிகர்களும் தனிப்பட்டவர்களும் கோயிலுக்கு நிலம் கொடுத்துள்ளனர்.

கொடுக்கப்பட்ட தானம் - நிலம், நெல், காசு தூண்:

கொழுமம் குமரலிங்கம் கல்வெட்டுகளில் கூறப்படும் தானங்களில் நிலம் தான் அதிகம் தரப்பட்டுள்ளன. அதற்கு அடுத்தபடியாக காசு கொடுக்கப்பட்டிருக்கிறது. சில தானத்தில் நெல்லாகவே கொடுக்கப்பட்டுள்ள செய்தி தெரிய வருகிறது.

இந்தக் கல்வெட்டுகளில் நிலத்தானம் மிகுதியும் வருவதற்குக் காரணம் இந்தப் பகுதி வளம் பெற்றிருப்பதுதான்.

அரசியல் தலைவர்களில் சிலர் தூண், வாயிற்கால் போன்ற வற்றைத் தானம் அளித்த செய்தியும் கிடைக்கின்றது. இவ்வாறு அதிகாரிகளும், தலைவர்களும் தானம் அளிக்கும் செய்தி புதிய தன்று. பேரரசர்கள் பெருங்கோயில்களை எடுக்கும்போது அரசியல் அதிகாரிகள் மண்டபங்களையும் தூண்களையும் எடுப்பது வழக்கம். தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் உள்ள திருச்சுற்று மாளிகையை எடுத்தவன் கிருஷ்ணன் ராமனான மும்முடி பிரம்மராயன் என்பவன். ஆனால் கொங்கு நாட்டில் அரசியல் தலைவர்கள் தூண்களையும் வாயிற்கால்களையும் மட்டும் எடுத்த செய்தி நிறைய உள்ளன. கொங்கு நாட்டில் எல்லாக் கோயில் களிலும் தூண், வாயிற்கால்களை எடுத்தவர்கள் பெரும்பாலும் வணிகர், வேளாளர், கைக்கோளர் போன்றவர்களே. கொழுமம் கோயில்களிலும் இந்த வழக்கம் சிறப்பாக இருந்துள்ளதைக் காணமுடியும். நித்தம் நின்றாடுவார் கோயிற் தூண்கள் ஆறில் அவற்றை நிறுத்தியவர்களின் பெயர் பொறித்திருப்பதைப் பார்க்க முடியும்.

(1) ஏழூர் வெள்ளாரில் ஆண்டான் செட்டியான பூமிபாலன் தூண்

(2) ஏழூர் தென்குடுமரில் சோழராயன் ஸம்மானான சுந்தர பாண்டிய அனுத்திரன் பல்லவரையன் தூண்.

(3) இவூர் கைக்கோளரில் ஆலி அமுத பாண்டியன் தூண்

(4) இவூர் கைக்கோளரில் பெம்மான் பொன்னம்பலக் கூத்தன் தூண்.

வாயிற்கால் எடுத்த செய்தியினைக் கூறும் கல்வெட்டும் உள்ளது. அதனையும் வாயிற்கால்களிலேயே பொறித்து வைத்துள் ளனர். இவை மட்டுமன்றி அழகுவாய்ந்த பூப்பலகையைத் தானமாகத் கொடுத்துள்ளனர். பலகையின் நீளம் 8 அடி கூறலாம். அகலம் 4 அடி, கனம் ¾ அடியுள்ள இரண்டு பலகைகள் உள்ளன. இரண்டிலும் கல்வெட்டுகள் உள்ளன. ஒன்று மட்டும் படிக்கும் நிலையில் உள்ளது. பலகை வழுவழுப்பாக, அழகாக உள்ளது.

"ஸஸிஶ்ரீ ஆளுடையார் வி..........ர ே......வரான

விசையாவரா.

யவர் இட்ட திருப்பூப் பலகை"

இந்தப் பலகையில் பூவைத் வைத்துக் கொண்டு மாலை தொடுப்பதற்குப் பயன்படுத்தியிருக்கின்றனர். கல்வெட்டின் அமைதி கி.பி. 13, 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகலாம். இது கவனிப்பாரற்று உள்ளது. மற்றொன்றில் கோயில் பூஜைப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன.

வெற்றிக்கும் வளமைக்கும் செய்யப்பட்ட தானம்:

சக ஆண்டு 1267 ல் கி.பி. 1345ல் கெத்தயதண்ட நாயகன் என்பவன் (மாதப்ப தண்ட நாயகனின் மகன்) மகாஜனங்களுக்கு நிலத்தானம் அளித்துள்ளான். இந்த மகாஜனங்கள் மாதவ சதுர்வேதி மங்கலம் என்ற ஊரைச் சேர்ந்தவர்கள். இந்த ஊரின் பெயர் தானம் அளித்த கெத்தயதண்ட நாயகனின் தந்தை நினைவாக வைக்கப்பட்டது. இந்தத் தானம் அளித்ததன் நோக்கம் தன் தம்பியின் (சிங்கயதண்டநாயகன்) வெற்றிக்கும் வளமைக்கும் என்பதைக் கல்வெட்டு கூறுகிறது. இவ்வாறு செய்வது தமிழகத்தில் பண்டைக்காலத்தில் இருந்த வழக்கம் ஆகும். வெற்றியின் நினைவாகக் கோயில் எடுக்கும் வழக்கம் இருந்ததுபோல தானம் அளிக்கும் பழக்கமும் இருந்தது என்பதை இந்தக் கல்வெட்டின் மூலம் அறிகிறோம்.

அரசன் சிறப்புக்காகக் கோயில் எடுத்த செய்தியும் இவ்வூர்க் கல்வெட்டுகளில் வருகின்றது. வீரசோழன் சிறப்புக்கு எனச் சொக்கீஸ்வரர் கோயில் ஒன்று எடுத்த செய்தியை ஒரு கல்வெட்டு கூறுகிறது. இக்கோயில் தற்போது அக்னீஸ்வரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. காலப்போக்கில் பெயர் மாற்றமடைந்துவிட்டது போலும்.

அரசர்கள் எடுப்பித்த தேவர்:

பண்டைய அரசர்களும், அதிகாரிகளும் அரசியரும், கடவுளர் உருவங்களைச் செய்தளித்துள்ளனர். உருவங்களைச் செய்தளித்த தோடு அதனுடைய பூசைக்கு நிலமும் அளித்துள்ளனர். அண்மை

யில் எழுத்துப் பொறித்த செப்புத் திருமேனிகள் கிடைத்துள்ளன. இதனைக் கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன

நித்தம் நின்றாடுவார்:

வீரசோழன் காலத்தில் செய்தளிக்கப்பட்ட இச்செப்புத் திருமேனிக்கெனத் தனிக்கோயில் ஒன்று எடுக்கப்பட்டு நிவந் தங்கள் அளிக்கப்பட்டன. நித்தம் நின்றாடுவாரைப் பற்றிய கொழுமம் கல்வெட்டு ''நித்த நின்றாடுவாரைப் பிழைத்தார் களாவார்'' என்று கூறுகின்றது. (தொ.இ.க. தொகுதி xxvi எண். 173) இப்பகுதியில் ஆடவல்லான் வழிபாடு சிறப்பாக இருந்திருக்கிறது எனலாம்.

நரசிங்கர்:

குமரலிங்கம் கல்வெட்டு ஒன்றில் வீரராசேந்திரன் நரசிங்க தேவர் உருவத்தை எடுப்பித்தாகக் கூறுகிறான். (தொ.இ.க. தொகுதி xxvi எண். 135)

தட்சிணாமூர்த்தி:

கொழுமம் கல்வெட்டு ஒன்றில் தட்சிணாமூர்த்தி திரு உருவத்தை எடுப்பித்த செய்தி கூறப்படுகிறது. இந்தத் தட்சிணா மூர்த்தி தேவர் வழிபாட்டிற்கு நிவந்தம் அளித்த செய்தியும் கூறப்படுகிறது. (தொ.இ.க. தொகுதி xxvi எண். 144)

மேற்கூறப்பட்ட இரண்டு சிற்பங்களும் இப்போது இல்லை. காலப்போக்கில் அழிந்து விட்டிருக்கலாம். இவை பெரும்பாலும் கற்சிற்பங்களாக இருந்திருக்கலாம். கொங்கு நாட்டில் சிற்பங்கள் பற்றி வரும் கல்வெட்டுகள் சில பகுதிகளில்தான் காணப்படு கின்றன. அவற்றிலும் சில சமண சமயம் தொடர்பானவை. மற்றவை பிற சமயம் தொடர்பானவை. அவற்றில் கொழுமம் கோயில் செய்திகள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாகும்.

திருவாய்மொழி விண்ணப்பம் செய்வார்:

குமரலிங்கம் கரியவரதராஜப் பெருமாள் கோயிற் கல்வெட்டு திருவாய்மொழி விண்ணப்பம் செய்வார்க்கு நிலம் அளித்ததாகக் கூறுகிறது. தஞ்சைப் பெரிய கோயிலை எடுப்பித்த

முதல் இராஜராஜன் திருப்பதியம் விண்ணப்பம் செய்வார்க்கு நிலம் கொடுத்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அதுபோல இங்கும் திருவாய்மொழி விண்ணப்பம் செய்வார்க்கு நிலம் அளித்த செய்தி நமக்குக் கிடைக்கிறது.

பாரதம் படிப்போர்க்கு நிலம் கொடுத்தல்:

கொழுமத்தில் உள்ள அக்னீஸ்வரர் கோயிலில் கோனேரின்மை கொண்டான் எனத் தொடங்கும் கல்வெட்டொன்றில் பாரதம் படிப்போர்க்கு நிலம் அளித்த செய்தி கூறப்படுகிறது. (தொ.இ.க. தொகுதி XXVi எண். 174) தமிழ்நாட்டில் பல்லவர் காலத்தில் முதலாம் பரமேஸ்வரவர்மன் வெளியிட்ட கூரம் செப்பேட்டில் பாரதம் வாசிப்போர்க்கு நிவந்தம் கொடுத்தது குறிக்கப்படுகிறது. பாண்டியர் செப்பேடு ஒன்றில் "மாபாரதம் தமிழ்படுத்தும் மதுராபுரி சங்கம் வைத்ததும்" என்றும் கூறப்படுவதைக் காணமுடியும். பாரதம் தமிழ் மக்களிடத்தில் ஏற்படுத்தியிருந்த செல்வாக்கை இதனால் அறிய முடியும்.

வேறு சில நிவந்தங்கள்:

கல்வெட்டுகளில் தேவரடியார் நிலம், மஞ்சிலுசெட்டி நிலம், கடால் நிலம், அதிராசராச சிலை செட்டி நிலம், வேளாள நிலம், மன்றாட்டு நிலம், தீபாய்ஞ்சகாணி போன்றவை குறிப்பிடப் படுகின்றன. தேவரடியார் நிலம் என்பது தேவரடியார்களுக்கு அளிக்கப்பட்ட நிலமாகும். மஞ்சிலு செட்டி நிலம், அதிராசராச சிலை செட்டி நிலம் என்பது கல்தச்சர்களுக்கு அளிக்கப்பட்ட நிலம், மன்றாட்டு என்பது நியாயசபைக்கு அளிக்கப்பட்டது. தீபாஞ்சகாணி என்பது உடன்கட்டை ஏறிய பெண்ணின் குடும்பத் தார்க்கு அளிக்கப்பட்ட நிலமாகும். ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் மனைவி உடன்கட்டை ஏறும்போது தடுத்த சான்றோர் களைப் பார்த்து பாடுவதாக அமைந்த பாடல் ஒன்று புறநானூற்றில் வருகின்றது. சோழர் காலத்தில் சில பெண்கள் உடன்கட்டை ஏறினார்கள் என்பதைக் கல்வெட்டுகளால் அறிகிறோம். வடநாட்டில் 18-ம் நூற்றாண்டு வரை இப்பழக்கம் இருந்ததால், ஆங்கில ஆளுநர், வில்லியம் பென்டிங் என்பவர் தடுத்தார். அதற்கு ராஜாராம் ஆதரவு தந்தார் என்று அறிகிறோம்.

அடியவர்க்கு உணவு:

குமரலிங்கம், கொழுமம் கல்வெட்டுகளில் அடியார்க்கு உணவளிக்கும் செய்திகள் கூறப்படுகின்றன. கொழுமத்தில் திருத்தொண்டத் தொகையான் திருமடத்தில் இருந்த தபஸ்யருக்கு உணவளித்த செய்தி கூறப்படுகிறது. குமரலிங்கம் கல்வெட்டு களில் 'போனகம்' ஒன்றுக்கு பத்தெட்டுத் குத்தலரிசி என்றும் விஞ்சனங்களுக்கு ''நெல் இருநாழி'' என்றும் பல கல்வெட்டு களில் கூறப்படுகின்றன. ''போனகம்'' என்பது கடவுளுக்குப் படைக்கும் நிவேதன உணவைக் குறிக்கும்.

கல்வெட்டில் வரும் பயிர் வகைகள்:

செந்நெல், கரும்பு, செங்கழுநீர், வாழை, கொழுந்து வெற்றிலை, தெங்கு, கமுகு, மஞ்சள், இஞ்சி இவற்றில் கொழுந்து தவிர மற்ற எல்லாப் பயிர்களும் கொழுமம் பகுதியில் இன்றும் பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

திருநந்தவனங்கள்:

குமரலிங்கத்தில் உள்ள கரியவரதராஜப்பெருமாள் கோயில் கல்வெட்டுகளில் திருநந்தவனங்களின் பெயர்கள் அதிகம் வருகின்றன. குமரலிங்கம் கல்வெட்டுகளில் ஐந்துக்கும் மேற்பட்ட நந்தவனங்கள் கூறப்படுகின்றன. அவை 'தேவகிபுத்திரன் திருநந்தவனம்', 'பதிநெட்டு நாடு திருநந்தவனம்', 'ராஜராஜ திருநந்த வனம்', 'வீரநாராயணத் திருநந்தவனம்' என்பன. கொழுமம் கல்வெட்டு ஒன்றும் நந்தவனத்தைப் பற்றி கூறுகின்றது.

திருவிழாவும் அவற்றிக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்களும்:

கொழுமம், குமரலிங்கம் கல்வெட்டுகளில், பல்வேறு திருவிழாக்கள் கூறப்படுகின்றன. ஆட்டைத் திருநாள், தை மாசத்து ஆட்டைத் திருநாள், பெரிய செயங்கொண்ட சித்திரைத் திருநாள் என்று வருகின்றது. சயங்கொண்டச் சித்திரை திரு விழாவிற்கு நான்கு நாட்டுச் சாமந்தர்களும் கருமஞ்செய்வார் களும் சில ஊர் ஊராளிகளும் நிவந்தமளித்து அவர்களே முக்கியப் பங்கு ஏற்படுத்துவார்கள் என்று அரசன் ஆணை பிறப்பித்

துள்ளான். வைகாவி நாட்டுச் சாமந்தர், கரைவழி நாட்டுச் சாமந்தர், கொழுமத்து சாமந்தர், பேரூர் நாட்டுச் சாமந்தர், வீரகேரள வள நாட்டுச் சாமந்தர், நல்லூர்கால் நாட்டுச் சாமந்தர், அரைக்கரசு நாட்டுக் கருமம் செய்வார், ஏழூர் ஊரார், சோழமாதேவி ஊரார், கடற்றூர் ஊரார் ஆகியோர், பொன், நெல், காசு ஆகியவற்றை இத்திருநாளுக்குத் தரவேண்டும். ஒவ்வோர் ஆண்டும் எவ்வளவு தரவேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் சாமந்தர்கள் கருமம் செய்வார்கள் ஊரார் கள், ஊராளி போன்றவர்கள் பங்கேற்றுள்ளனர். இவர்களில் நாட்டுக் கருமஞ் செய்வார்கள் தண்டி அடிப்பார்கள் என்று கல்வெட்டுக் கூறுகின்றது. இவ்விழாவில் இறைவர் திருமேனி கள் எழுந்தருளிவிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. எழுந் தருளும் தேவர்களுக்குத் திருவாபரணம் சார்த்தி அலங்காரம் செய்ய வேண்டும். மூலத்தானத்து இறைவனுக்கு வழிபாடு செய்ய வேண்டும்.

விழாபற்றிய இக்கல்வெட்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பெரிய சித்திரைத் திருநாள் ஏறக்குறைய எட்டு நாட்டு நிர்வாகத்தினரை ஒன்றுபடுத்தும் திருவிழா. இது மட்டுமன்றி அவ்வந் நாட்டு மக்களும் பங்கேற்றிருப்பர் என்று நம்பலாம். அப்படியாயின் கொழுமம் கோயில் கரைவழி நாட்டுக்கு மட்டுமன்றி கொங்கு நாட்டில் உள்ள மற்ற நாடுகளுக்கும் பண்பாட்டு மையமாக இருந்திருக்கிறது என்று கூறலாம்.

தானத்தைப் பாதுகாப்போர்:

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களுக்கு அளிக்கப்பட்ட தானங்களையும், நிவந்தங்களையும் பாதுகாப்போர் பெரும்பாலும் பொதுமக்களே ஆவர். ''இத்தன்மம் காப்பான் அடி என் தலை மேலன'' எனக் கூறும் கல்வெட்டுகள் உண்டு. '' பன்மாகேஸ்வரர் ரக்ஷை'' ஸ்ரீ வைஷ்ணவர் ரக்ஷை'' என்று கோயில் தானங்கள் காப்பாற்றப்பட்டதைக் கல்வெட்டுகள் கூறும்.

இங்குள்ள சிவன் கோயில்களில் ''பன்மாகேஸ்வரர் ரக்ஷை'' என்றும், வைணவக்கோயில் கல்வெட்டுகளில் ''பதினெண் மண்டலத்து வைஷ்ணவர்கள் ரக்ஷை'' என்றும் முடிகின்றது.

கல்வெட்டின் இறுதியில் கையொப்பமிடுவோர்:

பெரும்பாலும் கல்வெட்டின் இறுதியில் கொடையளித்தவன், மத்தியஸ்தன், பிராமணர்கள், ஆட்சியாளர்கள், அதிகாரிகள் போன்றவர்கள் கையொப்பம் இருக்கும். கொழுமம், குமரலிங்கம் கல்வெட்டுகளில் பெரும்பாலும் அரசியல் அதிகாரிகள் மற்றும் சிற்றரசர் போன்றவர்கள் கையொப்பமிட்டு இருப்பதைக் காணலாம்.

சான்றாக,

''இவை உத்தரமந்திரி எழுத்து''
''இவை மூவேந்த வேளான் எழுத்து''
''இவை பிரம்ம பல்லவராயன் எழுத்து''

போன்று உள்ளன.

கல்லிலும் செம்பிலும் வெட்டுதல்:

அரசனும் மக்களும் கொடுக்கும் தானங்கள் கல்லிலும் செம்பிலும் வெட்டி வைக்கப்பட்டன. சில கல்வெட்டுகள் செப்பேட்டைப் போலவே இருக்கும். வீர ராஜேந்திரனின் கன்னியாகுமரிக் கல்வெட்டும் இராஜசிம்மனின் வாயலூர்க் கல்வெட்டும் செப்பேட்டுச் சாசன அடிப்படையில் உள்ளன.

கொழுமம் குமரலிங்கம் கல்வெட்டுகளில் ''செம்பிலும் சிலையிலும் வெட்டுவித்துக் கொள்வார்களாகவும்'' என்றும் செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொடுத்தேன்'' என்றும் வருகின்றன. கல்வெட்டு இறுதியில் ஆண்டும் நாளும் குறிப்பிடப்படுகின்றன. கல்வெட்டு தொடங்கும்போது ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் வீரசோழ தேவர்க்கு யாண்டு 20ஆவது என்று கூறப்பட்டு, இறுதியில் ஆட்சி ஆண்டு, நாள் குறிப்பிடப்படும்.

இவ்வாறு கொழுமம், குமரலிங்கம் கல்வெட்டுகள் அரிய செய்திகளையும், சிறப்பான செய்திகளையும் கொண்டுள்ளன.

---

1. தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி xxvi- ல் தற்போது இவ்வூர்க் கல்வெட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன.

10. சமுதாய நிலை

கொங்குநாட்டில் கிடைக்கும் சமுதாயச் செய்திகள் சுவை யானவை. கொங்கு நாட்டில் அதிகமான தொகையில் உள்ள கொங்கு வேளாளர்களே தங்கள் பூர்வீகம் தொண்டை நாடு என்று கருதுகின்றனர். என்றாலும் சோழ பாண்டிய தொண்டை நாடுகளில் இருந்து கொங்குநாட்டிற்குக் குடிபெயர்ந்து வந்திருக்க லாம். நாயக்கர் காலங்களிலும் மைசூரிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் பலர். இவ்வாறு இடம் பெயர்ந்து வந்து இந்நாட்டில் மக்கள் குடியேறினாலும், கொங்கு மற்றவர்களால், தன் செல்வாக் கினை இழந்து விடாமல், தன் செல்வாக்கால் மற்றவர்களை மாற்றியது எனலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த கொங்குநாட்டில் உள்ள கொழுமம், குமரலிங்கம் ஊர்களின் சமுதாய வாழ்க்கையைச் சிறிது பார்ப்போம்.

கொழுமம் குமரலிங்கம், பல சாதிகளைத் தன்னகத்தே கொண்டது. எனினும் சங்க காலத்திலிருந்தே மக்கள் தங்களுக் கென்று ஒரு தலைவனை ஏற்படுத்தி ஊராட்சி முறையைச் சிறப்பாகக் கையாண்டனர். கொங்கு நாட்டில் ஊராட்சி முறை சிறப்பாக இருந்ததாகப் பலர் கருதுகின்றனர்.

இன்றும் கொங்கு நாட்டில் ஊர்ப்பகுதிகளில் ஊராட்சி முறை பண்டைய அடிப்படையில் அமைந்துள்ளது. ஊருக்கு ஒரு தலைவர் இருப்பார். அவர் சொற்படி அம் மக்கள் முக்கிய மான செயல்களை நிறைவேற்றுவர். தண்டனை அபராதம் போன்றவை விதிக்கப்படும் கொழுமம் குமரலிங்கத்தின் பண்டைய ஊராட்சி முறை மாறினாலும் அவர்களுக்கென்று சில கட்டுப் பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

அடுத்து கொழுமம், குமரலிங்கத்தின் மக்கள் தொகையில் இரு ஊர்களிலும் அதிகமான எண்ணிக்கையில் வாழ்பவர்கள் பள்ளர் மரபினர். இவ்விரண்டு ஊர்களிலும் அதிகமான சாதிகள்

காணப்படுகின்றன. இரண்டு ஊர்களில் உள்ளவர்களும், தாங்கள் குடியேறியதாகக் கூறுகின்றனர். குமரலிங்கத்தைப் பார்க்கும்போது குடிபெயர்ந்தவர்கள் வைணவர்களாகவே உள்ளனர். குமரலிங் கத்தைத் சேர்ந்த கோயில்களில் வைணவக் கோயில்கள் அதிகம் உள்ளன.

பழக்க வழக்கங்கள்:

இங்குள்ளவர்களின் பழக்க வழக்கங்கள் சாதிக்குச் சாதி அதிக வேற்றுமை இல்லை எனலாம். அதேபோல் தங்களுக்கு, தங்கள் குழந்தைகளுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டால் இங்குள்ள மாரியம்மன் போன்ற தெய்வங்களை வழிபாடு செய்து நேர்த்திக்கடன் செய்வதாக வேண்டி அதன்படி செய்கின்றனர்.

குலாலர்:

குமரலிங்கத்தில் தெலுங்கு குலாலர்கள் சுமார் 200 பேர் வாழ்கின்றனர். இவர்களின் பிரிவில் இங்குள்ளவர்கள்.

1. கோலதலப் பட்டம்
2. மண்ணவர் குலம்
3. மோதிரியான் குலம்

இவற்றில் கோலதலப்பட்டம் தான் உயர்ந்த பிரிவாகச் சொல்லப்படுகிறது. கோலதலப்பட்டக்காரன் தான் உயர் குலத் தவன். கோலதலப்பட்டக்காரர் சொன்னால், மோதிரியான் குலத்தைச் சேர்ந்தவர்கள் செய்வார்கள். ஒரே குலத்தில் பெண் எடுக்கமாட்டார்கள். குலம் மாறித்தான் மணம் செய்வார்கள். இவர்கள் இதே ஊர் தான் தங்கள் பூர்வீகம் என்றும், தாங்கள் மைசூர் இராஜ குலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறிக் கொள் கின்றனர். குலாலர் குலத்தை கோலாகலர், கொளக்குறை வேதியர் மண்ணுடையார், மணாச்சக்கிரி பூலோக பிரம்மா, ஆதிசைவன் என்றும் கூறுவர்.

குலதெய்வ வழிபாடு:

இவர்கள் குல தெய்வம் திருமலைச்சாமி, கிருஷ்ணன், தருமன், முத்தாலம்மன், ஈஸ்வரன், ஈஸ்வரி ஆகும். குல தெய்வ

வழிபாடு சிவராத்திரி மாசி மாதம் நடக்கும். மண்ணவர் குலத்தார் களுக்கு பால சமுத்திரத்தில் குல தெய்வம் இருந்தது. ஆனால் அக்கோயில் இப்பொழுது இடிந்துவிட்ட காரணத்தால் அந்தப் பெயரால் கண்ணபெருமாள் கோயிலுக்குச் சென்று அங்கு புரட்டாசி மாதம் வழிபடுவர்.

குலத்தலைவன்:

பட்டிக்காரன் என்ற முறை தலைமுறை தலைமுறை யாகத் தேர்ந்தெடுப்பது. அவர்கள் குலத் தலைவன் நல்லது சொன்னாலும், கெட்டது சொன்னாலும் கேட்பார்கள். திருமணத் தில்கூடக் குலத்தலைவன் சொற்படிதான் நடப்பார்கள். கலப்புத் திருமணம் செய்தால் ஜாதியை விட்டு விலக்கி விடுவார்கள்.

வழிபாடு:

இவ்வூர்களில் நடக்கும் முத்தாலம்மன், மாரியம்மன், காளியம்மன் திருவிழா அன்று இக்குலத்தவர்கள் மண்ணினால் உருவங்கள் செய்வார்கள். சில நேரங்களில் இவர்கள் கோயில் களில் பூசையும் செய்வதுண்டு. குழந்தைகளுக்கு அக்கி என்ற நோய் வந்துவிட்டால், அக்குழந்தைகளுக்கு திருநீலகண்டரை மனதில் நினைத்துக் கோழி இறகில் சிங்கம் போன்று எழுதுவார் கள். இதன் பின்பு அந்த நோய் அக்குழந்தையை விட்டுப் போய் விடுமாம். இது திருநீலகண்டர் இவர்களுக்குக் கொடுத்த வாக்காகக் கருதுகின்றார்கள். பழநி மடத்தில் தை மாதம் திருநீலகண்டர் முக்தி அடைந்த நாள் என்று மடத்தில் எல்லோரும் அவரை நினைத்து வழிபடுகின்றனர்.

திருமணம்:

திருமணத்தில் 12 சடங்குகள் முக்கியமாகச் செய்கின்றனர். பெரியவர்களையும் குலத்தலைவனையும் அழைத்துக் கல்யாணம் நடக்கும். சிம்மாசனத்தில் அமர வைத்தல். மாப்பிள்ளை அழைப்பு, இணைச்சீர், மாப்பிள்ளைக்குப் பூணூல் அணிவித்தல், மாப்பிள் ளைக்குக் கிரீடம் கட்டுதல், கங்கணம் கட்டுதல், முகூர்த்தக்கால் போடுதல், மாங்கல்யம் கட்டுதல், நாலச்சீர் செய்தல், மண்வெட் டுதல், ஆற்றில் துறை மிதித்தல் போன்றவை இடம்பெறும். ஆண் குழந்தைகளுக்குத்தான் அதிக மதிப்பு உண்டு. குழந்தைகளுக்கு தெய்வப் பெயர்கள்தான் இடுவார்கள்.

ஈசங்க நாட்டுக் கள்ளர்:

ஈசங்க நாட்டுக் கள்ளர்கள் குமரலிங்கத்தில் சுமார் 800 பேர் இருக்கிறார்கள். இவர்கள் சோழ நாட்டிலிருந்து வந்தவர்கள் என்றும், முக்குலத்தார் என்னும் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறிக் கொள்கின்றனர். இவர்கள் சோழமன்னர்களின் பங்காளிகள் எனவும் தமது முன்னோர்களாக கரிகாலனையும் கூறிக் கொள் கின்றனர்.

உட்பிரிவுகள்:

மழவராயர், சோழகர், சோழங்க தேவர், நாட்டார், கறை மீண்டார், கொல்லத்துறையர், சேதுராயர், கொளத்தரையர், வல்லத்தார், முனைய தரையர், களத்தில் வென்றார், அங்காளயர் என்ற பிரிவுகள் உண்டு.

குமரலிங்கத்தில் சேதுராயர், மழவராயர், சோழகர், களத்தில் வென்றார் ஆகியோர் உள்ளனர். இவர்கள் குலத்தில் ஆதிகாலத் தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரிய தனக்காரர்கள் தலைவராவர். ஆண் குழந்தைகளுக்கு மதிப்பு அதிகம். பெண்களுக்கு அவர்கள் சொந்தப் பிரிவில் திருமணம் நடத்துவதில்லை. மற்ற பிரிவைச் சேர்ந்தவர்களில் பெண் எடுப்பர். திருமணத்தில் குலத்தலைவன் சொற்படி நடக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பொதுவாக இவர்கள் வைணவ சம்பிரதாயம் உடையவர். எனவே அதிகப்படி யாகப் பிற சமூகத்துடன் தொடர்பு கொள்வதில்லை. இவர்களில் பெண்கள் காதணி மற்றும் பல அணிகள் அதிகம் அணிகின்றனர். காது வளர்த்தல் என்ற ஒரு முறையில் காதில் நீண்ட துவாரம் செய்து அவற்றில் வளையம் போன்ற ஒரு பகுதி தோளைத் தொடும் அளவுக்குப் போடுவர். இப்பொழுது குமரலிங்கத்தில் இச்சாதியைச் சேர்ந்தவர்கள் பொருளாதாரத்தில் மிகவும் மேம்பட் டுள்ளனர். இந்த இனத்தாரிடம் வீரம் உண்டு. கொழுமத்தில் உள்ள மக்கள் தொகையில் தற்போதைய கணக்கெடுப்பின்படி அதிகமான எண்ணிக்கையில் வாழ்பவர்கள் பள்ளர்களே... பள்ளர்கள் குமரலிங்கத்திலும் எண்ணிக்கையில் அதிகம் . பள்ளர்களில் பல உட்பிரிவுகள் உள்ளன. அவை அம்மா பள்ளன், அய்யாபள்ளன், கொங்கு பள்ளன், சோழியபள்ளன், தொண்டை

மான் பள்ளன் மங்காநாட்டு பள்ளன் என்பன. கொழுமத்தில் மங்க நாட்டுப் பள்ளர்கள் தான் அதிகமாக இருக்கின்றனர். இவர்கள் தங்களை தேவேந்திர குலத்தவர்கள் என்றும் கூறிக் கொள்கின்றனர். மங்காநாடு பாண்டிய நாட்டில் உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

பள்ளரும், தொழிலும்:

பள்ளர்கள் தங்கள் குலத் தொழிலான வேளாண்மையையே இங்கும் நடத்துகின்றனர். பொதுவாகத் தாங்கள் நிலச் சொந்தக் காரர்களாக இல்லாமல் நிலக்கிழார்களுக்குப் பருவம் செய்தல் அதாவது வயல் வெளியில் திருடு போகாமல் ஆடு, மாடுகள் அழித்துவிடாமல் பாதுகாத்தல் போதிய நீர் பாய்ச்சுதல் போன்ற அனைத்துத் தொழிலையும் செய்வர். அதற்கு ஈடாக நிலச் சொந்தக்காரர்கள் குறிப்பிட்ட நெல் கொடுப்பர். பெண்கள் பொதுவாக வயல் வேலைகளிலேயே ஈடுபடுகின்றனர். வயல் களில் வேலை செய்தல் ஆண்களுக்கு வயல் வேலைகளில் உதவி செய்தல் போன்றவையாகும்.

கொங்கில் ஒரு முறை:

கொங்குநாட்டைச் சேர்ந்தவர்கள் சாதிப்பஞ்சாயத்தில் சில முறைகளைப் பின்பற்றி இருந்திருக்கின்றனர். குற்றம் செய்தவன் தன் முதுகில் ஒருவனை ஏற்றிக் கொண்டு பஞ்சா யத்தின் கூட்டத்தை மூன்று முறை சுற்றி வரச் செய்வார்கள். இரண்டு பேர் அவன் தலைமுடியைப் பிடித்துக் கொண்டு வருவார்கள், பின் அவனைப் பஞ்சாயத்தார் முன்னிலையில் நிறுத்தி கன்னத்தின் அறைவார்கள். அவன் மீது எச்சில் உமிழ் வார்கள். இன்று இந்த நடைமுறை இல்லை.

பள்ளர்களும் திருவிழாக்களும்:

மாரியம்மமன் விழா:

பள்ளர்கள் 8 நாள் நோன்பிருந்து காளியம்மனுக்கு விழா எடுப்பர். சித்திரை மாதம் கொழுமத்தில் கோட்டை மாரியம்மன் விழா சிறப்பாக ஆண்டுதோறும் நடைபெறும். விழாவில் இப் பள்ளர் பெண்கள் சென்று கும்மியடிப்பது உண்டு.

சோமீஸ்வரர் ஆலய விழாவில் பள்ளர் பங்கு:

வருடந்தோறும் பூஜை, விழாக்கள் நடந்தாலும் மார்கழித் திருவாதிரை தான் இங்கு நடக்கும் சிறப்பான விழாவாகும். இவ்விழாவின்பொழுது நடராஜர், சந்திரசேகரர் திருமேனிகளை ஊர்வலமாக எடுத்துச் செல்வர். அப்பொழுது ஊருக்கு அருகில் உள்ள காட்டில் தான் அம்பு போடுதல் என்ற நிகழ்ச்சி நடக்கும், அதில் நடராஜர் தங்குவதற்கு வன்னி மரம், வாழை மர இலை களைப் பந்தல்களாக அலங்கரிப்பர், அங்கு பூஜை நடைபெறும். மேலும் தேர்த் திருவிழாவின்போது தங்கள் குலத்தவர் வடம் பிடித்தால் தான் தேர் நகரும் என்று கூறிக் கொள்கின்றனர். பள்ளர்கள் மற்ற இனத்தவரைப் போலவே கோயிலில் வழிபடுதல், திருமணங்கள் நடத்துதல் போன்றவற்றை இன்றும் செய்து வருகின்றனர்.

பள்ளரின் குல தெய்வ வழிபாடு:

இங்குள்ள பள்ளர்களின் குலதெய்வம் மதுரைக்கு அருகில் உள்ள நெடுங்குளத்தில் கொந்தகை என்ற ஊரில் இருக்கின்றது.

எஜமானர்:

கொழுமத்தில் உள்ள ஒரு முக்கியமான செய்தி இங்குள்ள எஜமானர்களைப் பற்றியாகும். எஜமானர்கள் குடும்பத்தால் ஏற்பட்ட நன்மை இவ்வூருக்கு அதிகம் எனலாம். வளமை கொண்ட கரைவழி நாட்டை மேலும் வளமையுறச் செய்தமை இவர்களையே சாரும். இவர்கள் குடும்பம் இன்று தன் செழிப்புத் தன்மை யிலிருந்து சிறிது மங்கினாலும் கோயில்களில் பரிவட்டம் கட்டுதல் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் இவர்களுக்குத்தான் முதலிடம் தரப்படுகிறது. எந்த ஒரு பிராமணன் தன் இன நன்மைக்காவும், நம்பிக்கைக்காகவும் சமயச் சடங்குகளைச் செய்கின்றானோ அவனே எஜமான் என அழைக்கப்பட்டான். ஆகவே முதலில் எஜமான் முறையானது சமய அடிப்படையில் தோன்றியது எனலாம். இவர்கள் வரலாற்றை நோக்கும்போது இவர்கள் சுமார் 200 வருடங் களுக்கு முன் ஆந்திரத்தில் இருந்து வந்தனர் எனத் தெரிகிறது. இவர்கள் குல தெய்வம் வெங்கடாசல பெருமாளாகும். உத்திரா பாளையம், கொழுமம், குமரலிங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள் இவர்கள் நிலத்தில்தான் குத்தகை எடுத்து வேளாண்மை

செய்கின்றனர். தற்காலத்தில் தங்கள் சிறப்பை இழந்தாலும் மதிப்புடன்தான் இன்றும் இவ் எஜமானர் குடும்பம் காணப்படு கின்றது. கோயில் பரிவட்டம் எஜமானர் குடும்பத்திற்குத்தான் செய்யப்படுகிறது.

வழிபாடு:

இவர்கள் அம்மனுக்கு அபிஷேகம் செய்வார்கள். மேலும் ஆண்டிப்பட்டிக்கு கிழக்கே 2 கி.மீ. தொலைவில் உள்ள திருமலை சாமி என்ற தெய்வத்திற்கு பச்சரிசியும், வெல்லமும் சேர்த்து, சாமிக்கும் இறைத்துவிட்டுத் தாங்களும் உண்டு வருவர்.

மக்களின் தொழில்:

இவ்விரு ஊர்களிலும் மக்கள் விவசாயத்தைத் தான் மேற்கொண்டுள்ளனர். தங்களது முக்கியத் தொழிலாக எஜமானர் நிலத்தையே நம்பியுள்ள குடும்பங்கள் ஏராளம். நெல், கரும்பு, ஆகியவை அதிகம் பயிரிடப்படுகின்றன. பருத்தி மற்றும் காய்கறிகள், தானியவகைகளும் பயிரிடப்படுகின்றன. நஞ்சை, புஞ்சை நிலங்கள் அதிகம். அமராவதி நதியால் பயன் பெற்றுப் பசுமை வளத்துடன் விளங்கும் இந்த நிலங்களைப் பார்க்க சோழவளநாடு போல் இருக்கும்.

கல்வி:

குமரலிங்கத்தில், உயர்நிலைப்பள்ளி, ஆரம்பபள்ளி ஆகியவை உள்ளன. அதிகமாக உயர்நிலைப் பள்ளியுடன் படிப்பை முடித்துக் கொள்கின்றவர்கள் அதிகம். பிராமண வகுப்பினர் சிலர் நல்ல நிலையில் உள்ளனர். கல்லூரிப் படிப்பைத் தொடர பெண்களுக்கும், ஆண்களுக்கும் உடுமலை, பழநி இரு நகரங் களிலும் உள்ள தனித்தனிக் கல்லூரிகளுக்குச் சென்று படிக் கின்றனர்.

இவ்வாறு சங்ககாலம் தொடங்கி இன்று வரை மக்கள் சமுதாயம், கோயில்கள், சமயம் என்று அனைத்துமே மிகச் சிறப்பாக இருந்துள்ளதை அறிகிறோம். அவ்வக்கால மக்கள் விட்டுச் சென்ற பழஞ்சுவடுகளான இவற்றைப் பாதுகாத்து அடுத்தடுத்த தலைமுறை யினருக்கும் அளிக்க வேண்டியது நம் கடமை. அவற்றைப் போற்ற வேண்டியது நம் உரிமை.

துணைநூற்கள்

1. சோழீச்சுர தேவர் திருத்தல வரலாறு- நாராயணசாமி முதலியார்.
2. The Colas - By Thiru K.A. Neelakanta Sasthri
3. பாண்டியர் வரலாறு - தி.வை. சதாசிவ பண்டாரத்தார்.
4. கல்வெட்டியல் -
5. தமிழகக் கோயிற்கலைகள் -
6. கல்வெட்டு ஓர் அறிமுகம் -

(4–6: தொல்பொருளாய்வுத் துறை வெளியீடு)

7. கையேடு
8. குமணன் சரித்திரம்
8. கோவை மாவட்டம் திரு. சோமலெ
9. கொழுமம், ஐவர்மலை கைபீயது வருடம் 1818
10. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் - பகுதி 2
11. Epigraphia Indica - Vol 32
12. South Indian Inscriptions - Vol - XXVI.
13. A.R.E. Year 1909.
14. கல்வெட்டு இதழ்-2.
15. கொங்கு - இதழ்கள்
16. ஊரும், பேரும் - திரு. ரா.பி. சேதுப்பிள்ளை
17. யாவரும் கேளிர் - முனைவர் இரா. நாகசாமி
18. தமிழும், சாசனமும் - மயிலை. சீனிவேங்கடசாமி
19. பள்ளர் யார்? - திரு. தங்கவேலு
20. Jainism in India by P.B. Desai
21. Caste and Tribes by E. Thurston
22. இந்தியக் கலைச்செல்வங்கள் - முனைவர் இரா. நாகசாமி.

23. செப்புத் திருமேனிகள் - மே.சு. இராமசுவாமி

24. கொங்கு நாட்டு வரலாறு - திரு. மு. இராமச்சந்திர செட்டியார்

25. கொங்குமண்டலச் சதகம்

26. சோழன் பூர்வப் பட்டயம்

27. Kongu Country - M. Arokiyasamy

28. கொங்குதேச ராசாக்கள் சரிதம்

29. வஞ்சி மாநகர் - மு. இராகவய்யங்கார்

30. சேரர், செங்குட்டுவன் - திரு. ராகவய்யங்கார்

31. Coimbatore District Gazetteer

32. Coimbatore Census Report

33. ஆய்வுத்தேன்

34. ஆராய்ச்சித் தொகுதி.

35. பல்லவர் செப்பேடு முப்பது.

36. Political Sketches of Ancient Deccan.

வ.எண். 1 எண் 109. குமரலிங்கம் காசி விஸ்வநாதர் கோயில்

1. . . . . திரிபுவனச்சக்கரவத்திகள் இரண்[டு] கொங்கு மொன்றாக ஆண்டருளின ஸ்ரீ வீரராசெந்திர தேவற்கு யாண்டு உய

2. .....கில் சொழன் இலங்கெஸ்வரதெவனென் கரைவழி நாட்டு திருவாலந்துறை [உ]டையார் திருவாலந்தறையுடை-

3. . . . . இக்கோயிலில் பூசிக்கு[ம்*] நம்பியார் தலையாக கழுநீர் போகட்டுவான் கடையாக தேவரடியார் உள்பட ஆணை மாறும[ா]-

4. .... றும் பூசிக்கு[ம்*] நம்பியார் தலையாக [கழுநிர்] போகட்டுவாந் கடையாக இ[வ]ர் ....யிலெ ஓரைச்சு ஒடுக்கு வாராகவும்

5. ..... குவாராகவும் இம்முதல் கொண்டு உடையார்க்கு திருமெல்பூச்சு செல்வதாக நாயநார் திருமேனியும் ....

6. ....ல்லியாண திருமெநியாக கல்வெட்டிக் குடுத்தெந் இலங்கேஸ்வரதெவநெந் இத்தந்மம் நிலைநிறுத்துவாந் காரலிண்டு[1]

2. எண் 123 குமரலிங்கம் கரிவரதராஜப் பெருமாள் கோயில்

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*] கொப்பரகெஸரிபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விரசொழதெவற்கு யாண்டு இருப தாவது கரைவழிநாட்டு ப்ரஹ்மதெய ஸ்ரீ குமரங்கவிம சதுவெதிமங்கலத்துக் குராங்காட்டு ஸ்ரீ க்ருஷ்ணனென் கரிப் பிரானுக்குத் திருமாளிகைத் திரு விளக்குப்புறமாக [நிர்]

ஷானம் ப[ண்*]ணி[விட்ட] நிலமாவது விரகெரள வளநாட்டு விரசொழச்சதுவ்வெ_திமங்கலத்து மு . . . . . மாவரை இன்னிலம் ஒரு மாவரையிலுள்ள பாட்டங்கொண்டு நாள் ஒன்றுக்குத் திருமாளிகையில் ஏற்றிவரும் ஸந்த்த் திருவிளக்குப் பதிநாறுஞ் சந்திராதிதவற் செல்வதாக விட்டென் குராங்காட்டு ஸ்ரீ க்ருஷ்ணனென் இயஉஉம் பதிநெட்டு மண்டலத்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் ரக்ஷை [|| *]

3. எண். 134.

1. ஸ்ரீ ராராஜ

2. கெஸரி

3. கொனெரின்மை கொண்டாந் கயபிரான் கொயிலில் சிகாரியஞ் செய்வார்களுக்கு நம் ஓலை குடுத்தபடியாவது வைகாவி நாட்டிலுங் கரைவழி நாட்டிலும் விரகெரளவளநாட்டிலும் திருமுற்றங்க-

4. ளில் திருவாராதனம் பண்ணுவார் பிரம்மசக்ரவத்திகளுக்கு ஸ்வாமிஹொகமாகக் குடுத்து வருகிற இந்நெல்லு ஆட்டு நாற்பத்தைங்கலமும் கரியபிரான் கொயிலில் திருநாள் முதலாகவுள்ள நைமித்தியங்க

5. ளில் ஸ்ரீஹச்சக்கரவத்திகளுக்கு குடுத்துவருகிற ஃக்ஷி ணையும் இக்கொயிலில் இவரெழுந்தருளிவித்த சிங்க பெருமாளுக்கு அமுதுபடி ஒரு திருப்பொனகத்துக்குச் சந்ராதித்தவற் செல்வதாகச் செம்பிலுஞ் சிலை -

6. யிலும் வெட்டிக்கொள்வார்களாக உஃகவமெவூமாக ஷானம் பண்ணி நம்மொலை குடுத்தொம் இற்யஜூ நந்தமர் எப்பெறப்பட்டாரும் கண்டு பாறட்டுத்துக் குடுக்க இவை சொழகுலமாணிக்க முவெந்தவெளான் எழுத்து

7. யாண்டு உயஉவது நாள் உளஅய இவை விசையாலையராயன் எழுத்து [|| *]

4. எண். 135

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*]கொ இராஜகெஸரிவன்மரான த்ரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விர ராஜெஜந்த்ர தெவற்க்கு யாண்டு இருப தாவது புல்லூர் ஸாரஸ்வாஜி ஸ்ரீவல்லஸந ஸூந்தரபாஹு

2. ஸட்டஸொமயாஜியான ப்ரஹ்மச் சக்கரவத்தியென் கரிய பிரான் கொயிலில் நான் உகந்தருளுவித்த சிங்கப்பெரு மாளுக்கு அமுதுபடிக்கு விட்ட நிலமாவது ஸ்ரீ க்ருஷ்ணஸட்ட ஸொமையாஜியார் [கூறு] இதுக்குமெல் தென்விசை ஐ[ம] திஇலெ வாசிக்கு

3. ஆளுடையான் ஸட்டஸொமையாஜியார்குப் பத்தாவது தை (ம்)மாவஸத்து ஆட்டைத் திருநாளிலெ பெருமாள் ஧ானம் பண்ணின நிலமாவது [வீரகெரள வ]ளநாட்டு அரியவை செய்த சொழச் சதுவெ஧ிமங்கலத்திலும் ஜயங்கொண்ட சொழநல்லூரிலும் தூண்டி [யி] ல் வாழவந்தானை . . . . .

4. பெருமாள் பண்டாரமானமையில் அவன்னிலங்களில் இவர் களுக்கு ஧ானம் பண்ணின நிலமிரண்டு மாவுக்கு நான் கெல்லையாவது [விரநாரா]யண ப்ரஹ்மாயிராஜன் நிலத் துக்கு மெற்கும் உத்தமசொழ ப்ரஹ்மாயிராஜன் நிலத்துக்கு வடக்கும் தெவதானக் கண்ணாற்றுக்கடையில் வடக்கு நொக்கிப் பொன கொ. . . . . கிழக்கும் நிலை

5. உடைச்சொழ ப்ரஹ்மாயிராஜன் நிலத்துக்குத் தெற்கும் இன்னாந் கெல்லைக்குட்பட்ட நிலம் ஒரு மாவரையில் தெற்கடைய நிலம். . . . . முன்றாங்கண்ணாற்று [நிலெ] மாருமாவுக்கு நான்கெல்லையாவது பெருமாள் னிலத்துக்கு மெற்கு இம்முன்றாங்கண்ணாற்றுக்கு வடக்கு வெள்ளம் பொகிக்கவருக்குக் கிழக்கு நாலாங்கண்ணாற்று. . . . . ன் நான்கெல்லைக்கு

6. ள்பட்ட நிலமொருமாவும் ஆக நிலமிரண்டுமாவுக்கு இறை புரவு ஸிஜ்ஞாய மெலவை உகவை மற்றும் எப்பெறபட்டநவும் இறாதார்களாகவும் இன்நிலமிவர்களிழக்க எ.ககருக்கு விலைபொற்றி யநூ஧ாநஸதிர்யநத்துக்கு முரிச்சாவதாகவும் ஧ாநம் பண்ணி திருவெழுத்திட்ட திருமுகமுங் குடுத்

தருளினமையில் ஸ்ரீ க்ருஷ்ணபட்டஸோமையாஜியார் பக்கலும் இவ்வாழ்வுடை-

7. யான் பட்டஸோமையாஜியார் பக்கலும் நான் விலை கொண்டு சிங்கப்பெருமாளுக்கு அமுதுபடிப்புறமாக விட்ட நிலம் இரண்டுமாவும் வைகாவினாட்டு ப்ரஹ்மதேயம் ஸ்ரீ அயிராயிராஜசதுர்வேதிமங்கலத்து ஸபையாரும் இரட்டையம்பாடியூராரும் பூலுவ்வூராரும் இவ்வூர்க்கு... பண்ணின திரும[ா] ல் தாமோதரபட்ட-

8. ர்க்கு தானம் பண்ணின இறையிலி நிலம் அரைமாவுக்கு நான்கெல்லையாவது வெண்கலமன்னாறையில் வடக்கு நொக்கிப்பொன கொண்[டொடி]க்கு மெற்கு குரங்குண் ணிக்குப் பொன வழிவதிக்கு வடக்கு அரைமாக்கூற்றுக்குக் கிழக்குக் குண்டூர் பெருமாள் நிலத்துக்கும் காவன் காவனிலத்துக்குந் தெற்கு இன்னான்கெல்லைக்குள் பட்ட நிலம் அ-

9. ரைமாவுக்கும் வந்த இறை புரவு ஸித்தாயம் எலவை யுகவை மற்றும் எப்பெற்பட்டனவும் இவர்கள் தாங்களெ இறுப்பார் களாகி இத்தாமோதரபட்டற்க்குத் தங்கள் ஒலையுமெழுத் திட்டுக் குடுத்து இறையிலியாக தானம் பண்ணிக்குடுத்த இன்னி[ல *]ம் அரைமாவும் நான் இத்தாமோதரபட்டர் பக்கல் விலை கொண்டு

10. சிங்கப்பெருமாளுக்கு அமுதுபடிப்புறமாக விட்ட நிலம் . . . . . மாவும் . . . . . இன்னிலம் இருமா[வரை] . . . . . அமுதுப் புறமாக ச ந்த்ராதித்தவற் செல்வதாக . . . . . இன்னிலங்களில் சிங்கப்பெருமாளுக்கு திரு . . . . . ஸ்ரீகரியபிரான் ஸ்ரீபண்டார . . . . .

5. எண் 136

1. இராஜகெஸரி:-வந்மக்கு ஸம்வத்ஸரம் ஐ(3)வது யாண்டு வீரராஜெந்த்ரதெவஸ்ய ஸார்வபௌம ஸ்ரீ கூறநிலவி[ய*] கொனெரின்மை கொண்டான் உலகமுண்டான் பட்ட ஸோமையாஜி மகன் நாராயண பட்டனுக்கு நம் ஓலை குடுத்த படியாவது . . . . . பட்டன் மகனும்

2. பெரனும் வர்மியாய் ஓடிப்பொனமையில் அவன் நிலம் நம்முதாயனனிலம் இன்னாராயண ஹட்டனுக்கு நாங் குடுத்தமையில் இவன் தமப்பன் உலகமுன்டான் ஹட்ட ஜொமையாஜி நமக்கு நன்றாகத் திருநாராயணபுரத்து எம்பெருமான் வெதநாயகப்

3. பெருமாளுக்கு வன்குருகூர் நாராண ஊஸனை இட்டடு முன்பு செய்வித்து வருகிற திரு நஙவனத்துக்கு ஜிவிதமாக விட்ட நிலமாவது விரகெரளவளநாட்டு விரநாராயணச் சருப்பெதிமங்கலத்து ஸ்ரீதெவி அகரத்து விரகெரள மன்னறை யில் நிலம் அரைமாரைக்க[ா*] -

4. ணிக்கு எல்லையாவது செம்பியன் கிழாநடி வதிக்கு வடக்கும் விரகெரள வாய்க்காலுக்குக் கிழக்கும் மடத்துக்குக் கிழை அத்திப்பொயிற் கிழ் நிலம் அரைமாவும் இம்மன்னறையில் இவ்வாய்க்காலுக்கு வடக்கு இவ்வாய்க்காலுக்குக் கிழக்கு விளாவொடுயெரியில் கீழ் நிலம் அரை-

5. காணியும் ஆகன்னிலம் அரைமாவரைக்காணியும் அரியவை செய்த சொழமன்னரையில் செம்பியன் முக்கொக்கிழான்னடி வாய்க்காலுக்குத் தெற்கு அவனிமாணிக்க வாய்க்காலுக்கு மெற்கு இவ்வாய்க்கால் கிழ்நிலம் அரைக்காணியும் ஆக மன்னறை இரண்டினால்

6. முக்காணியும் நன்னனூரில் நிலம் ஒருமாவுக்கு எல்லையாவது விரநாராயணப் பெருவாய்க்கால் கிழ் அதிசெயசொழ மன்னறையில் விரநாரணவதிக்குக் கிழக்கும் விரகெரள வாய்க்காலுக்குத் தெற்கு முதல் கண்ணாற்று முதற்சதுரத்து வடகிழ்க் கடையந் நிலம் ஒரு மா

7. ஆகனிலம் ஒருமாமுக்காணியும் இறை புரவு ஸிதாயம் எலவை உகவை மற்றும் ஏற்பபெற்பட்டி துங்கொள்ளா தொமாகவும் இத்திருநந்தவனம் வன்குருகூர் நாராணா ஊஸனும் இவன் மக்கள் மக்களுஞ் செய்துவருவார்களாக நம் ஒலை குடுத்தொம் இவை . . . . .

8. எழுத்து இவை ஸ்ரீஹப்பல்லவரையன் எழுத்து : ௨

6. எண். 137

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*] கொனெர்மைகொண்டான் சொழமண்டலத்துத் திருவரங்கத் திருப்பதியில் ஸ்ரீவெஷ்ணவர்களுக்கும் சிகாரியஞ்செய்வார்களுக்கும் நம் ஒலை குடுத்தபடியாவது அழகியமணவாள பெருமாளுக்கு

2. [பதிய]முது சிரப்பு அமுதுக்கு நாள்ளொன்றுக்கு நெல் கலமாக ஆண்டொன்றுக்கு முந்நூற்றறுப்பதின் கலத்துக்[கு *] நாம் விட்ட நிலமாவது பெருர் நாட்டு கொவன்புத்தூரான வீரகெரளநல்லூர் ஸபைை பற்றாய் இறங்கி நம்முதாய் கிடந்த

3. நிலம் ராஜராஜ மன்னறையில் முதற்சதிரத்து நாலாங் கண்ணாற்று நிலந் நாலுமாவும் இரண்டாஞ் சதிரத்து ஐஞ்சாங்கண்ணாற்று நிலம் இரண்டுமாவும் ஆக நிலம் பத்துமாவும் இன்

4. நிலம் பத்துமாவும் நம்முடைய ஜந்நக்ஷத்ரத்திலெ நமக்கு நன்றாக உதக[பூர்வ*]மாக தானம் பண்ணினமையால் இந் நிலத்தால் வந்த இறை புரவு ஸித்தாயம் எலவை உகவை மற்று[ம்*] எப்பெற்பட்டதுங் கொள்ளாதொமாகவும் இம் மன்னறை ஒரு பூவிளையிலுள் அந்நிலம் பத்து மா

5. வும் ஒரு பூவிளைவதாகவும் இப்படி சந்த்ராதித்தவற் செல்வதாக செம்பிலும் சிலையிலும் வெட்டிகொள்ளப் பெறுவார்கள்ளாகவும் வெட்டிக்குடுத்தொம் இவை . . . . யன் முவெந்தவெளான் எழுத்த இவை தொண்டைமான் எழுத்து பதினெட்டு மண்டலத்து ஸ்ரீவைஷ்ணவர்கள் ரக்ஷை [||*]

7. எண். 138

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*] கொனெரின்மைகொண்டான் வன்குருகூர் நக[ர]த்தாருக்கு நம் ஒலை குடுத்தபடியாவது ஜனநாத - ப்ரஹ்மாதிராயந் நம்பெரால் நமக்கு நன்றாக வெதநாயகப் பெருமாளுக்குத் தா . . . . சை செய்விக்க திருநந்தவனத்துக்கு ஜீவனத்துக்கு விட்ட நிலமாவது கரைவழி நாட்டுக் கொழுமத்துக்குக் குளக்கிழ் பருதிகுல-

2. ச்சதுவெ்ூதிமங்கலத்துச் சொக்கன் மகந் திருவரங்கன் அவன்னிலம் நம்முதானமையில் விதைநிலத்துக்கும் எல்லை யாவது கொளகெஸரிப் பெரெரிக்கு மேற்கு அதிராயிராஜ ஈ௱ரமுடையார் நிமந்தப்புறத்துக்கு வடக்கும் இஜெவர் நிமந்தப்புறத்துக்குத் தெற்கும் இவ்வெல்லைக்குள்பட்ட விதைக் குறுணியும் விராணப்

3. பல்லவரையன் மன்றாட்டு நிலத்துக்கு மெற்கும். . . . வடக்கும் துநப்பிள்ளை நிலத்துக்குக் கிழக்கும் அதிராயி ராஜஈ௱ரம்முடையார். காப்புறத்துக்குத் தெற்கும் இவ்வெல் லைக்குள்பட்ட விதை முக்குறுணியும் விராணப் பல்லவ ரையன் நிலத்துக்கு மெ

8. எண். 143

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஸக௱ஷிவாஒளஷிவ்ரநெ௱[ஐ]௦கூ௲

2. விரராஜெந்த்ர ஜெவஸ்ய ஸாவஙஉ விஸ

3. ௨௦மஞ௯ [॥*] ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்ரவத்தி[கள்]

4. கொனெரின்மைகொண்டான் பாண்டிம-

5. ண்டலத்துக் கிழிரணிய முட்டநாட்டுத் திரும[ா]

6. லிருஞ்சொலை நின்றருளிய அழகர் கொஇலில் ஆ-

7. ழ்வார்கள் பதிமற்க்கும் அமுதுபடிப்புறமாக நா[ம் வி-]

8. ட்ட நிலம் ஆவது கரைவழிநாட்டு பிறிந்த ராஜராஜவ-

9. ளநாட்டு உலகுடையபிராட்டிச் சதுவெ்ூதிமங்கலத்து விட்-

10. ட நிலமாவது அதிபசொழ மன்னறையான ஆளுடைந-

11. ாச்சிமன்னறையில் பன்னிருகுலவனென்று பெர் பெற்ற நி-

12. லம் மூன்று மாமுக்காணி இந்நிலம் மு[ன்*]று மாமுக்காணிக்கு

13. நான்கெல்லையாவது கிழ்பாற்கெல்லை வடக்கு நொக்கி

14. பொகிற கண்ணாற்றுக்கு மெற்கும் தென்பாற்கெல்லை இக்கண்

15. ணாற்றில் நின்றும் மெற்குநொக்கிபொகிற கண்ணாற்றுக்கு வடக்-

16. கும் மெல்பாற்கெல்லை திருப்பெர்விக்கிரம சொழ ஸ்ர்ஹெ[ந்]

17. தொட்டத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை மெற்கு நொக்கி பெ-

18. பாகிற கண்ணாற்றுக்கு தெற்கும் இந்நான் [கெல்லைக்] குட்பட்ட நில

19. ம் முன்றுமா முக்காணியும் இவ்வாழ்வார்கள் பதின்மற்கும்

20. அமுதுப்படிப்புறமாய் நம்பெரால் விரராஜெந்திரன் சந்தி எ-

21. ன்று அமுதுசெயிது பொதுவத[ான இந்நிலத்த . உள்ள]

22. இறை புரவு ஸிஞாயம் எலவை உ[க]வை நங்கன்மிகள் பெ[று]

23. சாமந்தப்பெறு நம் எழுச்சிசொறு மற்றும் எற்பெட்டனவும்

24. கொள்ளகடவதல்லதாக ஷந்ராஜித்தவற் செல்வதாக நம் ஒ-

25. லை குடுத்தொம் நன்தமரானர் ஏற்பெறபட்டாரும் பாறபடு

26. த்து குடுக்க இவை செரனைவென்ற சொழ முவெந்தவெளாந் எழுத்து

27. இயாண்டு உயரு வது ௩௨ கூய இவை விரராசெந்திர [விரதம் எ]டுத்த[ா]

28. ன் எழுத்து சகரயாண்டு ௲௩௱௰௨ பதிநெட்டு மண்டலத்து ஸ்ரீவெ

29. ஷ்ணவர்கள் இரக்ஷை

9. எண். 144 கொழுமம் சோழீஸ்வரர் கோயில்

1. கொவிராசகெசரிபந்தமரான தி௵வனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விரராசெந்திரதெவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்லியாண்டு சயருவது கரைவழினாட்டுக் கொழுமத்து ஆளுடையார் விரசெ-

2. சாளிஸ்வரமுடையார் கொயிலி[ல்*]ப் பழைய நித்தநின்றாடு வார் வடுகன் கலகத்திலெ செமநிதப்பி எழுந்தருளுகையில் பிம்பு வடகூறில் பெருமாள் புரவரியாரில் ஆளவந்தான் அவினாசியான கச்சியராயநென் எழுந்தரு-

3. ளுவித்த ஆளுடையார் நித்தநின்றாடுவாற்கு அமுதுபடிக்கு நாளொன்றுக்கு அரிசி நாநாழிக்கு விஞ்சனமுட்பட ஒன்று முன்றாக நாள் ஒன்றுக்கு நெல் குறுணி நாநாழிக்கு னான் கொண்டுவிட்ட நிலமாவது கரைவழிநாட்டு கடற்றூரான இ-

4. ராசராச நல்லூரில் காணியுடைய பாரசிவரில் விமன் உடையானான உலகுடைச் சொழவாச்சி..ப்பக்கல் ஆவண.ச் ஸ்ரீ யக்கிபழஞ்சலாகை அச்சுப் பதினெழும் பண முன்றுக்கு இக்கச்சியராயநெென் கொண்டுவிட்ட

5. நிலம் இவ்வூரில் ஆளுடையார் கொங்கவிடங்கிச்சரமுடையார் ஐங்கையா. . . . இவன் உவச்சற்குடி ஆறினா[ல்*] விதை கலநெ முக்குறுணிக்கு னான்கெல்லையாளுடையார் திருமருதுடையாரமுதுபடிப்புறத்துக்கு மெற்குத்

6. தென்பாற்கெல்லை பெருவாய்க்காலுக்கு வடக்கு மெற்பா[2]ற் கெல்லை இநாயனா[ர்*] உ. . . . ருமாளுடையர் திருமருது டையார் தெவதாநத்துக்குக் கிழ் அ. . . . ல்லை [கா]ராண்மைக் காணிக்கும் புற பொக்காணி-

7. க்கும் மெற்கு இநான்கெலைக்குட்பட்ட நெல் விதை கலநெ முக்குறுணியும் மெற்படியான் ப . . . . சொழ. . . . நு[வக்கு]. . . . . . ஆணை. . . . . . யக்சிபழஞ்சலாகை அச்சுப் பதிணைஞ்சுக்கு னான்

8. . . . . தருவார்.

10. எண் 145

1. ஸ்வஸ்திஸ்ரீ[॥ *] கொநேர்மைகொண்டாந் மௌநசஃ கொதத்து எஞ்ஞமுத்தி ஸ்ரீமுலத்தானமுடையார் . . . . . கண்ணபட்டனு [க்கு] நம் ஒலைக் குடுத்தபடியாவது ந[ம்*]முடைய ஜநநக்ஷத்திலெ

2. சூரியகிர[ஹ*]ணம் உண்டானமையால் இதுக்கு பரிகாரமாக[3] சிவலிங்க வ்ரதிஷெ பண்ண வெணுமென்று, நம்பட்டகள் நமக்கு சொன்னமையில் க[ரை] வழிநாட்டுக் கொழுமத்திலெ நமக்கு னந்றாக நம்பெரா-

3. ல் சிவலிங்க வ்ரதிஷெ பண்ணுவொமென்று பண்ணின மையில் இவந கட[ற்றி]ரால் நின்றும் தெவரையும் உமாபாகை யும் எழுந்தருளுவித்துக் கொண்டு கருஷணை யாதி வ்ரதிஷாந்தமாக உள்ள-

4. னவெல்லாம் சமை[ய*]க்கொண்டு இவந் செய்வித்து நம்மைவிட்டு விரசொ[ழ] ஈஸ்வரமுடையாரை திருவ்ரதிஷெ பண்ணுவித்தமையில் இக்கொயிலானது இவநுக்கு காணியாக நிர்வ[ார்த்*]துக் குடுத்தொம் இக்கொ[யிலா-]ன்மைக்கு இவனுக்கு காணி மு . . . . . . இச்சங்கிராமகால நல்லூரில் எழு அ . . . .

5. வந்த ஆசாரியமும் ஆசாரியபொகமும் இக்கொயிலில் அவிபெலி பிடில்வாரியும அர்[ச்]சநாவொகமமும் இவந்தாநெ செய்துகொள்வானாக இவனுக்கு விரசொழ ஈஸ்வரமுடையார் கொயில் காணியாக கு . ணுத்திரப்பல்லவரையன் பற்றில் இன்னாயனாற்கு [அமு]துபடியுட்பட விட்டுக் கல்வெட்டின நெல்விதை ஐங்க . . . .

6. த்தொம் இவனுக்கும் இவந் மக்களுக்கும் விலையொற்றி தந்மதான ஸ்ரீதனத்துக்கு உரிச்சாவதாக இவனுக்கு பரிசாரமாக . . . . லத்தில் இவனுக்கு காணியாக விட்ட நெல் விதை முக்கலமுங் கொ[ண்*]டு இன்னாயனார் கொயிலுக்கு இவன்செய்

11. எண். 146

1. ஸ்வஸ்திஸ்ரீ [II*] கொனெரின்மை கொண்டான் சிற்பாசாரியன் மணியன் கயிலாயமான விரசொழ ஆசாரியனுக்கு

2. நம்மொலை குடுத்த பரிசாவது கொழுமத்து ஆளுடையார் விரசொழிசுரமுடையாரையும் எழுந்தருளு-

3. வித்து இன்னாயநாற்கு உபாந[ாதி ஸ்தூபி] பரியந்தமாக கொ[யி] லுஞ் செய்து விமானப் ப்ரதிஷ்டையும் பண்ணி

4. யும் பணியாவது உலொகத்தாலெ எழுந்தருளுவிக்குந் திருமெனிக்குஞ் சிலையாலெழுந்தருளுவிக்குந் திருமெனிக் கும் எட்டின் முதலில் நாலத்தொன்று பொன்னு[ம்*] நெல்லுங் கொள்வானாகவும் பு[ந]

5. ம்பு இக்கோயிலில் ஆரெனுந் தன்மஞ் செய்தார்களாகில் ஒன்றுபாதி பொன்னு [ம்*] நெல்லுங் கொள்வானாகவும் இக்கொயிலில் அழிவசொர்வனவும் திருநடைமாளிகை திருவெடுத்துக்கட்டி யுட்ப-

6. டச் சித்திரமெழுதக் கடவனாகவும் இக்கொயிலில் தன்மங் களுக்கு எழுத்து வெட்டக் கடவனாகவும் பகல்சொறு கொண்டு செய்வானாகவு[ம்*] இன்னி[ல]ம் [இ]வனுக்கு விலை ஒற்றி தனயான ஸ்ரீ[த]னத்துக்கு த[ரு]வதாக -

7. வும் விலை ஒற்றி[த]னயான ஸ்ரீதனங் குடுக்குமிடத்து இத்தெவை செய்ய வல்லவனுக்குக் குடுப்பானாகவும் இன்னிலம் இறைபுரவு சிற்[றா]யம் எலவை யுகவை எப்பெர்ப்பட்டி[துங்] கொள்ளா[த]தாகவும்

8. இன்னிலம் இன்னாயனார் கொயிலில் திருமடைப்பள்ளிக் குள்ள பரிசாரம் பெறுவதாகவும் இப்படிக்கு இருபத்து மூன்றாவது கார்முதல் நம்மொலை குடுத்தொம் நந்தமாரயு[ள] . . . [ன்]பாற்படுத்துக் குடுக்க...

9. பன்மாஹெஸ்வர ரக்ஷை

12. எண். 158

1. ஸ்வஸ்திஸ்ரீ [II*] கொப்பரகெஸரி பற்மராந திரிபுவனச் சக்கரவத்திகள் கொங்கிரண்டும் ஒன்றாக ஆண்ட ஸ்ரீ விர சொழதெவற்கு யாண்டு இருபத்தொன்றாவது கரைவழி நாட்டுக் கொழுமத்து ஆளுடையார் விரசொழ ஈஶ்வரமுடை யாரை நமக்கு நன்றாக எழுந்தருளுவித்து திருப்ரதிஷ்டை பண்ணி இன்னாயநார்க்கு அமுதுபடி சாத்துபடி பலபடி நிமத்தங்கள் உட்பட மற்றும் வெண்டுவனவயிற்றுக்கு விட்ட நிலமாவது

13. எண். 159

1 ஸ்வஸ்திஸ்ரீ [II *] கொ[னெரி]ன்மை கொண்டாந் கரைவழி நாட்டு கொழு[ம*]த்து ஆளுடையார் விரசொழ ஈஶ்வரமுடை யார் கொயிலில் காலபிடார செய்வார்களுக்கும் தெவகன்மி களுக்கு நம் ஒலை [கு]டுத்தபடியாவது இக்கொயிலில் சித்திரைத் திரு-

2 நாளில் ஆசாரிய தக்ஷிணை முப்பதிங்கலத்தில் ஸை வாசாரியந் நெல் பதினைங்கல கலந் நிக்கி நின்ற நெல்பதினைங்கலமும் பிள்ளை பெரும்பிள்ளை ஆழ்வார் சித்திரைத் திருப்பணி திருவிருந்திருநாள் நமக்கு நன்றாக அமுது செய்வித்து வந்தமையில் இவற்கு

3 ....மம் இயதூஉழுஞ் சஞ்சாசித்தவற் செல்விதாகச் செம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக் கொள்வதாக நம் ஒலை குடுத்தொம் இது கண்டு நஞ்ழாரனார் [பாற்] படுத்து குடுக்க பன்ஊாஹெஸ்வர ஸெக்ஷ இவை வைராதராயந் எழுந்து யாண்டு யக [II*]

14. எண் 166

1 ஸ்வஸ்திஸ்ரீ [II*] கொநெரின்மை கொண்டான் ஆளுடையார் விரசொளிச்சுரமுடையார் கொயிலில் . . . . நம் ஒலை குடுத்தபரிசாவது மாமடிக்கு நன்றாகத் திரிபுவநசுந்தரரை எழுந்தருளுவித்து திருக்கல்லியாணம் பண்ணுகிறபொது காவாடிக்கா நாட்டு தெவந்பாடியாந விரநாராயண நல்லூரில் இறை புரவு ஸிஷ்தாயம் எலவை உகவை பொலிவுட்டாகச் சாமந்தர்

2. பெறு அந்தராயப் பெறு மன்றுபாடு தெண்டகுற்ற மற்றும் எப்பெறப்பட்டதும் கிழ்புரவு மயிற்காணமு மற்றும் எப்பெர் பட்டதும் இக்கொயிலுக்கு சந்தியா திபத்துக்கு உடலாக கொண்டு வருவதாக இவ்வூர் தெவதானமாக நீர்வார்த் துக்குடுத்தொம் இவ்வூர் ஆராயுமிடத்து சாமந்தரதிகாரஞ் செய்வாரகள் ஆராயககடவரல்லவாகவும்..... ண்டத்து இக்கொயி ஸ்ரீமாஹெஸ்வரர் தெவகன்மிகளெ ஆராஞ்சு ஆ-

3. ராஞ்சமுதல் திருவிளக்குக் குடலாக குடுத்தொம் நந்தமாரநார் பாற்பெடுத்துக் குடுக்க இவை விரநாராண விரசிங்கதெவந் எழுத்து உ ஸ்வஸ்திஸ்ரீ [||*]

15. எண். 167

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*]கொநெரின்மை கொண்டான் ஆளுடையார் விரசொளிச்சரமுடையார் கொயிலில் தெவகந்மிகளுக்கு நம் ஓலை குடு [த் *] தபடியாவது ஒன்பதுகரை நாட்டு தவ . . . . மாடக்கொயில் பூவழி ஒன்றுக்கு சிவப்ப[ா*]ணர் உவச்சர் நிம-

2 ந்தக்காறர் சுந்தரப்பெருமாளுக்கு அமுதுபடி நாள் க-க்கு . . . . கலமு [ந்*] தாநப்பெறு . . . . நாற்கலமு[ந்*] கூடிக் கொயிலொன்றுக்கு பூவழி சுந்தரபெருமாளமுதுபடி உள்படி நெல்லு முக்கலமும் விநாயகப்பிள்ளையார் கொயில் ....க்கு நெல் ஒரு கலமும் மாமடிக்கு நன்றக நாம் எழுந்தருளு [வித்த] திருபுவந சுந்தரற்கும் நஞ்சியாற்கும் நாளொன்று சந்திமுன்று அரிசி பதக்கிருநாழிக்கும் அம்மைநாச்சியாற்கு நாளொ-

3. ன்றுக்கு அரிசி இருநாழிக்கும் நமக்கு நன்றாக நம் ஜந்நக்ஷத்ர பிரட்டாதி சதையத்திலே திருநா[ளெ*] எழுந்தருளத் திறத[ப்] வ ஸாஉ [த]ந்து அருளித் திருநாளுக்கும் சுந்தரப்பெருமா ளமுதுபடி கோயிலா[ர்] கலமு[ம்] நீங்கலாக தாநப்பெறு கொண்டு அமுதுபடி அரிசி பதக்கு நாநாழியும் திருநாளும்

செல்வத[ா*]க இன்நெல் ஒன்பது கரைநாட்டுக் காப்பார் செவ்வார்களே தண்டி இ[ந்*]நாட்டு கரைக்காணிக்கு உயக மா விட்டே

4. ன் இத்துவிச்சந்திர பெருந்திருக்கட்டிலேரி பண்டாரக் காலாலே அளந்து குடுப்பாராகவும் இக்கால கூரா செய்வராக வு[ம்*] பொலிவு பொற்பூ .க்ககூறை கொள்ளாதொமாக நம் ஓலை குடுத்தொம் ந[ந்]தமாரனார்ப்பெடுத்துக் குடுக்க இவை வீரநாராயண வீரசிங்கதெவ[ன்] எழுத்து ௨

16. எண். 173

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*] ஸவு.ஜிக

2. ஸ௦வகஸர ஆடிமாதம்

3. இரண்டா[ந்*] தியதி விதிவிட

4. ங்க நயினாரென் கொழும-

5. த்தில் அழகிய திருச்சிற்றம்-

6. பலமுடையான் திருமடைவி-

7. ளாகத்து நதாத்தாற்கு கல்-

8. வெட்டிக்குடுத்த பரிசாவது முன்

9. இருக்கும் குடிக்கும் பின்பு எ-

10. றும் குடிக்கும் வெடிக்கை

11. மமடி அதிக்கை மற்றும் எப்

12. பெற்ப்பட்ட உபாதியுட்பட

13. ஒன்றுக்கு முன்றால் ஆறுப

14. ணம் இறுப்பார்களாகவும்

15. இது ஒழிய வெறு ஒன்று சொல்-

16. லுமவர்கள் நித்த நின்றாடு-
17. வாரைப் பிழைத்தார்களாவா-
18. ர் இப்படி சம்மதித்து கல்-
19. வெட்டிக்குடுத்தென் விதி

17. எண். 174

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*] த்ரிபுவநசக்ரவ
2. ர்த்தி கொனெரிம்மை கொண்டான்
3. கரைவழி நாட்டுத்
4. திருவாலந்துரை-
5. யா விக[்ர]மசொழ-
6. ச்சதுர்வெதிமங்கலத்-
7. து ஸபையார்க்குத் தங்-
8. களூர்த் துறையில் மஹா
9. ஹாரதம் வாசிக்கும் பெற்கு
10. இவ்வூரிலிருபத்தெட்டாவது
11. வரையுங் காடு பாழான நிலத்தில்
12. தில்லைநாயகன் திருத்திக் குடுக்கும் நில-
13. ம் அரைமாவும் இந்நிலத்துக்கு வருங்க-
14. டமை நெல்லு ஒட்டச்சு ஆராட்சி அந்த-
15. ராயம் எலவை உகவை காணிக்கை மண்
16. டல முதல்மைப்பெறு முதல் எழுத்து
17. வினியொகம் காலிங்கராயர் வினிெ-
18. யாகம் சந்துவிக்ரஹப்பெறு கொ-
19. ண்டது முதல் குற்றதெண்டம் காத்-

20. திகைப்பச்சை மற்றும் எப்பெற்பட்ட இ-

21. றைகளும் இருபத்தொன்பதாவது மு-

22. தல் இறையிலியாகத் தந்தொம் இப்-

23. படிக்கு இவ்வொலை பிடிபாடாகக்-

24. கொண்டு சந்த்ராதித்தவல் செல்வதா-

25. கக் கல்விலும்செம்பிலும் வெட்டி-

26. க்கொள்க இவை வில்லவதரையன்

27. எழுத்து யாண்டு உயக நாள் கூய ஆ இவை

18. எண். 175

1. ஸ்வஸ்திஸ்ரீ [|| *] திரிபுவநசக்ரவத்தி கொநெரின்-

2. மை கொண்டான் கரைவழிநாட்டு உல-

3. குடைப்பிராட்டி சது-

4. வெ்வேதிமங்கலத்து ஸ

5. ஹையார்க்கு கொழுமத்து

6. உடையார் விரசொளிஸ்வரமு-

7. டைய நாயனார் கொயிலில் ஆ-

8. [ஶ்ரய] லிங்கமாகத் தில்லை நா-

9. யகன் எழுந்தருளுவித்த நாயனார் சொ-

10. க்கனார்க்கு தங்களூரில் ஸபைக்கு

11. பொதுவான நிலமாய் இருபத்தெட்டா-

12. வது வரையும் காடுபாழான நிலத்தில் இவன்

13. தங்கள் பக்கல் விலைகொண்ட நன்செய் நி-

14. லத்துப் பெருங்கரை நாலாம் பற்றுக்குக்

15. கிழக்கு நிலம் ஒன்பதுமாவரையும் இன்னாய

16. ணார்க்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட

17. வெஞ்சனத்துக்கும் திருப்பணிக்கும் உட -

18. லாக இன்னிலத்துக்கு வரும் கடமை அந் -

19. தராயம் ஒட்டச்சு ஆராட்சி எலவை யுகை -

20. வ காணிக்கை காலிங்கராயர் வினியோக -

21. ம் மற்றும் எப்பெர்ப்பட்ட இறைகளும்

22. ஸவ்லுஸஹஸ்ரே இறையிலியாக இருபத் டெ -

23. தான்பதாவது முதல் குடுத்தோம் இப்படி -

24. க்கு இவ்வொலை பிடிபாடாகக் கொண் -

25. டு வந்த்ராதித்யவசு செல்வதாகக் கல்லி -

26. லுஞ் செம்பிலும் வெட்டிக் குடுக்க உ

27. இவை வில்லவதரையனெழுத்து உ யா

28. ண்டு உயகூ ளகூயஅ இவை தொண்டைமா -

29. ன் எழுத்து உ.

கொழுமம் வீரசோழீஸ்வரர் கோயில் முன்புறத் தோற்றம்

சோழீஸ்வரர் கோயில் நந்தி மண்டபம்

← சோழீஸ்வரர் கோயில் மண்டபம் - முகப்புத் தோற்றம்

சோழீஸ்வரர் கோயில் கருவறை மேற்கு - அதிட்டானம் முதல் ஸ்தூபி வரை →



← கொங்குநாட்டுக் கட்டடக் கலைக்கோர் சிறந்த சான்று - அடி முதல் தோள் வரை கருவறை அமைப்பு

கல்வெட்டுடன் கூடிய பூப்பலகை →





← எளிய வேலைப்பாடு கொண்ட கருவறை தேவகோட்டமும், கோமுகமும்

சுண்ணம் மறைத்தாலும் எழில் காட்டும் பூதகணங்கள் →





பாண்டியர் கலைப்பாணியில் அமைந்த அக்னீசுவரர்- ஆலயம்



தல மரமும் அம்மன் சன்னதிப் புறத் தோற்றமும்



சோழீஸ்வரர் கோயில் தாண்டேசுவரர் மண்டபம்

தாண்டேசுவரர் மண்டபம் உட்புறத்தோற்றம் - காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு →





← தாண்டேசுவரர் மண்டபத்தூண்

தாண்டேசுவரர் மண்டப அதிட்டானம் →





சோழீஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வாயிலில் உள்ள நந்தி

ஜேஷ்டா - காலம் கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டு



கல்யாணவரதராஜப் பெருமாள் கோயில் முகப்புத் தோற்றம்



கோட்டை மாரியம்மன் கோயில்



குமணன் துறை

ஐவர் மலை சமணப் பள்ளியின் உட்புறத் தோற்றம்



சமணப் பள்ளியின் உட்புறத் தோற்றம்



சமணப்பள்ளியின் அருகே உள்ள அழகிய சுனை